# வணிகமலர்

## 1976 - 1977

பல் தொழில் நுட்ப நிறுவனம்
யாழ்ப்பாணம்
வணிக மாணவர் மன்றம்



SITHY VINAYAGAR
SARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

TA-11

அ ன் ப ளி ப் பு

தரமுள்ள பனை வெல்லத்திற்கு
எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.



# தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்

அரியாலை

முகாமையாளர்

TA-11

# வணிக மலர்

## (VANIKA MALAR)

### 1976 – 1977

VINAYAGAR
WEST
CHUNNAKAM
LIBRARY

பத்திராதிபர்: செல்வி S. மாலதி

துணைப் பத்திராதிபர்: செல்வன் A. F. மரியசீலன்

பிரதம நிர்வாகி: செல்வன் J. P. பாக்கியராஜா

வெளியீடு:
வணிகமாணவ மன்றம்,
பல்தொழில் நுட்ப நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

*Published by:*
Commerce Student's Association,
Poly Technical Institute,
Jaffna.

# மன்ற கீதம்

இராகம்: பிலஹரி | தாளம்: ஆதி

### பல்லவி

வாழ்க வாழ்க வாழ்கவே
வணிக மன்றம் வானுயர்ந்து
வையம் வாழ்த்தவே.

### அநுபல்லவி

பல் தொழில் நுட்பக் கல்
லூரி வாழ்கவே!
கற்றுத் தொழில் மிக்குயரக்
கலைகள் வாழ்கவே! (வாழ்க)

நியூசிலாந்து தந்த நிதி
அத்திவாரமே!
நிகரிலாது வானளாவி
நிற்கும் கூடமே! (வாழ்க)

ஆயிரத்துத் தொளாயிரத்து
ஐம்பத் தொன்பதில்
அமைந்த தொழில் நுட்பக் கல்
லூரி வாழ்கவே! (வாழ்க)

பழமை பேசும் யாழ் நகரின்
புதுமை காணவே!
பலரும் சேர்ந்து தொழிலின் நுட்பம்
பயிலுஞ் சாலையே! (வாழ்க)

கொக்குவில் எழுந்து விண்ணை
முட்டுஞ் சாலையே!
மிக்குயர்ந்த நுண் கலைகள்
விளங்குஞ் சாலையே! (வாழ்க)

வணிகம் கணக்குப் பதிவியலும்
வளர்க்க வாழ்கவே
வாணிபத்தின் தரமுயர
வையம் வாழ்கவே! (வாழ்க)

சுருக் கெழுத்தில் பிட்மன் முறை
சொல்லும் மார்க்கமும்
சுப்பிரமணியன் கண் சுரு(று)க்கு
பயிலும் மன்றமே! (வாழ்க)

தட்டொடு சுருக் கெழுத்துத்
தரமு மோங்கவே
தமிழினோடு ஆங்கிலமும்
தழைத்து வாழ்கவே! (வாழ்க)

# வணிக மலர்

## 1976 – 1977

### மலர்க் குழு உறுப்பினர்

செல்வன் *J. P.* பாக்கியராஜா (தலைவர்)
,, *M. N* யோகராசா (செயலாளர்)
செல்வி *S.* மாலதி (பத்திராதிபர்)
செல்வன் *A. F.* மரியசீலன் (உப-பத்திராதிபர்)
,, *C.* குலசபாநாதன்
செல்வி *M.* கமலாகினி
செல்வன் *T.* கணேசராஜா

### மலர் ஆலோசனைக் குழு

திரு. *S.* குலசேகரசிங்கம்
,, *S.* இராமலிங்கம்
,, *V. E.* பாக்கியநாதன்
,, *A. D. R.* கோமஸ்
,, *S.* சுந்தரம்பிள்ளை

# பல்தொழில் நுட்ப நிறுவனம் யாழ்ப்பாணம்

## வணிக மாணவ மன்றம் 1976-77

### செயற்குழு உறுப்பினர்கள்

**காப்பாளர்**

திரு. சி. டா. ஜெயசிங்கம் (அதிபர்)

**உப காப்பாளர்கள்**

திரு. சி. இராசேந்திரா (உப-அதிபர்) திரு. V. E பாக்கியநாதன் (ப வ துறை தலைவர்)

**பெரும் பொருளாளர்**

திரு. க. ஜெயரத்தினம் (விரிவுரையாளர்)

**செயற்குழு உறுப்பினர்கள்**

திரு. J. P பாக்கியராஜா (தலைவர்)
,, N வேலாயுதம் (உபதலைவர்)
,, M. N. யோகராசா (செயலாளர்)
,, R. கணேசலிங்கம் (உப செயலாளர்)
,, A. தெய்வேந்திரன் (பொருளாளர்)
,, S. N. இராஜநாயகம் (உப பொருளாளர்)
செல்வி S. மாலதி (பத்திராதிபர்)
திரு. A. F மரியசீலன் (உப பத்திராதிபர்)

**வகுப்புப் பிரதிநிதிகள்**

| | | | |
|---|---|---|---|
| செல்வன் | ச சந்திரயோகன் | செல்வி | இ. பரமேஸ்வரி |
| ,, | யோ. மரியநாயகம் | ,, | இ. வதனராணி |
| ,, | வே. ஞானசூரியர் | ,, | சி. றூபா |
| ,, | த. சண்முககந்தரமூர்த்தி | செல்வன் | த. சிவானந்தன் |
| ,, | க. ஆனந்தராசா | ,, | க. கருணாநிதி |
| ,, | செ. செல்வகுமார் | ,, | சி. குலசபாநாதன் |
| ,, | அ. கேதீஸ்வரன் | ,, | க. பாலசந்திரமூர்த்தி |
| செல்வி | சு. ஸ்ரீரமணி | ,, | த. ராஜ்மோகன் |
| ,, | த. ஞானேஸ்வரி | ,, | மு. விவேகானந்தன் |
| | | ,, | செ. சிறீஇந்திரன் |



## வாக்குமூலம்

புதுமையிற் பூத்துப் பொலிந்திடவென்று
புதுப் பாதை படைத்திட —
மெதுவாகவன்றி மேடு பள்ளம் வென்று
மேதினியில் மேன்மைநிலை சமைத்திடப்
புறப்பட்டிட்ட புதுமைமிகு போராளிகளாம்
வணிக மாணவக் கண்மணிகளுக்கு
இம்மலரை உரித்தாக்குகிறோம்.

மலர்க் குழுவினர்

# RAKUNATHAN IRAN WORKS

## ரகுநாதன் இரும்புத் தொழிற்சாலை

### கிறில் கேற் பூட்டுகள் தயாரிப்பாளர்

உரிமையாளர்:

**மா. ரகுநாதன்**

265, பிறவுண் றோட், — யாழ்ப்பாணம்.

**கிறில் கேற், பூட்டுக்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.**

மு. கு. ஓடர்கள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

---

**கால்நடைத்தீன், கோழித்தீன், முட்டைகள், மருந்துகள்**

சில்லறையாகவும் மொத்தமாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

## கவுரி ஸ்ரோர்ஸ்

ஆஸ்பத்திரி வீதி,
நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

---

புதுவித தையல் வகைகளுக்கு

## நியூ டிசைன்

நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

---

## குமரலக்ஷன் இன்ஸ்ரிரியூட்

**6, 7, 8, N·C·G·E; H·N·C·E·**
**G· C· E· O/L· A/L**

வகுப்புகள் நடைபெறுகின்றது.

அனுபவம் வாய்ந்தவர்களால் போதிக்கப்படுகின்றது.

*Kumaralakshan Institute*

*165, 4th Cross Street,*
*JAFFNA.*

அதிபர்

# நான் கொண்ட சந்தேகம்

யோகங்கள் தனையிங்கு வென்றாகினளோ — தங்கக்
கலசங்கள் பலசேர்ந்து ஒன்றாகினளோ!
ராகங்கள் முந்தும் பண்ணாகினளோ — ஆனந்த
சாகரங்கள் தனிலேயவள் பெண்ணாகினளோ!

மலர் கையில் ஏந்தினளோ — இல்லை
மலர்க்கையில் மலர் ஏந்தினளோ!
மலர் கையில் மலர்ந்ததோ — வதனம்
மலர்கையில் மலர் மலர்ந்ததோ!

ஒளி காட்டும் தீபமோ — இல்லை
ஒளிகூட்டும் விழிப் பாவமோ!
அழியாத இளமைத் தேகமோ — வந்து
அளிமொய்க்க வேண்டிநின்ற தாகமோ!

பூமரத்திற் பதிந்த பனிக்கூட்டமோ — இல்லை
மாமரத்து மறைவினிலே கனித்தோட்டமோ!
வானிலைத்த வண்ணமதி யாட்டமோ — விரைந்து
வானலையில் வந்தயிசை நீட்டமோ!

"வணிக மலர்" எனும் ஏடானதோ — ஏந்திய
அணிகமலம் அதில் ஈடானதோ!
மணித் தமிழிங்கு கருவானதோ — அம்
மணி(க்) கரத்தில் உருவானதோ!

"சுசி. தமிழினி"



**திரு. சி. அருளம்பலம்**
தே. அ. பே. உ. நல்லூர்
அரசியல் அதிகாரி யாழ். மாவட்டம்.


# ஆசியுரை

அநேகமான இளைஞர்கள் தங்களுடைய கல்லூரிப் படிப்பினை முடித்து, உயர் கல்வியைப் பெற்றிட பல்கலைக்கழகம் சென்றிட வாய்ப்பு வசதி அற்றவர்களாக காணப்படுகின்றனர். தமது கல்வியைத் தொடர்ந்து எதிர்கால வாழ்க்கைக்கு தேவையான தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்காக இப்படியான தொழில் நுட்ப நிறுவனங்கள் இயங்குகிறது.

தொழிற் கல்விக்கு முக்கிய இடம் கொடுக்கும் புதிய கல்வித்திட்டத்திற்கமைய இது போன்ற தொழில் நுட்ப நிறுவனங்களில் தொழில்சார் கல்விமுறை புகட்டப் படுவதனுல் வேலைவாய்ப்பை மாணவர்கள் பெறக் கூடியதாக இருக்கிறது. இதனுல் வேலையின்மைப் பிரச்சனை ஓரளவுக்கு தீரக்கூடியதாக உள்ளது.

யாழ் பல் தொழில் நுட்ப நிறுவனத்தில் பலகால இடைவெளியின்பின் ''வணிக மலர்'' சஞ்சிகை வெளியிடுவதையிட்டு நான் மிகவும் மகிழ்கிறேன். இதற்கான ஆக்கவேலையில் ஈடுபட்ட அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். 1976ம் ஆண்டு வணிக மன்றம் தமிழ்மீது பற்றுக் கொண்டதாகவும் சேவை மனப்பான்மை நிறையக் கொண்டதாகவும் காணப்படுவது மிக மகிழ்ச்சிக்குரியதாகும். தொழில் நுட்பக் கல்லூரியில் கற்பவர்கள் ஊக்கத்துடன் கல்வியைக் கற்று திறமையாகச் செயல் பட்டு எதிர்கால வாழ்க்கையை வளமானதாக்கிட வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

வணக்கம்



19-11-76

திரு. சி. அருளம்பலம்

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

# *Message from the Director of Education*


*(Technical Education)*

*Dharmasiri Amarasinghe Esq.*

I am very pleased to send this message to the magazine published by the Commerce Union of the Polytechnical Institute, Jaffna. I have observed that this magazine has been a very convenient medium for the expression of ideas and views regarding the relevant academic subjects of the courses in Commerce and Business Studies which are available at the Polytechnical Institute, Jaffna.

I wish the Commerce Union of the Polytechnical Institute Jaffna success and hope the magazine would be an annual feature.

ஆழ்ந்த சிந்தனையில் எமது அதிபர்



திரு. சீ. டா. ஜெயசிங்கம்

# திரும்பிப் பார்க்கிறேன்.........

நெடுந்தூர நினைவுகளும், அதைத் தொடர்ந்த சிந்தனைகளும் என்னை எங்கெங்கோ இழுத்துச் செல்கின்றன. ஆறு ஆண்டு இடைவெளியின் பின்னர் வணிகத்தின் அடிநாதமாக முழங்கும் மலர்தான் ''வணிக மலர்''. 1976ஆம் ஆண்டு, சகல இன்னல்கள் மத்தியிலும் இந் நிறுவனத்தைப் பொறுத்த வரையில் வணிக ஆண்டென்றே கூற வேண்டும். அவற்றின் ஓரங்களிலே படர்ந்து — தொடர்ந்து வந்த காலச் சுவடுகளின் கோலங்களை இங்கு எழுத முனைகிறேன் — எழுத முடியுமா — இல்லை ஏட்டில்த்தான் அடங்குமா — கடமைகள் தனிமனிதனுக்கும் உண்டு—அவனைச் சூழ்ந்த சமூகத்திற்கும் உண்டு. ஆண்டு தோறும் கலை விழாக் கொண்டாடி கைதட்டுவதில் மட்டும் இலட்சியங்கள் நிறை வேறுமா? முடியாது —

மாணவர்கள் என்ற ரீதியில் எமக்குக் கிடைத்த வாய்ப்புக்களை எல்லாம் பயன்படுத்தி நாமும் முன்னேறி, வருங்கால சந்ததியினருக்கு வேண்டிய வழிவகைகளை ஓரளவுக்காகவாவது கூறி அறிவு, வித்திட வேண்டும். இது கடமையுங்கூட. இதனை நாம் ஒவ்வொருவரும் மறந்துவிடக்கூடாது.

தூற்றுவார் தூற்றட்டும் — போற்றுவர் போற்றட்டும் என்ற நிலையில் மன்றம் தான் எடுத்த முயற்சியில் எதுவித களங்கமுமின்றி பெரும் பணியை மேற்கொண்டது. பல சாதனைகளை வெற்றியுடன் முடித்த பெருமை 1976 வணிக மன்றத்துக்கே உரியது.

★ மாணவர் கல்விப் பிரச்சனை ★ மாணவர்கள் போக்குவரத்துப் பிரச்சனை ★ பஸ்தரிப்பு நிலையம் ★ வகுப்பறைப் பிரச்சனைகள் ★ பரீட்சைகள் மத்தியில் தட்டச்சுப் பொறிப் பிரச்சனைகள் ★ மாலை நேர மாணவருக்கான வெளிச்ச வசதிகள் ★ கன்டீன் வசதிகள் ★ தமிழ் வளர்ச்சிக்கான கலைப் போட்டிகள், விரிவுரைகள், சுற்றுலா இப்படி பல பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டும் — சில சேவைகளைப் பூர்த்திசெய்தும் வந்துள்ளது மன்றம். இதற்காக நாம் நிர்வாகத்தை ஊக்கப்படுத்தியும் செயல்படுத்தியும் வந்துள்ளோம். ஆறு ஆண்டுகளாக வெளிவிட முடியாத நிலையில் மலரை ஆறுமாதங்களில் பிரசவித்திட எமது மன்றம் எத்துணை சிரமங்களை அடைந்துள்ளது என்பது எடுத்தியம்ப முடியாது.

பல சிரமங்கள் — சிக்கல்கள் மத்தியில் ஏனைய மன்றங்கள் முனைந்து செயல் நிறைவேற்றங்களை மேற்கொள்ள முடியாது படுதோல்வி அடைந்ததை மறைக்கவும் முடியாது — மறுக்கவும் முடியாது. கடந்தகால ஏடுகளை கொஞ்சம் புரட்டுங்கள் புரியும். சவால்களுக்கும் — சிக்கல்களுக்கும் — சூழ்ச்சிகளுக்கும் இடையில் அவற்றினை எதிர்த்து துணிந்த சேவையின் மத்தியில் இம் மலரை வெளியிட்டிருக்கின்றோம்.


ஏனைய மன்றங்களுடன் ஒருங்கிணைந்து — ஒத்துழைத்து செயல்பட்டோம். சான்று கூறப்போகின் எமது நிறுவனத்தில் மரம் நாட்டு விழா நடந்தபோது — தொழில் மாணவ மன்றப் பிரதிநிதிகள் எம்முடன் சேர்ந்துழைத்ததைக் கூறலாம். அவசரமாக நிகழ்ந்த தேர்தலில் கூறிய வாக்குறுதிகளை பகைமை பாராட்டாது நிறைவேற்றிட முனைந்து வெற்றி பெற்றிருக்கிறோம் — கடந்த வருட வணிகப் பரீட்சை முடிவுகளின் வெளிப்பாட்டின்போது பாதிக்கப்பட்ட அனேக மாணவர்களுக்குமாக — அனைத் திலங்கை மாணவர்கள் சார்பிலும் கல்வி அமைச்சில் சில வேண்டுகோள்களை விடுத்தோம். 5 பாடங்களில் சித்தி எய்தி ஆறுவது பாடத்தில் சித்தியெய்தத் தவறியவர்களுக்கு நூன சித்தி வழங்க வேண்டும் என்று அமைச்சிற்கு கோரிக்கை விடுத்தோம். 1975ஆம் ஆண்டில் பரீட்சையில் தோன்றி சித்தியெய்தத் தவறிய சகல ஆங்கில, தமிழ் சுருக்கெழுத்தாளர்களுக்கும் நூன சித்தி வழங்கியது குறிப்பிடத்தக்கது. இவ்வண்ணம் கூறி நடவடிக்கை எடுக்கச் செய்த பெருமை 1976-ம் ஆண்டு வணிக மன்றத்துக்கே உரியது.

இன்று நேற்றல்ல 18 ஆண்டுகளுக்கு முன்னர் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியாக மலர்ந்து இன்று பல் தொழில் நுட்ப நிறுவனமாக நிறைந்து நிற்கிறது எமது நிறுவனம். இது தானுக பெற்றுக்கொண்ட நிறைவு. ஆனுலும் மாணவர்கள் கல்லூரிக்களித்த நினைவுகள் என்ன? காட்டிய கைமாறுகள் என்ன? சொல்லுங்கள் பார்க்கலாம்? என்றுமே அதற்குப் பதில் மௌனம்தான்? ஆனல் செய்த சேவைகளை விட மன்றங்கள் அதிகம். தேர்தல் நடக்கின்றன. மன்றங்களின் நிர்வாகிகளினது நிழற் படங்கள் தொங்குகின்றன. வேறென்ன? ஒன்றுமில்லை என்ற நிலை... விளையாட்டு மைதானம் வெறிச்சோடிக் கிடக்கிறது. விளையாட்டுப் பொருட்கள் உளுத்துப் போகின்றன. விளையாட்டுத் துறைக்கு நியமித்தவர்கள் உறங்கிக் கிடக்கிருர்கள். ஆனுல் நிர்வாகம் இவ்வாண்டு கல்லூரியை ஒரு கட்டுக்குள் கொண்டுவந்து சுற்று மதிலையும் கட்டி முடித்தது பெருமைக்குரிய வணிக ஆண்டான 1976லே. தொட்ட பணி இடையில் அறுந்துவிடாது இணைத்துவிட்டோம். இடைவெளி நிரப்பி இருக்கிறேம். தொடர்ந்து செல்லுங்கள் — முயன்று வெல்லுங்கள். நிறைவேறும் சாதனைகளை நாம் ஏற்கின்றேம். எதிர்கால மாணவ மன்றம் தனித்துவமாக ஒன்றிணைந்து இயங்கட்டும். இன்று மலரும் ''வணிக மலர்'' தொழில் நுட்ப நிறுவனத்தில் நாளை தொழில் நுட்ப மலராக மலரட்டும்.

ஆசிகளுடன் அன்புகளுடன் உங்கள் சேவையிலுள்ள


**J. P. பாக்கியராஜா**
(தலைவர்)

## உப அதிபர்



திரு. சி. இராஜேந்திரா

## வணிகத்துறைத் தலைவர்




திரு. அ. இரத்தினம்
(புலமைப் பரிசில் பெற்று பிரான்சு சென்றுள்ளார்)

## பதில். வணிகத்துறைத் தலைவர்




திரு வே. இ. பாக்கியநாதன்

## பெரும் பொருளாளர்



திரு. க. ஜெயரத்தினம்

## சுருக்கெழுத்துத் துறையில் வெள்ளி விழாக் கண்ட போதனாசிரியர்



திரு. சி. இராமலிங்கம்

## சுவடுகள்..........

மன்றங்கள் எதற்கு? சங்கங்கள் எதற்கு?

இவைகள் சேவை செய்வதற்கென்றே அமைக்கப்படுகின்றதென்றால் அது எதைச் செய்ய வேண்டும். வெறும் விழா மட்டும் செய்வதுதானா? விழாவிலே மாலை போடுவதுதானா? வெறும் பதவிக்கு பார்வையாளராக இருப்பதற்காகத்தானா?

ஏன் இந்தக் கேள்வியை எழுப்புகிறேன் என்றால், கடந்தகால வரலாற்றில் அமைக்கப்பட்டு அற்றுப்போன வணிகமாணவ மன்றங்களின் நடவடிக்கை அற்ற நிலைமையே இதற்குக் காரணம். கடந்தகால வரலாற்றில் அமைக்கப்பட்டு அற்றுப் போன வணிக மன்றங்களில் சுவடுகளைத் தேடி அலுத்த நிலையில் நான் இக்கேள்வி யைக் கேட்பதிற் தவறில்லைத்தானே? பெயரளவில் மட்டும் மன்றமாக இருந்தது ஒருவருட காலத்துக்கு, என்பதற்குமட்டும் சான்றுகள் என் முன் தோன்றின.

கடந்த கால மாணவர் மன்றங்கள், குறிப்பாக வணிகமாணவர் மன்றங்கள் பக்கசார்புக் கொள்கையால் சிதறுண்ட நிலையில்—அறிவற்ற செயல் வழியில்—ஸ்திர மற்ற நிலைமையில் ஒற்றுமையற்றதாக இருந்தது.

ஒரு சிலருக்காகவே — ஒரு சிலரின் நன்மைக்காகவே — ஒரு சில நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே மாணவர்கள், கூறுபோடப்பட்டனர். கடந்த கால— நடந்தகால — தூங்கிக் கிடந்தகால சரித்திரத்தை ஏன் புரட்டுகிறேன் என்று நீங்கள் கேட்கும் கேள்வி எனக்குப் புரிகிறது. நடந்து வந்த பாதையில், வணிகத்துறை படர்ந்து வந்த பாதையில் சற்று எம் கவனத்தைத் திருப்புதல் நல்லதும் இயல்பும் தானே. ஆனாலும் கடந்தகால ஏடுகளை எவ்வளவு வேகத்துடன் புரட்டினேனோ அதே வேகத்தில் மூடிவிட்டேன்.

1976 வணிக மாணவர் மன்றமும் வழமைப்பிரகாரம் உருவாக்கப்பட்டது. தேர்தலுக்கு முன் அணியற்ற நிலையில், இருந்து வெற்றி பெற்றவர்கள் மன்ற அமைப்பில் அணிசேர்ந்தார்கள். எந்தவொரு தனிமனித ஆதிக்கமும் மன்ற சுயா திக்கத்தைக் கட்டுப்படுத்தவில்லை. கட்டுப்படுத்த இடம் கொடுக்கவுமில்லை. மன்ற நிர்வாக சபைப் பிரதிநிதிகள் ஒருங்கு சேர்ந்து காணப்பட்டதினால் பல நல்ல திட்டங்களை எம்மால் மேற்கொள்ளக்கூடியதாயிருந்தது

ஆசிரியர்கள் மாணவர்கள் விடயத்தில் தலையிடுகிறார்கள் என்று வழக்கமாக இங்கு பேசப்படுகின்ற போதிலும் இந்த வணிக மன்ற ஆண்டைப் பொறுத்தவரை யில் அப்படி ஒரு இழிவு நிலை இருந்ததாக கூறமுடியவில்லை. தற்செயலாக அப்படி இருந்தாலும் அதற்கு ஒரு சில மாணவர்களின் அறிவற்ற போக்கே காரணமாக இருக்கும் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

வணிகத்துறையில் உள்ள பிரச்சனைகள், கற்றுத்தேறிய மாணவர்களின் எதிர்கால நலன்கள், என்பவற்றை எமது மன்றம் நன்கு ஊன்றிக் கவனித்துள்ளது. இதற்காக எமது மன்ற பிரதிநிதிகள் சிலர் பிரதம கல்வியதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை மேற்கொண்டார்கள். குறிப்பாக கடந்த வருடப் பரீட்சைகள் சம்பந்தமாகவே அவர்கள் கரிசனை கொண்டிருந்தனர். என். சி. பி. எஸ். பரீட்சையில் ஐந்து பாடங் களில் சித்தியெய்தியும் துர் அதிஷ்டவசமாக ஒரு பாடத்தில் சித்தியெய்தத் தவறிய வர்கள் நன்கு பாதிப்படைந்துள்ளார்கள் என்று மன்றப் பிரதிநிதிகள் அதிகாரி களுக்கு சுட்டிக்காட்டினார்கள். அதற்கு கல்வி இலாகா தக்க நடவடிக்கை எடுப்ப தாகவும் உறுதி கூறி நடவடிக்கையும் எடுத்தது. சுருக்கெழுத்தாளர்களுக்கு நூன சித்தி வழங்கியது எமது மன்றத்தின் குரலுக்கான எதிரொலிப்பாகும்.

மன்றத்தை நாம் மிகச் சிறந்த முறையில் நடத்த முற்பட்டு வெற்றியும் பெற்றுள்ளோம். பல இக்கட்டான நிலைமைகள் எமைச் சூழ்ந்தன. இக்கட்டான சந்திப்புகளை எம்மில் ஊந்தி வந்த சிந்தனைகளால் உந்தித் தள்ளிவிட்டோம். மாண வர்களின் நலன் கருதியே எத்திட்டத்தையும் மேற்கொண்டோம்.

வழமைப் பிரகாரம் இருந்த சந்தாக் கட்டணமான கூடிய தொகையை (ரூபா 5/-) நாம் மிகவும் குறைத்து மூன்று ரூபாவாக்கினோம். இதனால் மாணவர் மீது நிதி

சம்பந்தமான சுமையேற்றலைக் குறைத்தோம். முக்கியமாக எந்த ஒரு விரிவுரையாளரிடமும் மன்றத்தின் நலனுக்கு இம்முறை பணம் வசூலிக்கவில்லை. சாதனைச் செலவுகள் யாவும் மாணவர்களுடையது என்பதைப் பெருமைப்படக் கூறுகிறோம்.

எந்தவொரு இயக்கமும் திறம்பட செயலாற்றவேண்டுமாயின் நிதி அவசியம் தேவை. இந்தவகையில் எமது மன்றத்திற்கு நிதியினைச் சேர்த்திட பல திட்டங்களை உருவாக்கி அதைச் செயல்படவும் செய்தோம். தலைவரின் ஆலோசனையின் பெயரில் ''அதிஷ்ட லாபச் சீட்டு'' மூலம் நிதியினை ஓரளவுக்குச் சேர்த்தோம். இதற்காக சகல மாணவர்களும் ஒத்துழைப்பை மிகச் சிறந்த முறையில் நல்கினர். மற்றும் சந்தாப்பண மூலமும் நிதியினை நாம் பெற முடிந்தது. இந்த வகையில் சகல வகுப்புப் பிரதிநிதிகளும் எமக்கு சிறந்த ஒத்துழைப்பை நல்கியபோதிலும், குறிப்பிடக்கூடிய வகையில் என். சி. பி. எஸ். 'சீ' (1-ம் வருடம்) வகுப்புப் பிரதிநிதியான செ. செல்வகுமார் மாலை முதலாம் வருட சந்தை... வகுப்புப் பிரதிநிதியான ச. சிவானந்தன் ஆகியோர் தமது பணியை எமது மன்றத்திற்கு நல்கினார்கள்.

எமது மன்றத்தின் பெரும் பொருளாளர் திரு. க. ஜெயரத்தினம் அவர்கள் எமக்கு சகல சுதந்திரத்தையும் வழங்கி எம்மைச் செயல்படவிட்டார். மாணவர்கள் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையை இச்செயல் வலியுறுத்தியது. ஆலோசனைகளை அடிக்கடி வழங்கினார்.

பிரசுர சாதனை என்பது ஓர் பிரசவ வேதனை. ''வணிக மலர்'' எனும் வணிகச் சஞ்சிகையை வெளியிட முனைந்த எமக்குக் கிடைத்த அனுபவத்திலிருந்துதான் இதைக் கூறுகிறேன். சஞ்சிகை வெளியிடுவதற்காக நமது தலைவர் விளம்பரத்திற்காக துவிச்சக்கர வண்டியில் அலைந்து — அவரது துவிச்சக்கர வண்டிக்கு மூன்றுமுறை டயர் மாற்ற வேண்டியதாயிற்று. இது அப்பட்டமான உண்மை. தலைவருக்கான சேவையை அவர் சிறப்பாக மேற்கொண்டார்.

''வணிக மலர்'' சஞ்சிகைக்காக அமைக்கப்பட்ட சஞ்சிகை ஆலோசனைக் குழுவினர் எமக்கு வேண்டிய சந்தர்ப்பங்களில் தங்கள் சிறந்த ஆலோசனைகளை வழங்கினர்.

வணிகச் சஞ்சிகையில் இடம் பெறவேண்டிய ஆக்கங்கள் எவ்வகையில் இருக்க வேண்டும் என்ற வினா எழுந்த வேளையில் திறமைக்கு முதலிடம் கொடுத்து நாம் செயல்பட்டோம்.

எமது மன்றம் நடத்திய கலைப்போட்டிகள் நமது பல்தொழில் நுட்ப நிறுவன மாணவர்கள் அனைவருக்குமாக அமைந்தது. இதனால் நாம் திறமைக்கு வரம்புபோட எத்தனிக்கவில்லை. இதில் சகல துறையினரும் பரிசில்களை தட்டிக்கொண்டது குறிப்பிடத் தக்கது.

வணிக மாணவர்கள் அனைவருக்குமான ஓர் சுற்றுலாவை வணிக மாணவர் மன்றம் மேற்கொண்டது. மாணவர்களின் நட்புறவுக்கு இது வழி சமைத்தது.

இங்கு நடந்த தட்டச்சுப் பொதுப் பரீட்சைக்கு நமது பழைய—புதிய மாணவர்களின் நலன் கருதி அவர்களுக்காக முன்னின்று தட்டச்சுப் பொறிகளைச் செம்மையாக்கி கொடுத்து உதவியது எமது மன்றம். இது மாணவரின் வசதியீனங்களையும் செலவையும் குறைக்க உதவியது.

எமது மன்றத்தின் வேண்டுகோளுக்கிணங்க மில்க் வைற் ஸ்தாபனத்தார் ஒரு பஸ்தரிப்பு நிலையத்தை நிறுவன முன்றலில் அமைத்துத் தந்தனர். மாணவர்களுக்கு இது பெரும் வசதியை ஏற்படுத்தியுள்ளது.

விழிமீது ஒளியாகி என்றும் அழியாத எழிலான மொழியான தமிழ்ப் பொழில் தனிலே கலை விழா எடுத்து — நிலைகொண்ட புகழாரம் சூடி — அணி மிகுந்த பணிகளைச் செய்து முடித்து — வரலாற்றுப் பாதையிலே சுவடுகள் பதிய நடக்கின்றோம்.

இந்த நிறுவனத்தில் வணிகத் துறையில் கற்றுத்தேறிய அனைவரும் — எதிர்காலத்தில் கற்றுத் தேறப்போகும் அனைவரும் மிகவும் ஒளிமயமான வாழ்க்கையமைப்பைப் பெற்று சிறப்புற இந்த மன்றத்தின் செயலாளர் என்ற முறையில் வாழ்த்துகிறேன்.

வணக்கம்.

மு. நா. யோகராசா
(செயலாளர்)

# உள்ளே ஒரு உலா..................


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கைத்தொழிற் பேட்டைகள் ... | 9 |
| 2. | தொழிலாளரும் தொழிலுறவும் ... | 11 |
| 3. | சமூகப் பண்பாடும் சமூக நியமங்களும் ... | 15 |
| 4. | இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு-முகாமையின் பங்கு ... | 19 |
| 5. | கணக்கியல் இரட்டைப் பதிவுத் தத்துவமும் நடைமுறையும் ... | 24 |
| 6. | ஈழத்து ஆக்க இலக்கியத் துறைகளிற் பெண்களின் பங்கு ... | 29 |
| 7. | சென்மதி நிலுவையும் இலங்கையின் சென்மதி நிலுவையின்-போக்கும் ... | 39 |
| 8. | இலாபப் பகிர்வுத் திட்டம் ... | 45 |
| 9. | உணர்வில் எழுதிய சில ... | 47 |
| 10. | இலக்கியத்தில் வணிகம் ... | 48 |
| 11. | ஏடெடுத்து நான் கவிதை எழுத வேண்டும் ... | 50 |
| 12. | செவ்வாய்த்தோஷம் ... | 51 |
| 13. | இலங்கையின் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் ஒரு-கண்ணோட்டம் ... | 57 |
| 14. | இந்து சமுத்திரம் சமாதானப் பிரதேசமாகப் பிரகடனப்-படுத்தல் வேண்டும் ... | 62 |
| 15. | பெறுமானத் தேய்வு ... | 64 |
| 16. | மனிதனின் சிறப்பிற்கு உறுதுணை சூழ்நிலையா? இலட்சியமா? ... | 67 |
| 17. | கமத்தொழிற் காப்புறுதித் திட்டம் ... | 71 |
| 18. | வரவேண்டும் அவன் வாழ்க்கையில் வசந்தம் ... | 74 |
| 19. | *Indexation A Useful Application* ... | 78 |
| 20. | *What Women heve Done Towards the Progress of Mankind* ... | 83 |
| 21. | மத்திய வங்கியினது பணிகள் ... | 85 |
| 22. | வெளிநாட்டு உதவியும் இலங்கையும் ... | 89 |
| 23. | *The Place of Commerce Education in Society* ... | 93 |

*Space Donated by:*

# NORTHERN INDUSTRIES

TYRE RETREADERS

112, Stanley Road,
JAFFNA.

*T'Phone: 7158* *T'Grams: "NORTHEND"*

*Space Donated by:*

*Leading Embovium for Quality Fancy Goods.*

**FANCY HOUSE**

*68, Grand Bazaar,*
*JAFFNA.*

*Space Donated by:*

**SHAKTHIYA HARDWARE STORES**

*86, Bankshall Street,*
*Small Bazaar,*
*JAFFNA.*

அன்பளிப்பு

பாண், கேக், பிஸ்கட்
போன்ற உப உணவுகளுக்கு
நாடுங்கள்

**ஹூட்லண்ட்ஸ் பேக்கரி**

கல்வியங்காடு.

# கைத்தொழிற் பேட்டைகள்

இ. இலங்காதுரை B. Com. நிறுவன விரிவுரையாளர்

SITHY VINAYAGAR LIBRARY EARLALAI WEST CHUNNAKAM

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களிற் கைத்தொழிற் பேட்டை அமைப்புக்கு மிகுந்தமுக்கியத்துவம்அளிக்கப்படுகின்றது. இவ்வமைப்பின் ஊடாக அரசாங்கம், சிறு கைத் தொழிலாளர்கள் தமது குறைந்த மூலதனத்துடன் கைத்தொழில்களை ஆரம்பிக்கக் கூடியவாறு அவர்களுக்கு வேண்டிய நிலம், கட்டிடம், மின்சாரம், நீர், போன்ற ஆரம்ப வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. எனவே கைத் தொழிற் பேட்டை அமைப்பு என்பது அதிகப்பற்ருக பின்தங்கிய கிராமப் பகுதிகளில் சிறு கைத்தொழிலின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்காக கைத்தொழிலாளருக்கு வேண்டிய ஆரம்ப வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாக கருதப்படுகின்றது. அரசாங்கம் அதிகப்பற்ருக கிராமப் புறங்களில் குறிக்கப்பட்ட இடங்களைத் தேர்ந்தெடுத்து ஒரே அமைப்பில் பல தரப்பட்ட கைத்தொழில்களை ஆரம்பிக்கக் கூடிய வசதிகளை கைத்தொழிற் பேட்டை அமைப்பின் ஊடாக ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

கைத்தொழிற் பேட்டை அமைப்பு உலகின் அதிகப்பற்ருன நாடுகளில் கைத் தொழில்களின் வளர்ச்சிக்கு பெருமளவுக்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. இவ்வமைப்பு கடந்த 70 வருட காலமாக பலதரப்பட்ட நாடுகளில் அமுல் செய்யப்பட்டு வருகின்றது. ஐரோப்பா, அமெரிக்கா, ஆபிரிக்கா, இந்தியா, மேற்கிந்திய தீவுகள் ஆகிய இடங்களில் பல வருட காலமாக அமுல் செய்யப்பட்டு அந்நாடுகளின் சிறு கைத்தொழில்களின் வளர்ச்சிக்கு பெரும் அளவுக்கு உதவியிருக்கின்றன. இந்தியா கடந்த பல வருட காலமாக கைத்தொழிற் பேட்டை அமைப்பின் ஊடாக பெருமளவு பலாபலனை அனுபவிக்கக் கூடியதாக இருக்கின்றது. இந்தியாவில் முதன் முதலாக 1952ம் ஆண்டு பூனு என்னும் இடத்தில் கைத்தொழிற் பேட்டை அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. ஆனல் 56ம் ஆண்டு தொடக்கம் 61ம் ஆண்டு காலம் வரை இந்திய அரசாங்கத்தினர் அமுல் செய்யப்பட்ட ஐந்தாண்டுத் திட்டத்திலேயே கைத்தொழிற் பேட்டை அமைப்புக்கு தகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இத் திட்டத்தின் ஊடாக ஏறத்தாழ 111 மில்லியன் ரூபா கைத் தொழிற் பேட்டை அமைப்புக்காக ஒதுக்கப்பட்டு ஏறத்தாழ 110 கைத்தொழிற் பேட்டைகள் ஆரம்பிக்கப்பட்டன. தமிழ் நாடு, உத்தரப் பிரதேசம், கேரளம், வங்காளம் ஆகிய இடங்களில் கைற்தொழிற் பேட்டை அமைப்பு இத்தியாவினல் பெரும் அளவுக்கு அமுல் செய்யப்பட்டது. 1961ம் ஆண்டு தொடக்கம் 1966ம் ஆண்டு காலம் வரைக்கும், இந்தியாவினல் அமுல் செய்யப்பட்ட ஐந்தாண்டுத் திட்டத்தில் 225 மில்லியன் ரூபா கைத்தொழிற் பேட்டை அமைப்புக்காக செலவு செய்யப்பட்டு ஏறத்தாழ 300 புதிய கைத்தொழிற் பேட்டைகள் நாடு பூராவும் தாபிக்கப்பட்டன.

அதிகப்பற்ருக சிறு கைத்தொழிலின் வளர்ச்சியை உற்சாகப்படுத்துவதற்கு கைத் தொழிற் பேட்டை அமைப்பு கிராமப் புறங்களில் அரசாங்கத்தினுல் அமுல் செய்யப்படுகின்றது. இலங்கை அரசாங்கமும் அண்மைக் காலத்தில் சிறு கைத் தொழில்களின் வளர்ச்சியில் கூடிய அக்கறை செலுத்துகின்ற காரணத்தினுல் கைத்தொழிற்பேட்டை அமைப்பில் தகுந்த அக்கறை செலுத்தி வருகின்றது. இலங்கை அரசாங்கத்துன் வரைவிலக்கணத்தின் பிரகாரம் நிலம் கட்டிடம் தவிர்ந்த ஏனைய நிலையான சொத்துக்களில் 5 இலட்சம் ரூபாவுக்கு அதிகரிக்காத மூலதனத்தை ஈடுசெய்கின்ற சகல கைத்தொழில்களும் சிறு கைத்தொழில்களாகக் கருதப்படுகின்றன. இத்தகைய கைத்தொழில்களின் வளர்ச்சியை உற்சாகப்படுத்துவதற்காக அரசாங்கம் கைத்தொழிற் பேட்டை அமைப்பில் தகுந்த அக்கறை செலுத்தி வருகின்றது. அதிகப்பற்ருக கைத்தொழிற் பேட்டைகள் கிராமப்புறங்களில் அமுல் செய்யப்படுகின்ற காரணத்தினுல் பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கி இருக்கும் இப்பகுதிகளின் நிலைமைகளை இவ்வமைப்புக்களின் ஊடாக மேம்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. மேலும் சிறு கைத்

தொழில்களின் வளர்ச்சியை கிராமப்புறங் களில் கைத்தொழிற் பேட்டைகளின் ஊடாக துரிதப்படுத்துவதனுல் கிராமப் புறங்களில் கூடிய வேலைவாய்ப்பு ஏற் படுத்தி கிராம மக்கள் மத்தியில் நிலவும் வேலைப்பற்ருக் குறைப் பிரச்சினையைக் குறைத்து அவர்களுடைய வருமானத்தை யும் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத் தக் கூடியதாக இருக்கின்றது. அதிகப்பற் ருக பெரும் கைத்தொழில்கள் நகரப்புறங் களில் ஆரம்பிக்கப் படுகின்றமையால் பெரும் அளவு கிராம மக்கள் நகரப்புறங் களுக்கு வேலை வாய்ப்புக்களைத் தேடிச் செல்வதனுல் அப்பகுதிகளில் சன நெருக் கடிப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. கைத் தொழிற் பேட்டை அமைப்பின் ஊடாக கிராமப்புறங்களில் சிறு கைத்தொழில் வளர்ச்சியை உற்சாகப்படுத்தினுல் கிரா மப்புற மக்கள் நகரப்புறங்களுக்கு வேலை வாய்ப்புக்களைத் தேடிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது இதன் விளைவாக நகரப்புறங்களில் நிலவும் சனநெருக்கடிப் பிரச்சினையை பெரும் அளவுக்குக் குறைக் கக் கூடியதாக இருக்கும் கைத்தொழிற் பேட்டைகள் கைத்தொழிற் பெரும் தோட் டங்கள் எனவும் அழைக்கப்படும்.

இலங்கையில் கைத்தொழிற் பேட்டை அமைப்பு ஆரம்பிக்கப்படல வேண்டும் என்ற உத்தேசம் 1936ம் ஆண்டு தொட்டு இருந்து வந்த பொழுதும் 1958ம் ஆண் டுக்குப் பின்பே இவ்வமைப்பு படிப்படியாக அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. முதன்முதலாக இலங்கையில் கைத்தொ ழிற் பேட்டை அமைப்பு 1962ம் ஆண்டில் யாஎலவில் உள்ள எக்கல என்ற இடத் தில் ஆரம்பிக்கப்பட்டு 1966ம் ஆண்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. எக்க லவில் உள்ள இக் கைத்தொழிற் பேட் டையில் 62 ஏக்கர் நிலம் ஈடுபடுத்தப்பட் டுள்ளது. 43 கைத்தொழில்களை ஆரம்பிக் கக் கூடியவாறு 43 தொழிற்சாலைகள் தாபிக்கப்பட்டு இருக்கின்றன. இவை யாவும் இன்று இயங்கி வருகின்றன. இவற்றில் ஒன்று இலங்கை தோற் பொருட் கூட்டுத்தாபனத்துக்கு உடமை யானதாகவும் மற்றைய தொன்று இலங் கை தேயிலை ஆராய்ச்சிக் கழகத்துக்கு உடமையானதாகவும் இயங்கி வருகின்றது. இலங்கையின் மற்றையதொரு கைத் தொழிற் பேட்டை கண்டியில் உள்ள பல் லேகலே என்ற இடத்தில் தாபிக்கப்பட் டுள்ளது. இதில் 34 கைத்தொழில்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் ஒன்று இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு உட மையாகவும் மற்றைய தொன்று பெரும் தோட்டத் தொழிற்துறை உடமையான தாகவும் இயங்கி வருகின்றது. யாழ்ப்பா ணத்தில் உள்ள அச்சுவேலியில் ஆரம்பிக் கப்பட்டிருக்கும் கைத்தொழிற் பேட்டை யில் 36 கைத்தொழில்கள் இயங்குவதற் கான வசதி அளிக்கப்பட்டுள்ளது. காலி யில் உள்ள பூச என்னும் இடத்தில் தாபிக் கப்பட்ட கைத்தொழிற் பேட்டையில் 20 கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு இடவசதி அளிக்கப்பட்டுள்ளது. 1975ம் ஆண்டில் கெக்கராவையிலும் ஓர் கைத் தொழிற் பேட்டை ஆரம்ப நடவடிக்கை கள் அரசாங்கத்தினுல் மேற்கொள்ளப் பட்டன. இலங்கையின் கைத்தொழிற் பேட்டைகளின் வளர்ச்சிப் பொறுப்பு 1960ம் ஆண்டில் இருந்து 1970ம் ஆண்டு வரை கைத்தொழிற் பேட்டைக் கூட்டுத் தாபனத்தினுல் மேற்கொள்ளப்பட்டு வந் தது. 1970ம் ஆண்டில் இருந்து இப் பொறுப்பு அரசாங்கத்தினுல் கைத்தொ ழில் அபிவிருத்திச் சபையினிடம் ஒப் படைக்கப்பட்டது. இச் சபை தற்பொழுது சிறு கைத்தொழில்களின் வளர்ச்சியிலும் அவற்றுக்காக கைத்தொழிற் பேட்டை அமைப்புக்களை ஏற்படுத்துவதற்கும் தகுந்த அக்கறை காட்டி வருகின்றது.

அன்பளிப்பு

AMBAL STORES

அம்பாள் ஸ்ரோர்ஸ்

பலசரக்கு மாளிகை

ஸ்ரேசன் ரோட்
ஊரெழு வடக்கு,
சுன்ளுகம்.

உரிமையாளர்
வை. ரெங்கநாதன்

# தொழிலாளரும் தொழில் உறவும்

**மா. சின்னத்தம்பி *B. A. (Econ.) B. Phil. (Hons)***

கைத்தொழிற்துறை, வர்த்தகத்துறை என்பன வளர்ச்சிபெறும் சமூகங்களில் அவற்றுடன் இணைந்து வளர்ச்சிபெறும் முக்கிய பிரச்சினை தொழிலாளர் உறவு தொடர்பானவையாகும். மூலதனவுடைமையற்ற முறையில் தமது உடலுழைப்பை நகர்ப்புற தொழிற்துறைகளுக்கு கூலிக்கு விற்கும் உழைப்பாளர் படையே தொழிலாளர் எனப்படுகின்றனர். இன்று பரவலாக விவசாயத்துறை விவசாயிகள், குடியானவர் தவிர்ந்த தனியார்துறை, அரசாங்கதுறை என்பவற்றைச் சார்ந்த உற்பத்தி, வர்த்தக நிறுவனங்களின் ஊழியர் அனைவருமே தொழிலாளர் என்ற பிரிவில் அடக்கப்படுகின்றனர். இவர்களது பங்கு தொழிற்துறையபிவிருத்தியின் மையக் கல்லாக விளங்குகிறது.

தொழிலுறவுகளை சீராக வைத்திருப்பதே இன்றைய தொழிற்றுறையின் தலையான முயற்சியாகவுள்ளது. தொழிலாளர் தொழில் வழங்குவோனின் எல்லையற்ற நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டிருப்பது இயற்கையானது, சரியானது என்ற பழம் கருத்து இன்று ஏற்கப்படுவதில்லை. தொழில் வழங்குவோன் கொண்டுள்ள, அல்லது அதிலும் பார்க்க கூடுதலான உரிமை தமக்கும் உண்டென தொழிலாளர் கருதுகின்ற காலமாக இன்றைய நிலை மாற்றம் பெற்றிருப்பதால் தொழிலாளர் உறவுகளைச் சீராகப் பேணுதல் என்பது முக்கியத்துவம் கூடியதாக காணப்படுகிறது. கைத்தொழிற் சமூகங்களில் அதிகரித்துவரும் வேலை நிறுத்தங்கள், தொழிலாளர் குழப்பங்கள், கதவடைப்புக்கள், என்பன தொழிலாளர் அதிருப்தியை வெளிப்படுத்துகின்றன. இவற்றுக்குரிய காரணங்களைக் கண்டு கொள்ளுதலும், அவற்றுக்குரிய தீர்வு முறைகளைத் தேடுதலும் முக்கியமானவையாகப் பரிணமிக்கின்றன. நிறுவனங்களின் தொழிலின் நிருவாகப் பகுதியினரும், தொழிற்றிணைக்களமும், தொழிற்சங்கங்களும், தொழில் மன்றுகளும் இவ்விடயத்தில் ஆழ்ந்த அக்கறை செலுத்துகின்றன.

இலங்கையில் முழுமைபெற்ற கைத்தொழிற்துறை வளர்ச்சியுருமையினுல் தொழிலாளர்கள் பெருந்தோட்டத்துறையிலேயே காணப்படுகின்றனர். அத்துறையில் 1960-ல் 123 வேலைநிறுத்தங்கள் ஏற்பட்டிருந்தன. இதனுல் இழந்த ஆள் வேலை நாட்கள் 2, 59, 948 ஆகக் காணப்பட்டன. இதே ஆண்டில் பிறதுறைகளில் இழந்த ஆள் வேலை நாட்கள் 15,139 ஆகவும் காணப்பட்டன. ஆனுல் 1966-ல் அதிகூடுதலான வேலை நாட்களின் இழப்பு காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டில் 164 வேலைநிறுத்தங்களினுல் இழந்த ஆள் வேலை நாட்கள் 4, 51, 615 ஆகும். வேலைநிறுத்தங்களிற் பங்கு கொண்டோரின் தொகையும் இவ்வாண்டில் மிக அதிகமாகும். பெருந்தோட்டத்துறையிலும், பிறதுறைகளிலும் மொத்தம் 1, 42, 851 பேர் வேலைநிறுத்தத்திலீடுபட்டுள்ளனர். இத்தனை பெரியளவான வேலைநிறுத்தங்களும், மனித உழைப்பின் விரயமும் மிக இலகுவில் ஈடுசெய்யக் கூடியதல்ல. இதற்குரிய அடிப்படைச் சிக்கல்களை நீக்குவதே தொழிலுறவுகளை சீர்செய்தற்குரிய நடவடிக்கையாகும்.

தொழிற்துறைகளில் தொழிலாளர்-நிர்வாக-முகாமை பகுதியினரிடையிலான உறவு முறைகள் சீரற்றுப் போவதே இதற்குக் காரணமாகும். இது பல்வேறு காரணங்களினுல் உருவாவதாகும். கூலிக்கு உழைப்பை விற்பதே தொழிலாளர் பிரதான நடவடிக்கையாக்கப்பட்டிருப்பதால் வேதன முறைகளில் தொழிலாளர் அதிக கவனம் செலுத்தவேண்டியுள்ளது. விவசாயத்துறையினர் போன்று மெய்வருமானமாக எதுவும் பெறமுடியாதவராகவுமிருப்பதால் பணவருமான அறைகளில்-கூலி நிர்ணயமுறைகளில் - அதிக அக்கறை செலுத்துகின்றனர். கூலி நிர்ணயம், கூலியுயர்வுகள், சேமலாபநிதிக் கொடுப்பனவு ஒழுங்குகள், ஓய்வூதியமுறைகள், வருடாந்த இலாப ஈவு வழங்குதல் ஆகிய நடவடிக்கைகள் ஒழுங்கற்றனவாக்கப்படும் போது தொழிலாளர் உறவுகள் சீரற்றுப் போகின்றன. இலங்கையில் கூலி வீதங்கள் எத்துணை தூரம் சமனற்றுக் காணப்படுகின்றன என்பதை 1952-ம் ஆண்டை

# நியூ டிகாஸ் கபே

திருநெல்வேலி

சிற்றுண்டிகள்
கேக் வகைகள்
குளிர்பானங்கள
பழவகைகள்
ஸ்பெஷல் பீடா

மறந்து விடாதீர்கள் நினைவு படுத்துங்கள்

**"நியூ டிகாஸ் கபே"**

திருநெல்வேலிச் சந்தி,

**யாழ்ப்பாணம்.**

**Leyden Industries Ltd**

*With the Best Compliments*
*From*

## *Leyden Industries Ltd*

MANUFACTURERS OF BANIANS, SOCKS AND READYMADE GARMENTS.

7, Hospital Road, **JAFFNA.**

*Tel No:* **279**

அடியாண்டாகக் கொண்டு கணிக்கப்பட்ட கூலிவிகிதக் குறிகாட்டிகள் காட்டுகின்றன. கைத்தொழில், வர்த்தகத் தொழிலாளர்களின் குறைந்த அளவுக் கூலிவிகிதக் குறிகாட்டிகளுக்கும் உண்மைக் கூலிவிகிதக் குறிகாட்டிகளுக்குமிடையில் எப்போதும் சமமின்மை காணப்பட்டதுடன், அவற்றிடையிலான வேறுபாடும் தொடர்ந்து அதிகரித்தும் வந்தன. 1955-ல் குறைந்தளவுக் கூலி விகிதக் குறிகாட்டி 101·4ஆகக் காணப்பட உண்மைக் கூலி விகிதக் குறிகாட்டி 101ஆக மாத்திரம் காணப்பட்டது. 1975-ல் இவை முறையே 138·7 ஆகவும் 101·4 ஆகவும் காணப்பட்டன. இத்தகைய சமமின்மை பிறதுறைகளிலும் காணப்பட்டன. இவ்விரண்டு கூலி விகிதக் குறிகாட்டிகளுக்குமிடையிலான வேறுபாடு குறிப்பிட்ட இருபது வருடகால இடைவெளியில் கூலி நிர்ணய சபை வாய்ந்த தொழில்களின் தொழிலாளர்களிடையே முறையே 1955-ல் 105·9ஆகவும் 105·4ஆகவுமிருந்து 1975-ல் 244·5ஆகவும் 123·3ஆகவும் காணப்பட்டது. இவ்வாறான உண்மைக் கூலி மட்டங்கள் குறைவாக இருப்பதே தொழிலாளர் அதிருப்திக்குரிய காரணமாக இருந்துள்ளது. கூலியுயர்வுக் கோரிக்கைகளே தொழில்வழங்குவோரைப் பொறுத்த முக்கிய பிரச்சினையாக காணப்படுகிறது. இதனை நீக்குதற்குரிய முயற்சிகள் அதிகரிக்கப்படுதல் மிக அவசியமாகும். அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்துறை சார்ந்தோருக்கு ஓய்வூதிய முறை மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனல் கைத்தொழிற் தனியார்துறைகளில் இலாப ஈவுகளை வழங்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தலும், இயன்றவரை ஏற்றுமதி விலைகளைப் பாதிக்காத வகையில் கூலி மட்டங்களை வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் மாற்றங்களுக்கேற்ப அதிகரிப்பதிலும் கவனம் செலுத்த வேண்டியுளது. பெருந்தோட்டத் துறையில் மிகப் பெரிய தொழிற்சங்கங்களிருக்கின்றபோது கூலியுயர்வு தொடர்பான தெளிவான பொதுக் கொள்கைகளை அவை நடைமுறைப் படுத்தாதிருப்பது பிரச்சினையாகவுளது. பெருந்தோட்டத்துறை கைத்தொழிற்துறைக்குரிய தன்மைகளைக் கொண்டுள்ள அதேவேளை விவசாயத்துறைக்குரிய நிரம்பல் நெகிழ்ச்சிக் குறைவின குறைந்தளவான வருமானம் சார் கேள்விநெகிழ்ச்சியையும் கொண்டுள்ளன. இத்தகைய பலவீனமான தன்மைகளையுமது கொண்டிருப்பதாற்றான் இத்துறையின் கூலி நிர்ணயப் பிரச்சனைக்குரிய பொதுத்தீர்வு எதுவும் பெறப்படாமலிருக்கிறது. அரசியற் கொள்கைச் சார்புகளும் பலதடைவைகளில் கூலியுயர்வுக் கோரிக்கைகள் மீது ஆதிக்கம் செலுத்திவந்திருப்பதும் இப்பிரச்சினைக்கு சிக்கலான தன்மை ஏற்படக் காரணமாகும். தனியார்துறையில் நியாயமான கூலியளவினை நிர்ணயிப்பதில் கூலி நிர்ணய சபைகளும் அதிக அக்கறை செலுத்தி வருகின்றன. ஊழியர் சேமலாப நிதிச் செலுத்துகையுடன், இலாப ஈவுகளை நியாயமான அளவில் வழங்குதற்குரிய முயற்சிகளும் கையாளப்படல் அவசியமாகிறது. எவ்வாறேனும் இலங்கையில் எதிர்காலத்தில் குறைந்தளவுக் கூலி விகிதக் குறிகாட்டிக்கும் உண்மைக் கூலி விகிதக் குறிகாட்டிக்குமிடையிலான வேறுபாட்டை எல்லாத் துறைகளிலும் குறைப்பதற்கான முயற்சிகளை தீவிரப்படுத்துவது தொழிலாளர் உறவைச் சீர்ப்படுத்தற்குரிய முக்கிய தேவையாகும்.

பணவருவாய்களுடன் தொழிலாளர் நலன் பாதுகாப்பு வசதிகளை பெருக்கிச் செல்வதையும் தொழிலாளர் எதிர்பார்க்கின்றனர். முதலீட்டாளரின் முதலீடுகளுக்குரிய இலாபத்திறனை அதிகரிப்பதில் ஈடுபடும் தொழிலாளர் உண்மையான ஊக்கத்தைப் பெறல்வேண்டும். இதற்குரிய முறையில் தொழிலாளர் நலன்வசதிகளை தொழில் வழங்குவோர் பெருக்குதல் வேண்டும். தமது வருடாந்த இலாப பெருக்கத்தில் குறிப்பிட்ட சதவீதத்தை இவற்றுக்காக செலவிடுதல் விரும்பத்தக்கது. தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களூடாக இத்தகைய நிபந்தனைகளை விதிக்கின்றனர். நிறுவனங்கள் அவற்றை ஏற்று நடைமுறைப் படுத்தும்வரை தொழிலாளர் உறவுகள் சீராக அமைகின்றன. அசாதாரண தொழிற் சந்தர்ப்பங்களுக்கமைய நிறுவனங்கள் அவ் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தாமதிக்குமிடத்து அல்லது தவறுமிடத்து வேலைநிறுத்தங்களாக அமைதியின்மை வெடிக்கின்றது. தமது தொழிலாளர் தொடர்பான செலவினங்களைக் குறைக்கவும், தொழிலாளர் மெய் வருமானத்தைக் கூட்டவும் விரும்பி பல நலன் வசதிகளை தொழிற்சங்கங்கள் கோருகின்றன. தேனீர்ச்சாலையும், உதவிப் பணச் சலுகையும், தங்குமிடவசதிகள், பொருட் பாதுகாப்பு வசதிகள், ஓய்வறைகள், பொழுதுபோக்கு வசதிகள், வைத்திய பாதுகாப்பு முறைகள் போன்ற பலவற்றையும் தொழில் வழங்குவோர் தருதல் வேண்டுமென்ற எதிர்பார்க்கை தொழிலாளர்

உலகில் நியாயமானதாகவும் அத்தியாவசியமானதாகவும் ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டது. இவற்றை வழங்குவதால் உரிமையாளர்கள் தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டுள்ளனரென்ற கருத்து தொழிலாளரிடையே ஏற்பட முடியும். இதனுல் அவர்களிடமிருந்து அதிகூடுதலான உழைப்பை தொழிலமைப்பு பெற்றுக்கொள்ள முடியும். இவற்றினை நியாயமான அளவு வழங்கும் தொழிலமைப்புக்கள் தொழிலாளர் உறவினர் சீராக வைத்திருக்கமுடியும்.

இன்று தொழிலாளர் தமது தொழிலிடசூழல் நிலைகளைப் பாதுகாப்பதிலும் அதிக விழிப்புடையோராகவுள்ளனர். தொழில் புரியும் நேர அளவுகளைக் கட்டுப்படுத்தல், மாற்றுதல், ஓய்வு நேரங்களை நியாயமான அளவில் நிர்ணயித்தல், என்பவற்றுடன் காற்ருேட்ட வசதி, வெளிச்ச வசதி, இயந்திரப் பாதுகாப்பு, இயந்திர உதவித் தளவாடங்கள் என்பவற்றை ஒழுங்குபடுத்தல் ஆகியவற்றிலும் தொழிலாளர் அதிக பங்கும, உரிமையும் கொள்ள விரும்புகின்றனர். இவற்றை மாற்றுவதுபற்றிய தீர்மானங்களை மேற்கொள்வதிலும் தொழிலாளர் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. தொழிலாளர் - நிர்வாகத் தொடர்பு முகாமையியற் தொடர்பு என்பன கூட்டு தாபனங்களிலதிகரிப்பதாலும் தொழிலாளர் உறவுகள் சீராகப் பேணப்படுகின்றன. இதே நிலை பிற தொழிற் துறைகளிலும் நிலைப்படுத்துதற்குரிய நடவடிக்கைகள், ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

தொழிலாளர் தெரிவு கடமைகளை வழங்குதல், மேற்பார்வை, கட்டுப்படுத்தல், வழிப்படுத்தல், தொழிலிறுதிநிலை மதிப்பீடு என்பனவும் நியாயமான ஒழுங்குகளின் கீழமைதல் வேண்டுமென்பதும் முக்கியமானதேயாகும். உரிமையாளர், முகாமையாளர் மாத்திரம் தாம் நினைத்த முறையில் இவற்றை மாற்றியமைத்தல் விரும்பப்படுவதில்லை. இவற்றில் பொது நியதிகளை தீர்மானிக்கும்போது முகாமைத் துறையினர், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தொழிலாளர்கள் ஆகியோரையும் சேர்த்தல் வேண்டும் எனப்படுகிறது. பதவியுயர்வு, பதவிநீக்கம், தொழிற்படும் கால முடிவு என்பனபற்றிய தீர்மானங்களில் தொழிலாளர் நியாயமான உரிமைகளை எதிர்பார்க்கின்றனர். தொழிற்பாதுகாப்புச் சட்டங்கள், தொழில் மன்றுகள் என்பனவும் தொழிற்சங்கங்களுடன் சார்பு முறையில் தொழிலாளரது இத்தகைய உரிமைகளைப் பேணமுயல்கின்றன. இவற்றை சீர்ப்படுத்தல் தொழிலுறவைப் பேணுதற்குரிய தலையான நடவடிக்கையாக கருதப்படுகிறது.

தொழிலாளர் தமது கருத்துக்களையும், தொழில்முறைப் பிரச்சினைகளையும், தொழிலாளர் பாதுகாப்பு தொடர்பான உரிமைகளையும் வெளியிடுதற்குரிய சங்கங்களை நிறுவுதற்கும், அவற்றை செயற்படுத்துதற்கும் நிறுவன முகாமைத்துறையினரிடமிருந்து இணக்கம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இது சனநாயக அரசியல் உரிமை தொடர்பான வெளிப்பாடாகக் கொள்ளப்படலாம். தொழிலாளர் சங்க நிர்வாகக் குழுவுடன் ஒழுங்குமுறையான தொடர்புகளையே வைத்தும் தொழிலாளர் உறவைப் பாதுகாத்தற்கான வழியாகும்.

இவையெல்லாவற்றிலும் பார்க்க சட்டமுறையான குழுக்கள் (*Formal Groups*) தீங்கற்ற முறையில் இயங்குமாறு பார்த்துக் கொள்ளுதல் மிக அவசியம். அதே வேளை சட்டமுறைமையற்ற குழுக்கள் (*Informal Groups*) தொழிற்சாலை நடவடிக்கைகளின் சிறு முறைபாடுகளை கருவாகக் கொண்டு தோன்றவும், வலிமை பெறவும் இடமேற்படும். இதற்குரிய தலைமையும் பலமடையவும் கூடும். இவற்றில் தொழிலாளர் நிர்வாகப் பகுதியினர் தொடர்ச்சியான அக்கறை செலுத்திவர வேண்டுமென்பதுடன், ஏற்ற இடத்தில் சாதுரியமான நடவடிக்கைகளையும் கையாளுதல் வேண்டும். அல்லது வேலை நிறுத்தங்களும், தொழிலாளர் பிரிவினையும் வலுப்பட்டு தொழில் நிறுவன ஒழுங்கு முறைத் தொழிற்பாட்டைப் பாதித்து விடும்.

இவ்வாருன எல்லா விடயங்களிலும் கவனம் செலுத்துதற்குரிய பயிற்சி எந்தவொரு தொழில் நிறுவன முகாமைத் துறையினர்க்கும் குறிப்பாக தொழிலாளர் நிர்வாகப் பகுதியினர்க்கு வழங்கப்படுதல் வேண்டும். இடைக்கிடையே தொழிலாளர், நிர்வாக-முகாமைத்துறை இணக்க முயற்சிகளை பெருக்கும் நடவடிக்கைகளையும் கையாளுதல் வேண்டும். இவ்வாறு செய்தாற்றுன் தொழிலாளர் உறவினைப் பாதுகாக்கவும், அவர்களிடமிருந்து அதிகூடிய உழைப்பாற்றலைப் பெறவும், அதிக இலாபத்திறனுடன் நீண்டகாலம் இயங்கவும் முடியும். இவ்வடிப்படையிற்றுன் முகாமையியலில் இம்வம்சத்தின் மீது கூடுதலாக அக்கறை செலுத்தப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# சமூகப் பண்பாடும் சமூக நியமங்களும்

*ஏ. எச். மகுறூப் B. A., (Cey.) Dip. in. Ed.*

மனிதன் இயற்கையிலேயே தனித்து தனித்துவாழ முடியாதவன் இதனுல் அவன் தன் தேவைகளை இலகுவாகவும் விரைவாகவும் நிறைவு செய்வதற்காக மற்றவர்களுடன் ஒன்றுகூடி வாழ்கின்றுன். மனிதனுடைய தேவைகள் எண்ணிறைந்தவை அவற்றை அவன் பாதுகாப்பு, அமைதி என்பவற்றிற்காகவே நிறைவு செய்ய முற்படுகிறுன். ஆகவே மனிதர்கள் ஒன்றுகூடி சமூகமாக வாழ்வதற்கு பாதுகாப்பு, அமைதி என்பவையே பிரதானமாக அமைகின்றன எனலாம். இவற்றைச் சமூகத்தின் பொது இலட்சியங்கள் என்றும் கூறலாம். எனவே, ''சமூகம் என்பது பொது லட்சியங்களை அடைவதற்காக மனிதர்கள் ஒன்றுகூடி வாழ்வதாகும்'' என்று வரைவிலக்கணம் செய்யலாம். ஒன்றுகூடி வாழ்கின்ற பண்பு மனிதரிடம் மட்டுமல்லாது வேறு ஜீவராசிகளிடமும் காணப்படுகின்றது. எனினும் நாம் ஏனைய ஜீவராசிகளின் சமூகத்திலிருந்து மனித சமூகத்தை வேறுபடுத்தி அறியலாம். மனித சமூகம் தனக்கென சில விசேட பண்புகளைக் கொண்டிருக்கிறது. வேறுபிரித்தறியக் கூடிய விசேஷ பண்புகளில் ஒன்றுதான் மனித சமூகப் பண்பாடாகும். இத்தகைய சமூகப் பண்பாட்டை - பண்பாட்டு வளர்ச்சியினை ஏனைய ஜீவராசிகளின் சமூகத்தில் காண முடியாது. மனிதன் கண்டு பிடித்த மொழியும் ஏனைய கருவிகளும் பண்பாட்டுநிலைபேற்றிற்கும் வளர்ச்சிக்கும் பக்கபலமாக அமைகின்றன.

மனிதர்கள் ஒன்றுகூடி சமூகமாக வாழ்கின்ற போது தமக்கு வேண்டிய சில பொது நியதிகளையும் பழக்கங்களையும், மரபுகளையும் ஏற்படுத்திக் கொள்ளுகின்றனர். இப்படியும் வாழலாம் என்ற ஒழுங்கற்ற நிலை இல்லாது இப்படித்தான் வாழ வேண்டும் என்பதற்காகவே மேற்கூறிய நியதிகளையும் பழக்கங்களையும் ஏற்படுத்திக் கொண்டார்கள். இவற்றையே நாம் கலாச்சாரம் - பண்பாடு - பாரம்பரியம் என்று பல்வேறு சொற்களால் அழைக்கின்ரேம். சமூக இயலாளர்கள் மனித சமூகப் பண்பாட்டு வளர்ச்சியை பல காலக்கட்டங்களாக வகுத்துள்ளனர். பண்பாடு என்பது கால வளர்ச்சிக்கும் மாறுதல்களுக்கும் ஏற்ப புதுப்புது அம்சங்கள் சேர்க்கப்பட்டும் வேண்டாத அம்சங்கள் நீக்கப்பட்டும் திருத்தப்பட்டும் அமைவுறுகிறது. ஈ. பி. ரேயிலர் (E. B. Tylor) என்பவர், ''சமூகத்தின் அங்கத்தவர் என்ற நிலையில் ஒரு மனிதன் பெறுகின்ற அறிவு, கலை, நம்பிக்கை, ஒழுக்கம், விதிமுறைகள், வழக்குகள் இவை போன்றவற்றின் கூட்டுத்தொகுதியே சமூகப் பண்பாடு'' என்று வரைவிலக்கணம் செய்கிறுர். இதன்படி சமூகப்பண்பாடு என்பது சமூகத்தில் வாழுகின்ற மனிதன் எவ்வாறு வாழவேண்டும் என்று கூறுகின்ற ஒரு வாழ்க்கைநெறி அல்லது வாழ்க்கை முறை எனக் கூறலாம். மேலும் அது ஒரு பரம்பரையினரால் இன்னெரு பரம்பரையினருக்கு வழங்கப்படுவதும் வளர்த்துச் செல்லப்படுவதுமாகும். எனவே அது கற்கப்படுவதும் பின்பற்றப்படுவதுமாகும். ஒரு மனிதனின் சமூக நடத்தை அவன் சார்ந்துள்ள சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுவதாகவும் பின்பற்றப்படுவதாகவும் அமையுமானுல் அது சமூகப்பண்பாட்டின் அம்சமாக மாறுகிறது.

மனித சமூகம் இன, மத, பிரதேச அடிப்படையில் உலகின் பல பாகங்களிலும் பிரிந்து காணப்படுகின்றது. இதனுல் சமூகப்பண்பாடு இடத்திற்கு இடம் காலத்திற்குக்காலம் வேறுபடுகின்றது. இத்தகைய வேறுபாடுகளை ஏற்படுத்துவதற்கு இயற்கை அமைப்பு சந்தர்ப்ப சூழ்நிலைகள், மதம், வேறுபட்ட நம்பிக்கை என்பன காரணிகளாக அமைகின்றன. இக்காரணிகளுள் புவியியல் காரணிகளின் தாக்கம் ஆரம்ப மனித சமூகத்தைப் பெரிதும் பாதித்தது எனலாம். உணவு, உடை உறையுள் மற்றும் பழக்க வழக்கங்கள் என்பவற்றில் சமூகப்பண்பாடு வேறுபட்டுக் காணப்படுவதற்கு இயற்கை அமைப்பு காரணியாக அமைந்தது. மனித சமூகத்தின் அடிப்படைத் தேவைகளில் ஒன்ருகிய உணவுத்

அன்பளிப்பு

# ஸ்ரீ கணேசன் பேக்கரி

99, பருத்தித்துறை ரோட்

நல்லூர் சந்தை,

**யாழ்ப்பாணம்.**

உரிமையாளர்:- செ. சிறீஇந்திரன்

Compliments of

# SHREE GANESHAN BAKERY

99, Pointpedro Road

Nallur Market,

**JAFFNA.**

Prop:- **Shree Indran**

தேவை மனித சமூகம் நீடித்திருப்பதற்கு அவசியம் வேண்டப்படுகிறது. உயிர் வாழ்வதற்காக ஏதோ ஒரு வகை உணவை நாம் உண்ண வேண்டியவர்களாக இருக்கிறோம். எனினும் உணவு வகையும் உண்ணும் முறையும் அதனைத் தேடும் முறையும் சமூகத்திற்கு சமூகம் வேறுபடுகின்றது. இயற்கை சூழலுக்கேற்ப இத்தகைய வேறுபாட்டை சமூகம் ஏற்படுத்திக் கொண்டது. மலைப்பாங்கான பிரதேசங்களிலும் பாலைநிலப் பகுதிகளிலும் வாழ்ந்த சமூகம் ஆறழைத்து உண்ணும் (வழிப்பறி) பண்பாட்டைக் கொண்டிருந்ததாக நாம் அறிவோம். கடலோரங்களை அண்டி வாழ்வோர் கடலிலிருந்து பெறப்படுகின்ற உணவுவகைகளை உண்டனர். இதுபோலவே உடைப்பழக்கத்திலும் புவியியல் நிலைக்கேற்ப பண்பாட்டு வேறுபாட்டை நாம் காணலாம். குளிர் பிரதேசங்களில் வாழ்வோர் கம்பளி ஆடைகளையும் தொப்பி, சப்பாத்து போன்றவைகளையும் அணிகின்ற பண்பாட்டை மேற்கொண்டனர். இதற்கு மாறாக உஷ்ணவலயப் பிரதேசங்களில் வாழ்வோர் சூட்டைத் தாங்கக்கூடிய மெல்லிய உடைகளை அணிகின்றனர். வீடு கட்டும் முறையிலும் புவியியலின் தாக்கம் தன் செல்வாக்கைக் காட்டுகின்றது. பனிக்கட்டிப் பிரதேசங்களில் வாழும் எஸ்கிமோவர் பனி மலைகளைக் குடைந்து வீடுகளை அமைக்கின்றனர் ஆனால் வேறு பிரதேசங்களில் வாழ்வோர் சூழலுக்கேற்ப கற்களாலான வீடுகளைக் கட்டி வாழ்கின்றனர். எனவே உணவு, உடை, உறையுள் என்பன மனித சமூகத்தின் அத்தியாவசிய தேவைகளாக இருந்த போதிலும் அவற்றின் தன்மைகளும் அவற்றைப் பெறும் வகைகளும் இயற்கை அமைப்புக் காரணமாக வேறுபட்டிருப்பதை நாம் காணலாம். அத்தியாவசிய தேவைகள மாத்திரமல்லாமல் மனித உணர்வுகளும் இயற்கையின் தாக்கத்திற்கு உட்படுவதாக ஆராய்வாளர் கூறுகின்றனர். உஷ்ணப் பிரதேசங்களில் வாழ்வோர் மிக விரைவில் கோப உணர்வுக்குட்படுவதாகவும் அவர்களிடையே பாலியல் உணர்வு கூடுதலாகக் காணப்படுவதாகவும் கூறுகின்றனர். இதற்கு மாறாக குளிர் பிரதேசத்தில் வாழ்பவரிடையே பாலியல் உணர்வு குறைவாகக் காணப்படுவதாகவும் கோப உணர்வு மிகத் தாமதமாக ஏற்படுவதாகவும் கூறுகின்றனர். எனவே இயற்கை அமைப்புக்கு ஏற்ப மனித சமூகம் தன் நடத்தையில் வேறுபட்ட பண்புகளைக் கொண்டு விளங்குகிறது.

மனித வாழ்க்கை முறையைப் பண்பாடு என நாம் அழைக்கின்றோம். வாழ்க்கை முறையை புவியியல் காரணி மாத்திரமல்லாமல் வேறு பலவும் நிர்ணயிக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் ஒரே விதமான புவியியல் சூழலில் வாழ்கின்ற இரு சமூகங்களிடையே வேறுபட்ட வாழ்க்கை முறையை நாம் காணுகின்றோம். மேலும் மனிதன் இயற்கையோடு போராடி வெற்றி பெற முற்படுவதால் புவியியல் தாக்கம் முற்காலத்தில் பாதித்ததைப்போல் தற்காலத்தில் பண்பாட்டில் அதிக பாதிப்பை ஏற்படுத்துவதில்லையெனலாம். இன, மத, பிரதேச ரீதியாக மக்கள் பல்வேறு சமூகங்களாகப் பிரிந்து வாழும்போது அதற்கேற்பவும் பண்பாட்டில் வேறுபாடுகள் ஏற்படுகின்றன. வாழ்க்கை முறையை நோக்கும்போது சந்தர்ப்பசூழலின் தாக்கம் பண்பாட்டில் மாற்றத்தை உண்டு பண்ணியதென நாம் காணலாம் உதாரணமாக:-

திருமணம் என்பது எல்லா சமூகத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பண்பாட்டு அம்சமாகும். எனினும் யார் யாரைத் திருமணம் செய்யலாம், திருமணச் சடங்குகளை எவ்வாறு நடத்தலாம், ஒருவர் எத்தனை பேரைத் திருமணம் செய்யலாம் என்பவற்றில் பண்பாட்டு வேறுபாடுகள் காணப்படுகின்றன. சில சமூகங்களில் ஒரு தார மணம் (*Monogamy*) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வேறு சில சமூகங்களில் பலதார மணம் (*Polygamy*) ஏற்றுக்கொள்ளப்படும். இன்னும் சில சமூகங்களில் ஒரு பெண் பல ஆடவரைத் திருமணம் செய்கின்ற முறையும் (*Polyandry*) காணப்படுகின்றன. எஸ்கிமோவரில் குறிப்பிட்ட சில பூர்வீக மக்களிடமும் மத்திய ஆசியாவில் திபத்திய சமூகத்திலேயும் ஆபிரிக்காவில் சில பகுதிகளும் தென்மேற்கு இந்தியாவில் நாயர் (*Nayars*) தென் இந்தியாவில் ரோடா சமூகத்திலும் (*Todas*) ஒரு பெண் பல ஆடவரை திருமணம் செய்யும் முறை இருந்ததாக அறிகின்றோம். ஆபிரிக்காவின் பல பகுதிகளிலும் தென் அமெரிக்காவில் நியூபிஸ் நியூகினி போன்ற பகுதிகளில் மடகஸ்காரிலும் பல தார மணம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. கௌரவம் சந்தர்ப்ப சூழ்நிலை என்பவற்றைப் பொறுத்து பலதாரமணம் சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இஸ்லாமிய மதத்தவரிடையே இம்முறை காணப்படுகின்றது. இஸ்லாம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஏராளமான யுத்தங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. யுத்தத்தில் ஆண்கள்

இறந்தமையால் சமூகத்தில் ஆண்கள் தொகை குறையவும் பெண்கள் பலர் விதவைகளாகவும் நேரிட்டது. இதனல் ஏற்படக் கூடிய, வேண்டத்தகாத விளைவுகளைத் தடுப்பதற்காக சமூகத்தில் பலதாரமணம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் யார்யார் பலதார மணம் புரிந்து கொள்ளலாம் என்பதற்கும் எச்சந்தர்ப்பத்தில் புரிந்து கொள்ளலாம் என்பதற்கும் விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டன. எனவே இஸ்லாமியத் திருமணப் பண்பாட்டில் பலதாரமணம் என்பது சந்தர்ப்ப சூழலின் தாக்கத்தின் விளைவேயாகும்.

நாகரீக வளர்ச்சி காரணமாகவும் புதிய புதிய விஞ்ஞான கண்டு பிடிப்புகள் வியாபார வர்த்தக வளர்ச்சி, அன்னிய நாடுகளின் ஆதிக்கம் என்பவற்றின் காரணமாகவும் உலக நாடுகளிடையே மிக நெருங்கிய விரைவான தொடர்புகள் ஏற்படுகின்றன. ஒருவரோடு ஒருவர் கலந்து கொளளவும, ஒரு சமூகத்தோடு இன்னெரு சமூகம் நெருங்கி உறவாடவும் சந்தர்ப்பம் உண்டாகின்றது. இதனல் கலாச்சார பரிமாற்றம் ஏற்படுகின்றது. சமூகங்களுக்கிடையே ஏற்படும் தொடர்பும், காலமாற்றமும், பண்பாட்டு அம்சங்களில் மாற்றத்தை உண்டுபண்ணுகின்றன. பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பது பண்பாட்டில் இடம் பெறுகின்றது. இது அவசியமானதும், தவிர்க்க முடியாததும் ஆகும்.

சமூகப்பண்பாடு மனித வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்குவதால் அது பல்வேறு கூறுகளின் தொகுப்பு எனலாம். நாம் சமூகத்தின் அங்கத்தவனுக வாழும்போது அச்சமூகப் பண்பாட்டிற்கு ஏற்ப இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய எதிர்பார்ப்புகளேயே சமூக நியமங்கள் [*Social Norms*[ எனப்படுகின்றன. சமூக நியமங்கள் சமூகப் பண்பாட்டின் கூறுகளாக அமைகின்றன. சமூக நியமங்கள் நாட்டுநடப்பு, நியதிகள், சட்டங்கள் (*Folk ways, Modes, Laws*) எனப்பல வகைப்படும். இவை ஒவ்வொன்றும் அவற்றின் தன்மைக்கு ஏற்ப வேறுபடுத்தப்படுகின்றன.

நாட்டு நடப்பை ஒருவர் மீறி நடக்கும்போது சட்டப்படி தண்டிக்கப்படுவது இல்லை. ஆனல் நியதிகளை மீறும்போது மறைமுகமான தண்டனையையேனும் பெறுகின்றுர். உதாரணமாக நம் சமூகப்பண்பாட்டில் ஆண்கள் வேட்டி, நீண்ட காற்சட்டை ஆகியன அணிவதும், பெண்கள் சேலை போன்றவற்றை அணிவதும், ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இதனை மீறி பெண்கள் நீண்ட காற்சட்டை அணிவதாலோ ஆண்கள் பெண்களைப்போல் முடி வளர்ப்பதாலோ சட்டப்படி தண்டிக்கப்படுவது இல்லை. ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப்பிடுவது என்பது நாட்டுநடப்புக்கு மற்றெரு உதாரணமாகும். இதனை மீறி ஒருவர் நான்கு நேரமோ அதற்கு மேலோ சாப்பிட்டால் அல்லது சாப்பிடாமல் விட்டாலோ தண்டிக்கப்பட மாட்டார். நியதிகள் நாட்டு நடப்பிலும் பார்க்க சிறிது வலிமை கூடியவையாகும். நியதிகள் மீறப்படும்போது மறைமுகமான தண்டனையேனும், ஒருவர் பெறலாம். உதாரணமாக பாதரட்சையுடன் கோவிலுக்குச் செல்லுதல், கோவிலுக்குள் புகைத்தல் என்பவற்றைக் கூறலாம். சமூக நியமங்களில் சில சமூகத்தின் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் அவசியம் வேண்டப்படுகின்றபடியால், அவை எழுதது உருவம் கொண்ட சட்டங்களாக மாறுகின்றன. சட்டங்கள் மீறப்படும்போது ஒருவர் சட்டப்படி தண்டிக்கப்படலாம். நாட்டு நடப்புகள், நியதிகள் சட்டங்கள் என்பனவே மனித சமூகப்பண்பாடாக பரிணமிக்கின்றன. சமூகத்தில் வாழுகின்ற அங்கத்தவர்கள் சமூகப்பண்பாட்டிற்கு ஏற்ப நடந்து கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றனர். ஒருவர் சமூகப்பண்பாட்டை மீறும்போது சமூகத்தோடு முரண்படுகின்றுர் எனவே நாம் எச்சமூகத்தில் அங்கத்தவனுக வாழ்கின்றேமோ அச்சமூகப்பண்பாட்டிற்கு ஏற்ப நடந்து கொள்ளவும் பண்பாட்டை வளர்க்கவும், திருத்தங்களையும் மாற்றங்களையும் வேண்டியபோது ஏற்படுத்திக் கொள்ளவும் பொறுப்பும் கடமையும் உடையவர்களாவோம்.

அன்பளிப்பு

"கண்ணு பீடா"

சுவைத்து பயன் பெறுங்கள்

கண்ணு பீடா,
திருநெல்வேலி.

# இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு முகாமையின் பங்கு

சி. அருளானந்தநாதன் *B. Sc. (P. A. D.) Special*

சமூகத்தின் சகல நடவடிக்கைகளுக்கும் முகாமை ஓர் மூலகாரணமாய் அமைந்துள்ளது என்பதை சமூகத்தின் பல்வேறு செயல் முறையின் மூலமும் நாம் அறிகின்றோம். அதாவது ஓர் நீர்ப்பாசன வாவியை கட்டுவதாயினும் சரி, தொழிற்சாலைகளை நிர்வகிப்பதாயினும் சரி, வியாபாரத்தாபனங்களை நடாத்துவதாயினும் சரி அல்லது காரியாலயங்களை நடத்துவதாயினும் முகாமைத் தொழிற்பாடு அவசியம் என்பது புலப்படுகிறது. இங்கு முகாமையானது பல்வேறு வகைகளில் கிடைக்கும் வழங்களை மனித சக்தியுடன் தொடர்பு படுத்தி அவற்றின் மூலம் உற்பத்தியாகவோ, சேவையாகவோ வெளியீடு செய்வதையும் அறிவோம்.

மேலும் முகாமையின் கருத்தை அன்றி அதன் அவசியத்தை உணர்வதாயின் ஒப்பீட்டாய்வையோ ஒரே தொழில் சார்புடைய இரண்டு நிறுவனங்களிடையே, ஒரே அளவில் மூலப்பொருட்கள் நிதி, மனிதவலு ஆகியவற்றினை உட்செலுத்தி அவர்களினிடையே தொழிற்பாட்டில் வினைத்திறனை தொழிற்பாடும் வினைத்திறனற்ற தொழிற்பாட்டினை அடைவதை நாம் அவதானிப்பதுடன் மேலும் அத்தகைய நிறுவனங்களால், அடையப்பட்ட நோக்கங்களில் வித்தியாசமான நிலைகள் காணப்படுவதை அவதானிக்கலாம். எனவே இதிலிருந்து அறியக் கூடியதாக இருக்கிறது என்னவென்றால் நிறுவனங்களிற்கு கிடைக்கும் வழங்கல்கள் அடிப்படையாகத்தான் அவற்றின் நோக்கங்கள் நிறைவேற்றப் படுவதல்லவென்றும் முகாமையின் தொழிற்பாட்டின் பங்கினால்த்தான் நோக்கங்கள் அடையப்படுகின்றன என்பது வெள்ளிடைமலை.

இதுவரை ஆராயப்பட்ட விடயங்களை ஆதாரமாகக் கொண்டு சமூக நடவடிக்கைக்கு முகாமையின் தொழிற்பாடு அவசியம் என்பது புலப்படுகிறது. அளவற்ற மூலவளங்கள் கிடைக்கும்போதோ அல்லது சேதமடைகின்ற போதோ அல்லது மூலவளங்கள் பற்றாக்குறை ஏற்படுகின்ற வேளையிலும்சரி முகாமையானது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்த வேண்டியதாக இருக்கிறது. இத்தகைய நிலையை ஒட்டி ஆராயும் பொழுது இலங்கைபோன்ற குறை அபிவிருத்தி நாடுகளுக்கு முகாமைத் தொழிற்பாடு அவசியம் என்பது ஐயத்துக்கிடமின்றி அறிவதுடன் இவை மேலும் பொருளாதார அபிவிருத்தியடைய முகாமையின் பங்குதான் மிக முக்கியமென்பதையும் ஆணித்தரமாக வலியுறுத்தலாம்.

எமது நாட்டை அபிவிருத்தியடையச் செய்வதில் ஏற்படும் பிரச்சினைகளை நோக்கின் அதாவது இன்றைய நிலையில் எதுவித கட்டுப்பாடற்ற சூழ்நிலையில் பெருக்கப்படும் சனத்தொகைப் பெருக்க வீதத்திற்கு ஈடாக நாட்டின் தேசிய உற்பத்தியை அதிகரிக்க வேண்டியதுடன் வாழ்க்கைத் தரத்தையும், உயர்த்த வேண்டியது அவசியமாகிறது. மறுபுறத்தில் இவை பற்றி கூறின் அஃதாவது நாட்டின் தற்போதைய சந்ததியினருக்கு வேலைவாய்ப்பில் இருக்கும் மந்த நிலையைப் போக்குவதுடன் மனிதவலுவில் ஏற்படும் அதிகரிப்பிற்கேற்ப வேலைவாய்ப்பு அளிக்கவேண்டியதுமாகும். அடுத்த படியாக குறை அபிவிருத்தி நாட்டில் காணப்படும் குணஇயல்புக்கேற்ப எம்மிடம் காணப்படும் மூலவளங்களான மூலதனம், வெளிநாட்டுச் செலாவணி போன்றவை பற்றாக் குறையாக இருக்கின்றன. இவையே தற்போதைய மூன்றும் உலகின் உற்பத்திக் காரணிகளில் முக்கிய பங்கினை ஏற்கிறது. எமது நாட்டில் காணப்படும் எண்ணற்ற வகுப்பினரான தொழிலாளர்கட்கு வேலை வழங்குவதில் கஷ்டங்களுள.

எத்தகைய வளங்கள் இருந்த போதிலும் உற்பத்தித்திறன் குறைவடைந்தே காணப்படுகிறது. இருக்கிற மூலவளங்களைத் திறனாகவும், உற்பத்தித் திறனுடனும் செயற்படுத்தி நாட்டில் இலகுவில் பெறக்கூடிய மனிதவலுவைப் பாவிப்பதற்கும், நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கும் முக்கியம் முகாமையின் பங்கே எனலாம்.

உயர்ந்த சேவை! குறைந்த விலை!!

நிறைந்த பலன்!!!

தரமான சாப்பாட்டு வகைகளுக்கும்
திறமான சிற்றுண்டி வகைகளுக்கும்
இன்றே நாடுங்கள்

# மக்கள் போசனசாலை

[விசேட ஆடர்கள் உடன் கவனிக்கப்படும்]

கடன் வசதி பெற, அடைவு பிடிக்கச் சிறந்த இடம்

# கூட்டுறவுக் கிராமிய வங்கி

★ உழவு இயந்திர உதிரிப் பாகங்களுக்கும் ★

★ விவசாய இரசாயனப் பொருட்களுக்கும் ★

★ நுகர்ச்சித் தேவைகளுக்கும் ★

★ எரி பொருட்களுக்கும் ★

சிறந்த இடம்

# கரைச்சி வடக்கு

# ப. நோ. கூ. சங்கம்

பரந்தன்.

மூலதனத்தினை திறனாக பயன்படுத்துவதாயின் திறமையான முகாமைத்துவ தொழிற்பாடு அவசியமாகும். விவசாய கைத்தொழிற் துறையில் திட்டமிடப்பட்டுள்ள வெளியீட்டில் கணிசமான அளவு அதிகரிப்பினை நாம் அடைய வேண்டுமாயின் அத்தகைய துறைகளில் முகாமைத் தொழிற்பாடு நடைமுறைப்படுத்தல் அவசியமாகும். திறனான முகாமைத் தொழிற்பாடு நடைமுறைப்படுத்துவதனால் உலக சந்தையின் விலைக்கும், தரத்திற்கும் ஏற்ப நமது நாட்டு உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதுடன் அதன் பெறுபேறாக வெளிநாட்டு ஏற்றுமதி வருமானத்தினை அதிகரிக்கவும் முடியும். சேமிப்பு முதலீட்டுக்கு சமனானது என்று வலியுறுத்தப்படும் பொருளியல்வாதிகளின் கூற்றையும் நனவு படுத்த வேண்டுமாயின் அங்கெல்லாம் எமது வினைத்திறனை அதிகரிக்கக்கூடிய வகையில் திறனான முகாமைத் தொழிற்பாடு நடைமுறைப்படுத்தப் படவேண்டும். அதாவது சேமிக்கப்படும் பணமெல்லாம் முதலீடு செய்யப்படாமல் போதாது அவற்றை திறனான முறையில் நிர்வகிப்பதற்கு முகாமையின் பங்கும் அவசியம் வேண்டப்படுகிறது.

அடுத்தபடியாக அபிவிருத்தியில் முகாமைப் பிரச்சனைகளை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளல் வேண்டும். பொருளியல் வளர்ச்சி என்று குறிப்பிடுவதிலும் பார்க்க பரந்த கருத்து ஆழம் கொண்ட அபிவிருத்தி என்று அழைப்பது பொருத்தமாகும். வளர்ச்சியுடன் சேர்ந்து இன்னும் சிலவற்றை அடக்கியதே அபிவிருத்தியாகும். வளர்ச்சி எனும்போது வெளியீட்டின் அதிகரிப்பால் நாட்டின் தேசிய உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டதின் பிரதிபலிப்பாக தலாவருமானம் அதிகரித்தலாகும். எப்படி இருந்தபோதிலும் அபிவிருத்தியானது வளர்ச்சியுடன் கூடிய சில அடிப்படை மாற்றங்களாகும். இலங்கை போன்ற நாடுகளில் மாற்றமானது மக்களுடைய வாழ்க்கை முறைகளிலும், சமூகக் கட்டுக் கோப்பிலும் ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. எனவே முகாமையானது நிறுவனங்கள் இலாபத்தில் இயங்க மட்டும் அல்லவென்றும் முகாமை நடைமுறையானது விவசாய நிலச் சீர்திருத்தத்துடன் தொடர்புடைய சமூகம் என்பவற்றிலும், நடைமுறைப்படுத்த வேண்டி இருக்கிறது. அண்மையில் ஐக்கிய முன்னணி அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட நிலச்சீர்திருத்த சட்டத்தின் பிரதிபலனாக பெருந்தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டபின் முகாமைத்துவம், நிர்வாகம் என்பவற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டன. தோட்டத்து அல்லது அண்மைய கிராமிய மக்கள் இப்புது நிர்வாக சபைகளில் இடம் பெற்றனர். முறையான முகாமைத்துவம் நிர்வாகம் இன்றிப் பெருந் தோட்டங்கள் இலாபகரமாக இயங்காதென்பது தெளிவு. புது நிர்வாகம் எவ்வளவு தூரம் இலாபகரமாக தோட்டங்களை இயக்குகிறதென்பதை எதிர்காலமே உணர்த்தவல்லதாகும்.

அபிவிருத்திக்கு முகாமைத் தொழிற்பாடுகள் அவசியம், என்பது புலப்படும் வேளையில் அபிவிருத்தி நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமாயின் முகாமையியலும் அபிவிருத்தியடையச் செய்யவேண்டும். குறை அபிவிருத்தி நாடுகளில் அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமாயின் முகாமைத்திறன் அதிகரிக்கப்படுவதுடன் அதற்கான முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். குறை அபிவிருத்தி நாடுகளில் மேற்கூறிய முறைகளில் அனுப்பப்பட்டதாலேயே, (பிரிஒ) முகாமைத் திறன்கள் வலுவற்றதாகக் காணப்படுகிறது. இக்காரணியை கருத்தில் கொள்ளப்படாததாலேயேஎதிர்பார்க்கப்பட்டவிளைவு கிடைப்பதில்லை. முகாமைக்கும், அபிவிருத்திக்கும் இடையில் நெருங்கிய தொடர்பினை உணருமிடத்து அபிவிருத்தி திட்டமிடும்போது முகாமை அபிவிருத்தி திட்டமிடலும் ஒரு பகுதியாகக் கருதப்படுதல் வேண்டும். இலங்கை சுதந்திரமடைந்ததும், பொருளாதார சுதந்திரம் அடையும் நோக்குடன் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்தது. அத்தகைய திட்டங்கள் யாவும் தோல்வியையே தழுவி நின்றன. நாட்டில் அமைந்துள்ள இயற்கை வளங்களையும், மனித வளத்தையும் நிதி முறைமைகள் போன்ற வளங்கள் பற்றிய தரவுகள் சேகரிக்கப்படுதல், அத்தரவுகளை அலுவலகங்களில் அலசி ஆராய்தல், அத்தரவுகளின்படி திட்டவரைபடத்தை உருவாக்குதல் ஆகிய மூன்று முக்கிய திட்டமிடல் கருமங்களை திறனாக இயங்குவதற்கு முகாமை அவசியமாகிறது.

முதலாவதாக முகாமை அபிவிருத்தி செயற்பாட்டுத் திட்டத்தில் நிர்வாக அபிவிருத்தித் திட்டத்தினை அபிவிருத்தி அடையச் செய்யும் வழிமுறையில் அணுகுதலாகும். நிர்வாக ரீதியாக அணுகுமிடத்து அதிகரிப்பு விகித சம அளவிற்கு ஏற்ப சிக்கனமாக பொதுவான நோக்கை அடையலாம். இதனால் சமமான நிர்வாக ரீதியில் அபிவிருத்தி உண்டாகும். உதாரண

மாக:- ஆளணி முறைகள் திட்டமிடல், அரசின் நிதி செயற்படுத்தல், திட்ட செயல் முறைகள் மூலம் அபிவிருத்தி ஏற்பட உதவும். சமூக நடைமுறைமூலம் அணுகும் அபிவிருத்தி நிர்வாக முறையானது சமூக பொருளாதார, அரசியல் நிலைகளில் மாற்றத்திற்கேற்ப பொது நிர்வாக முறைகளிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுவதாகும். உதாரணமாக:- காலனித்துவ காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிர்வாக முறைகளைத் தவிர்த்து நாட்டின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய நிறுவனங்களை நிறுவுதல் போன்றதாகும். இவ்விரு வகை அணுகுதல் முறைகள் மூலம் அபிவிருத்தி நடைமுறைக்கான கொள்கை வகுத்தல், திட்டம் வகுத்தல், செயற்பாட்டுத் திட்டங்கள், திட்டங்களைச் செயற்படுத்தல் என்பவற்றில் நிர்வாக முறைகளிலும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஏற்ப நிர்வாக நடவடிக்கைகள் அமைய வேண்டும். இன்றேல் அபிவிருத்திக்கு ஏற்ப நிர்வாகம் நடைபெற மாட்டாது. உதாரணமாக:- அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட பரவலாக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் போன்றதாகும்.

எமது பொருளாதாரத்தைப் பொறுத்தவரை உற்பத்தித் துறைகளிலும், கொள்கை வகுத்தலிலும் பின்வருவன கவனத்தில் கொள்ளப்பட வேண்டியனவாகும். வேலைமுறைகளும், நடைமுறையும், குழுக்களிடையே ஏற்படும் தொடர்புகள், சூழல் தொடர்புகள், அவற்றினால் ஏற்படும் மாற்றங்கள் என்பனவாகும். அபிவிருத்தி அடையும் நிறுவனத்தின் செயற்பாட்டுத்திட்டங்களில் புத்தாக்கம், புதுப்பித்தல், மாற்றங்களை ஏற்படுத்தல் போன்றன அடங்கியதாக இருக்க வேண்டும். பல்வேறு தொழிற்பாடுடைய நிறுவனங்கள் நம் நாட்டில் காணப்பட்டாலும் அவற்றினிடையே இது போன்று எல்லாத் துறைகளிலும் செயற்பாட்டுத் திட்டங்கள் யாவும் நிறைவேற்றப்பட சமூக பொருளாதார அமைப்பில் மாற்றத்தினை ஏற்படுத்தும்.

முன்னேற்றகரமான திட்டமிடல் முறைகளினால் நிறுவனங்களின் நோக்கங்களுக்கிணங்க கொள்கைகளை வகுத்து அவற்றினை நடைமுறைப்படுத்த முற்படும் போது தெரிவுப் பிரச்சனைகள் எழாது. திறம்பட தெரிவு செய்யும் ஆற்றலை உடையதாக இருப்பதால் ஒரு ஸ்திரமான அமைப்புக்குட்பட்டு தீர்மான வழிகளை சுலபமாக அடையக்கூடியதாக இருக்கும். தொழில் நிறுவனங்கள் ஊடாக மக்களையும், வளங்களையும் தொடர்புபடுத்தி அவற்றின் மூலம் எதிர்பாராத விளைவை அடைய முடியும். முன்னேற்றகரமான நவீன விஞ்ஞான முகாமை தொழிற்பாடான தகவல் தொடர்பு முறைகள், கொம்பியூட்டர் தரவுமுறைகள் என்பன மூலம் தீர்மானம் எடுத்தலில் எதுவித சிக்கல்களையும் ஏற்படுத்தாது திட்டத்தின்படி தங்குதடையின்றி நிறைவேற்றக்கூடியதாக இருக்கும்.

உற்பத்தி முகாமையின் வளர்ச்சியின் பிரதிபலிப்பே நாம் இன்று காணும் சிக்கன உற்பத்தி முறைகள் மூலம் மலிவான பொருட்கள் உற்பத்தி செய்தலாகும். மறுவார்த்தையில் கூறுவதாயின் தலா உற்பத்தி விளைதிறன் அதிகரிப்பினை ஏற்படுத்தி உள்ளது. இதுவே இன்று உற்பத்தியை ஆகக்கூடிய உயர்ந்த அளவு உற்பத்தி செய்ய உதவுகிறது. மறுபுறத்தில் ஆளணி முகாமையின் வளர்ச்சியானது ஆளணிக்கு ஆட்களை தெரிவு செய்தல், பதவியிடல், முகாமைத்துவத்தில் அபிவிருத்தி. ஊழியர்களை பயிற்றுவித்தல், ஊழியர்களை ஊக்குவித்தல் போன்றவற்றினை அபிவிருத்தியடையச் செய்துள்ளது. இதன் காரணமாக மனித வலுவை எவ்வாறு வினையாண்மையுடன் பாவிக்கலாம் என்பதை அரசாங்க முயற்சிகளிலும் சரி முகாமையானது அறிமுகம் செய்துள்ளது. இதே போன்ற முன்னேற்றம் நிதி முகாமையிலும் அபிவிருத்திக்கேற்ப நிதி திட்டமிடல், வரவு செலவுத் திட்டம் மதிப்பீடு, ஒதுக்கீடு செய்தல் என்பனவற்றில் காணப்படுகின்றது. மற்றும் சந்தைப்படுத்தும் முகாமையின் அபிவிருத்தி எமது இலங்கை போன்ற நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகும். அதாவது ஏற்றுமதி, இறக்குமதிப் பொருளாதார அமைப்பினைக் கொண்ட பொருளாதார அபிவிருத்திக்கு பாரம்பரியமற்ற ஏற்றுமதிப் பொருட்களுக்கு சந்தையைக் கண்டுபிடித்தல் அத்தகைய துறைகளில் விசேட கவனம் செலுத்துவதற்கு சந்தைப்படுத்தும் முகாமையின் பங்கு முன்னேற்றகரமான நடைமுறைப் படுத்தியிருந்தால் நமது நாடு இன்று அனுபவிக்கும் அந்நியச் செலாவணிப் பிரச்சனையை எதிர்நோக்காத முறையில் முகாமை எதிர்காலத்தையிட்டு முக்கிய கவனம் செலுத்தி அதற்கமைவாக எமது பொருளாதாரப் போக்கினை மாற்ற நடவடிக்கை எடுத்திருக்கும். அதாவது சந்தை ஆராய்ச்சி, புதிய சந்தைகளை அறிமுகம் செய்து உலக சந்தையின் போட்டிக்கேற்ப எமது நாட்

டுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு வழிவகைகளை தோற்றுவிப்பதோடு மட்டும் நில்லாது வேலையில்லாத் திண்டாட்டத்தையும் குறைக்க நடவடிக்கை எடுத்திருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்திக்கு முக்கிய தடையாகக் காணப்படுவது மூலப்பொருட்களின் தட்டுப்பாடே எனலாம். அத்தகைய மூலப் பொருட்களை எப்படி வரவழைக்கலாம்; எவ்விதம் வரவழைக்கப்பட்ட மூலப் பொருட்களை முடிவுற்ற பொருட்களாக மாற்றி மீண்டும் ஏற்றுமதி செய்ய முடியுமா? என்பதையிட்டும்; அதனால் நாம் எவ்வளவு வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதையிட்டு திட்டமிட்டுச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதாயின் முகாமையின் அவசியம் வேண்டப்படுகிறது. இத்தகைய முயற்சியினால் நாட்டில் காணப்படும் தொழிலாளிக்கு ஊதியம் கொடுத்து லாபம் பெறமுடியுமா? என்பதையிட்டு முடிவுகளை முகாமையே திறம்பட திட்டமிட முடியும் என்பதால் இதன் அவசியம் மேலும் வலியுறுத்தப்படுகிறது.

முகாமையானது தனது தொழிற்பாடான இருப்புக் கட்டுப்பாடு, தரக் கட்டுப்பாடு போன்ற பகுதிகளையும் உள்ளடக்கி இருப்பதால் ஒரு உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்கள் எவ்வேளையில், எவ்வளவு, கட்டளையிட்டு வரவழைக்கப்பட வேண்டும், அது எத்தகைய தரமுடையதாக இருக்க வேண்டும் என்பதையிட்டு தீர்மானிப்பதற்கு முகாமையின் அவசியம் வலியுறுத்தப்படுகிறது. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் உலக சந்தையில் தரத்திற்கு ஈடு கொடுக்கத் தக்கதாக இல்லை என அறிவதில் நாம் காணும் குறைவு என்னவென்றால் முகாமையின் கண்காணிப்பு குறைவேயாகும். எனவே ஒரு நாட்டில் சிறந்த தொழில் நுட்ப உற்பத்திக்கு முகாமை அவசியம் எனலாம்.

மற்றும் முகாமையின் இறுதிப் பகுதியானது கட்டுப்படுத்தலைக் கொண்டிருத்தலையும் அவதானிக்கலாம். தற்காலப் பொருளாதார அபிவிருத்திக்கெனத் தீட்டப்படும் திட்டங்கள் யாவும் தோல்வியை தழுவியதின் முக்கிய குறைபாடு என்னவெனில் திறனான கட்டுப்படுத்தல் முறை நடைமுறைப் படுத்தாததேயாகும். திட்டங்கள் பகுதி பகுதியாக்கப்பட்டு அவை, அக்காலங்களுக்குக் குறிப்பிட்ட நோக்கை அடையத் தவறுவதாயின் அவற்றுக்கான காரணங்களை ஆராய்ந்து மாற்று நடவடிக்கைகளை கைக்கொள்ள வேண்டுமென்பதை தீர்மானித்தல் அவசியம். ஆனால் முகாமையின் அபிவிருத்திக் குறைபாடே இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு எதுவித பங்கையும் ஆற்றாது போயின. எனவே பொருளாதார அபிவிருத்திக்கு முகாமையின் நடைமுறைகளை அறியப்படுத்தினால் நாட்டின் பொருளாதார விருத்தி நோக்கை அடைய முடியும் என்பது வெள்ளிடை மலையாகும்.


அன்பளிப்பு

தெ. ப. பொ. உ. வி. கூ.
சங்கம்



கிளிநொச்சி

பனையை வளர்ப்போம்
பயனைப் பெறுவோம்

தலைவர்

# கணக்கியல் -
# இரட்டைப்பதிவுத் தத்துவமும் நடைமுறையும்

இ. திலகரெத்தினம் B. Com. (Cey.)
புறப்போதனாசிரியர் (பல்தொழில் நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம்)
உதவியாசிரியர், (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்)

வர்த்தகக் கல்வி இன்றைய கல்வி அமைப்பில் முதன்மை பெறுவிட்டாலும் முக்கியத்துவம் பெற்றுவிட்டது. அரசு மக்களுக்குத் தொழில் தேடிக் கொடுக்கும் நிலை மாறி மக்கள் தாமே தொழிலைத் தேடிக் கொள்ளத் தக்க வகையில் கல்வி அமைப்பு சீர்செய்யப்பட்ட நிலையில் அந்தத் தொழிலால் அல்லது சேவையால் பெறப்பட்ட உற்பத்தியை சந்தையில் எவ்விதம் ஈடுபடுத்துவது அதில் ஏற்படும் வருமானங்கள் செலவினங்களை எவ்விதம் கணிப்பிடுவது என்பனவற்றை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டுமென்ற வகையில் வர்த்தகம் இன்று பொதுவான, முக்கிய பாடமாக, தொழில் முன்னிலைப் பாடமாக அங்கிகரிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகம் என்ற பகுப்புள் கணக்கியல் ஒன்றாகும். கணக்கியல், நடவடிக்கைகளை ஒழுங்காகக், காலக் கிரமமாக, முறையாகப் பதிவு செய்து நடவடிக்கையின் மொத்த விளைவைக் கணிப்பீடு செய்யும் தொழில் நுட்பமெனக் கூறலாம். இக் கருத்தில் நடவடிக்கைகளை பதிவு செய்வது மிக முக்கியமான ஒரு அம்சமாகும். இன்றைய கணக்குப் பதிவினை நாம் இரட்டைப் பதிவு முறையென்று கூறிக் கொள்கின்றோம். இங்கு இரட்டைப் பதிவு என்னும் போது ஒரு வரவுப் பதிவுக்கு ஒரு செலவுப் பதிவு என்று மட்டும் உணர்ந்து கொண்டால் போதுமெனச் சிலர் கருதுகின்றனர். நடைமுறையில் இது தேவையை நிவிர்த்தி செய்வதாக அமைந்தாலும் இதன் பின்னணியில் ஒரு தர்க்க நியாயம் உண்டு என்பதை நாம் மறந்துவிடலாகாது.

எந்த ஒரு நடவடிக்கையிலும் ஒருவர் சில நன்மைகளைப் பெற்றால் அந்த நன்மைகளைப் பெறுவதற்காக நடைமுறையில் சமமான பெறுமதியுள்ள பிற நன்மைகளை இழக்க வேண்டும். இது ஒரு பொது நியதி. இந்த நியதியினடிப்படையிலேயே இரட்டைப் பதிவு தர்க்கிக்கப் படுகின்றது. உதாரணமாக இராமன் ஒரு புத்தகத்தை ரூபா 10 கொடுத்து வாங்குகின்றானென்றால் இங்கு இராமன் பெற்ற பயனாக பணம் ரூபா 10ம் ஆக அமைகின்றது. இங்கு ரூபா 10ஐ இழந்த பயனெனக் கருதுவதன் காரணமென்னவெனில் புத்தகத்தை வாங்காது அவன் அந்த ரூபா 10த்தை வைத்திருப்பதால் சில நன்மைகளைப் பெற்றிருப்பான். தற்பொழுது புத்தகத்தை வாங்கியதனால் அந்த நன்மைகளை இழந்து விட்டானென்பதேயாகும். எனவே இத்தர்க்கத்தை நியாயமாகக் கொண்டு நடவடிக்கையின் பெற்ற பயன் அம்சத்தை வரவிலும் இழந்த பயன் அம்சத்தைச் செலவிலும் பதிய முற்பட்டனர்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெற்ற பயன் அம்சம் | (புத்தகம்) | வரவு | 10 | |
| இழந்த பயன் அம்சம் | (காசு) | செலவு | | 10 |

இதுவே இரட்டைப் பதிவாகும்.

மேற்பார்த்த உதாரணத்தில் பெற்ற பயன், இழந்த பயன் அம்சங்கள் வெளிப்படையாக நேரடியாகத் தோன்றுகின்றன. ஆனால் இந்தப் பெற்ற, இழந்த பயன் அம்சங்கள் வெளிப்படையாகத் தோன்றாது மறைமுகமாகத் தோன்றுவதுமுண்டு. உதாரணமாக ஒருவனுக்கு சம்பளமாக ரூபா 300 கொடுக்கப்பட்டது என எடுத்துக் கொள்ளும் போது பெற்ற பயன் அம்சம் சம்பளமாகவும் இழந்தபயன் அம்சம் பணமாகவும் அமையும். இங்கு பெற்ற பயன் அம்சமான சம்பளம் மறைமுகமாகவே

பயனை வெளிப்படுத்துகின்றது. அதாவது சம்பளம் கொடுப்பதால் நாம் அவனது உழைப்பைப் பெற்றுள்ளோம். எனவே பெற்ற பயன் அம்சம் இங்கு மறைமுகமாக வெளிப்படுகின்றது. இன்னும் வருமதியாளன் ஒருவன் வருமதியை இறுக்க முடியாத நிலையில் அவனை அறவிட முடியாக் கடன் எனக் கருதிப் பதிவு செய்கின்றோம். இங்கு பெற்ற பயன் அம்சம் அறவிட முடியாக் கடனாகவும் இழந்த பயன் அம்சம் வருமதியாளனின் வருமதித் தன்மை எனவும் அமையும். எனவே-

அறவிட முடியாக் கடன்     வரவு
உரிய வருமதியாளர்     செலவு

எனப் பதிவோம். வருமதித் தன்மையை இழப்பதால் வருமதியாளன் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அறவிட முடியாக் கடன் கணக்கில் வரவு வைத்ததன் தத்துவ விளக்கம் என்னவெனில் அக் குறிக்கப்பட்ட வருமதியாளர் தருவார் எனக் கருதி நாம் பணத்தையும் நேரத்தையும் விரயமாக்காது பாதுகாத்துக் கொள்கின்றோம். இதுவே நாம் பெற்ற பயனாகும். இதனாலேயே அறவிட முடியாக் கடன் கணக்கு பெற்ற பயன் அம்சமாக கருதப்பட்டு வரவு வைக்கப் பட்டுள்ளது.

இத்தகைய விதத்தில் இரட்டைப் பதிவின் தத்துவம் தர்க்கிக்கப்பட்ட போதிலும் நடைமுறையில் இத் தத்துவத்தைக் கடைப்பிடிப்பது இலகுவானதன்று. இதனால் இரட்டைப் பதிவின் தர்க்க நியாயத்தை ஓர் அட்சர கணித சமன்பாட்டின் மூலம் அண்மையில் விளக்க முற்படுகின்றனர்.

ஒருவன் தனது உழைப்பில் இருந்து ரூபா 5000தைச் சேமித்து வைத்துள்ளான் என எடுத்துக் கொண்டால் அவனது சொத்தான ரூபா 5000 அவனுக்குரிமையானதாக அமையும். எனவே-

சொத்து = உரிமை ஆகும்.

இந்நிலையில் தனது நண்பன் ஒருவனிடம் இவன் ரூபா 1000ம் கடன் வாங்கியிருப்பானேயானால் தற்போது இவனது சொத்து ரூபா 6000 (5000 + 1000)ம் ஆகும். அதே வேளையில் நண்பனுக்கு ரூபா 1000ம் கொடுக்க இவன் பொறுப்புடையவனாவான். எனவே-

சொத்து = உரிமை + பொறுப்பு ஆகும்.

இந்த ரூபா 6000த்தை வியாபாரத்தில் ஈடுபடுத்தி 7125/= வருமானம் பெற்றிருப்பானேயானால் இவனுக்கு வருமானம் — செலவினம் (7125 — 6000) இலாபமாக கிடைத்திருக்கும். அத்துடன் சொத்து ரூபா 7125வாக அதிகரித்திருக்கும். எனவே-

சொத்து = உரிமை + பொறுப்பு + (வருமானம் — செலவினம்) ஆகும்.

இந்த சொத்து 7125ல் உரிமையாளன் தனது சொந்த தேவைக்காக ரூபா 400 பற்றியுள்ளான் என எடுத்துக் மொண்டால் சொத்து (7125 — 400) 6725 ரூபா ஆகும். எனவே-

சொத்து = உரிமை + பொறுப்பு + (வருமானம் — செலவினம்) — பற்று ஆகும்.

இச்சமன்பாட்டை தீர்ப்பின்

சொத்து + செலவினம் + பற்று = உரிமை + பொறுப்பு + வருமானம் என அமையும்.

இச் சமன்பாட்டின்படி இடது பக்கத்தில் உள்ள சொத்து, செலவினம், பற்று என்பன கணக்குப் பதிவில் வரவுப் பதிவாகவும், வலது பக்கத்தில் உள்ள உரிமை, பொறுப்பு, வருமானம் என்பன கணக்குப் பதிவில் செலவுப் பதிவாகவும் அமையும். இங்கு இடப் பக்கத்தில் உள்ள அம்சங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமாயின் வரவுப் பக்கத்தில் பதிதல் வேண்டும். குறைக்கப்படவேண்டுமாயின் அக் கணக்கின் செலவுப் பக்கத்தில் பதிதல் வேண்டும். அதே போல வலது பக்கத்தில் உள்ள அம்சங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமேயாயின் அக் கணக்குகளின் செலவில் பதிதல் வேண்டும். குறைக்கப்பட வேண்டுமாயின் வரவில் பதிதல் வேண்டும். இதனை பின்வரும் பட்டியலால் விளக்கலாம்.

சொத்து செலவினம் பற்று = உரிமை பொறுப்பு வருமானம்

| வரவு | | செலவு | |
|---|---|---|---|
| **சொத்து** | | **உரிமை** | |
| வரவு | செலவு | வரவு | செலவு |
| + | − | − | + |
| **செலவினம்** | | **பொறுப்பு** | |
| வரவு | செலவு | வரவு | செலவு |
| + | − | − | + |
| **பற்று** | | **வருமானம்** | |
| வரவு | செலவு | வரவு | செலவு |
| + | − | − | + |

மேற்காட்டியபடி வரவு செலவுப் பதிவுகள் இடம் பெறும். ஆனால் இதில் மேலும் சில விபரங்கள் அவதானிக்கப்பட வேண்டும்.

சொத்து என்ற கருத்தில் நிலையான சொத்துக்கள், முதலீடுகள், நடைமுறைச் சொத்துக்கள் அடங்கும். நடைமுறை சொத்தை எடுத்து பார்க்கின்ற பொழுது எமது சொத்தை நாம் கடனுக்கு ஒருவருக்கு விற்றால் அந்த நபர் வருமதியாளர் என்ற முறையில் எமக்குச் சொத்தாகின்றார். உதாரணமாக 6000 ரூபாவிற்கு கொள்வனவு செய்த சரக்கு ரொக்க விற்பனையாக ரூபா 5000 த்துக்கும் கடன் விற்பனையாக ரூபா 2125க்கும் விற்றால் ரொக்கமும் வருமதியாளரும் சேர்ந்தே ரூபா 7125 சொத்தாக அமையும். எனவே வருமதியாளரும் சொத்தாகும்

செலவினம் என்னும் பொழுது இது சம்பளம், கூலி, வாடகை, வட்டி, விளம்பரம் போன்ற செலவினங்களையும் அறவிடமுடியாக் கடன், கொடுத்த கழிவு போன்ற நட்டங்களையும் அடக்கும்.

உரிமை என்னும் பொழுது இது நிலையான உரிமை, திரள் உரிமை என வேறுபடும் நிலையான உரிமை ஆரம்ப மூலதனமாகவும், திரள் உரிமை செலவுகளுக்கு மீறிய வருமானமாகிய தேறிய இலாபமாக அதாவது ஒதுக்காக அமையும்.

பொறுப்பு என்னும் பொழுது நீண்ட கால பொறுப்பு, நடைமுறைப் பொறுப்பு என வேறுபடும். இதில் நடைமுறைப் பொறுப்பினை எடுத்துப் பார்க்கின்ற பொழுது குறுங்காலத்துக்குள் செலுத்தும் அடிப்படையில் கடனுக்கு கொள்வனவு செய்த சரக்கின் உரிமையாளர் அதாவது சென்மதியாளர் எமக்குப் பொறுப்பாக அமைவர். எனவே இந்த நிலைமைகளை அடக்கி சமன்பாட்டை வரையும் போது

நிலையான சொத்து
முதலீடுகள்
வருமதியாளர் - நடைமுறைச் சொத்து } சொத்து

உரிமை { நிலையான உரிமை (மூலதனம்)
திரள் உரிமை (ஒதுக்கு)

செலவினம்
நட்டம் } செலவினம் = பொறுப்பு { நீண்டகாலப் பொறுப்பு
நடைமுறைப் பொறுப்பு - சென்மதியாளர்

பற்று வருமானம்

என அமையும்.

மேற்பார்த்த சமன்பாட்டினை கணக்குப் பதிவுப் புத்தகங்களினூடாக அவதானிக்கின்ற பொழுது உருவாகக் கூடிய அனைத்து கணக்குகளையும்

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY



1. நபர் கணக்குகள்

2. நபரில் கணக்குகள் என பகுக்கலாம் அதாவது வியாபார நிறுவனம் சரக்கு விற்பனையை அடிப்படையாகக் கொண்டு அமைவதனால் அச் சரக்கினைக் கடனுக்கு வாங்குபவர் வருமதியாளர் நபராகவும், அச் சரக்கினை நாம் கடனுக்குக் கொள்வனவு செய்யும் போது சென்மதியாளர், நபராகவும் கருதப்படுகின்றார். கணக்கியல் விளக்கப்படி இவர்களே நபர்களாகக் கருதப்படுவதால் மற்றைய அம்சங்கள் அனைத்தும் நபரில் கணக்காகவே கருதப்படுகிறது

நபரில் கணக்கையும் இரு பிரிவாகப் பிரிக்கலாம்.

1. மெய் கணக்கு

2. பெயரளவுக் கணக்கு. அதாவது நபரில்லாத கணக்குகளுள் சில மெய்யானவையாக, கண்ணால் பார்த்து தொட்டு அனுபவிக்கக் கூடியதாக அமைகின்றன. உதாரணமாக காணி, கட்டிடம், தளபாடம் போன்றவற்றைக் கூறலாம். ஆனால் மற்றையவை பெயரளவிலேயே கணக்குகளாக அமைகின்றன. இவற்றைப் பார்த்து அறிய முடியாது. உதாரணமாக உரிமைகள், செலவினங்கள், பொறுப்புக்களைக் கூறலாம். எனவே மேற்பார்த்த நோக்கில் சமன்பாட்டுக்குள் அடங்கிய அம்சங்கள் அனைத்தையும் மேற்பார்த்த மூன்று கணக்குகளுக்குள் அடக்கலாம். இதனைப் பின்வரும் பட்டியல் மூலம் அவதானிக்கலாம்.

| வரவு | | | | செலவு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நிலையான சொத்து | | முதலீடு | | நிலையான உரிமை | | திரள் உரிமை (ஒதுக்கு) | |
| வரவு | செலவு | வரவு | செலவு | வரவு | செலவு | வரவு | செலவு |
| + | − | + | − | − | + | − | + |
| நடைமுறைச் சொத்து | | வருமதியாளர் | | நீண்டகால பொறுப்பு | | நடைமுறை பொறுப்பு | |
| வரவு | செலவு | வரவு | செலவு | வரவு | செலவு | வரவு | செலவு |
| + | − | + | − | − | + | − | + |
| செலவினம் | | நட்டம் | | சென்மதியாளர் | | வருமானம் | |
| வரவு | செலவு | வரவு | செலவு | வரவு | செலவு | வரவு | செலவு |
| + | − | + | − | − | + | − | + |
| பற்று | | | | | | | |
| வரவு | செலவு | | | | | | |
| + | − | | | | | | |

| நபர் கணக்கு | மெய்க் கணக்கு | பெயரளவிற் கணக்கு | |
|---|---|---|---|
| வருமதியாளர் | நிலையான சொத்து | செலவினம் | உரிமை |
| சென்மதியாளர் | முதலீடு | நட்டம் | பொறுப்பு |
| | நடைமுறைச் சொத்து | பற்று | வருமானம் |

இப்பகுப்பின்படி நபர் கணக்குகள் பின்வருமாறு பதிவு செய்யப்படும். நிறுவனத்திடம் இருந்து நபர் பெறுபவராக இருப்பின் அந் நபர் கணக்கு வரவாகவும் நிறுவனத்துக்கு கொடுப்பவராக அமையின் அந் நபர் கணக்கு செலவாகவும் அமையும்.

மெய் கணக்குகளை பொறுத்த வரையில் நிறுவனத்துக்கு உள்வரும் பொழுது அந்த மெய்க்கணக்கு வரவுப் பதிவாகவும் நிறுவனத்தை விட்டு வெளியேற்றப்படும் போது அம் மெய்க்கணக்கில் செலவிலும் பதிவு செய்யப்படும்.

பெயரளவுக் கணக்கை பொறுத்த வரையில் பெயரளவுக் கணக்கம்சங்கள் செலவினம், நட்டம் பற்றுக அமையின் வரவுப் பதிவாகவும் அப்பெயரளவு அம்சம் உரிமை, பொறுப்பு, வருமானமாக அமையின் செலவுப் பதிவாகவும் அமையும். ஏனெனில் இரட்டைப் பதிவு விரிவாக்கப்பட்ட நிலையில் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் பிரத்தியேகமான ஒரு கணக்கு தயாரிப்பது நடைமுறையில் உள்ளது. இதன் அடிப்படையில் மேற்பார்த்த விளக்கம் இரட்டைப்பதிவின் மூன்று பொன் விதிகள் என வர்ணிக்கப்படுகின்றது.

| கணக்குகளின் வகை | வரவுப் பதிவு | செலவுப் பதிவு |
|---|---|---|
| 1. நபர் கணக்கு | பெறுபவர் | கொடுப்பவர் |
| 2. மெய் கணக்கு | உள் வந்தால் | வெளியேற்றப்பட்டால் |
| 3. பெயரளவுக் கணக்கு | செலவினம் நட்டம் பற்று | உரிமை பொறுப்பு ஒதுக்கு வருமானம் |

இந்த நிலையில் இரட்டைப் பதிவு தர்க்கிக்கப்பட்டு நியாயம் கூறப்பட்ட போதிலும் நடைமுறையில் தொடர்ச்சியான பயிற்சி பதிவினை விளங்கிக் கொள்ள இலகுவானதாக அமையும் என்பது பலரின் அபிப்பிராயமாகும்.

*With the best Compliments of*

**ceyma**

**SILK INDUSTRIES LTD**

**Manufacturers of Pure Silk, Rayon Synthetic & Cotton Textiles**

Factory
Thirunelvely
**JAFFNA.**
*Telegrams: "CEYMASILK"*
*Telephone: 7170*

Office
No, 100, Bankshall Street,
**COLOMBO-11**
*Telephone: 35910*

# Jaffna Municipality
# M. P. C. S. Limited.

*Provides the Following Services – to the People of Jaffna.*
*Through Its.*

CONSUMER SECTION.
CO-OP. RURAL BANK.
NATIONAL MILK BOARD. AGENCY.
TEXTILE POWER LOOM FACTORY.
CO-OP. HOSPITAL ETC. ETC.

74/3, Alfred Duraiappah Road,
JAFFNA.

Phone: **350**

*Please Visit*

# RAJU STORES

## For Your Requirements of

Milk Foods. Toilet, Fancy, Sports Goods
Glass – Enamal & Plastic – Wares
Rice Hullers, Grinders & their Spare Parts
Electric Motors, Electric Accessories
All Kinds of Essences, Food Colours and
other Sundry Goods Etc. Etc.

*67, & 69, Kasthuriar Road,*
*"RAJU BUILDING"*
**JAFFNA.**

*Phone: 372*

*Grams: "RAJU"*

மாணவ மணிகளே!

ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்த
ஒளி நிலையம் காத்திருக்கிறது.

*B. A., B. Com., G. A. Q.,*
*G. C. E. O/L G. C. E. A/L*

ஆகிய வகுப்புகளுக்கு பயிற்சி பெற்ற விரிவுரையாளர்களினால்
பாடநெறிகள் புகட்டப்படும் நிலையம்

# பிறைற் சென்ரர்

முக்கிய குறிப்பு

*1976ல் நடந்த க. பொ. த. பத்திர உயர்தரப் பரீட்சையில் கூடியளவு மாணவர்களை சித்தி பெறச் செய்து பல்கலைக் கழக நுளைவுக்கான வாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்துள்ளது எமது நிலையம்.*

134, கந்தர்மடம் சந்தி,

**யாழ்ப்பாணம்.**

---

வணிக மாணவ மன்றத்திற்கு எமது நல்லாசிகள்

உங்களுக்குத் தேவையான சகலவிதமான
பிடவைத் தினிசுகளுக்கு விஜயம் செய்யுங்கள்

# ஓம் டெக்ஸ்

49, நவீன சந்தை, **யாழ்ப்பாணம்.**

தலைமை ஸ்தாபனம்:

**பெஹறிஸ் சில்க் ஸ்ரோர்ஸ்**

159, காங்கேசன்துறை வீதி,

**யாழ்ப்பாணம்.**

வணிக மன்றத்துக்கு ஆசிகள் பல....

மங்களகரமான வைபவங்களுக்கு

எம்மிடம் தொடர்பு கொள்ளவும்

# சோதி பேக்கரி


**பொற்பதி வீதி, கொக்குவில்.**

---

அன்பளிப்பு

**ஜெயம் நகைமாளிகை**

அச்சுவேலி



மங்களகரமான வைபவங்களுக்குத்
தொடர்புகொள்ளவும்

---

அன்பளிப்பு

ஆடைஅலங்காரத்தில் நாட்டமிகு
அனைவரும் நாடுவது

**"பூமா புடவை வியாபாரம்"**

அங்கு

எண்ணத்திற் கேற்ற மோஸ்தர்
விலைக்கேற்ற தரம்

தேர்ந்தெடுப்பதற்கேற்ற ரகங்கள்
அத்தனையும் உண்டு

**பூமா ரெக்ஸ்ரைல்ஸ்**

நெல்லியடி கரவெட்டி

கவர்ச்சியான, அழகான, முறையில் படம் பிடிப்பவர்கள்!

★ பாஸ்போட் ★ அறிமுக அட்டை ★ போஸ்காட்

★ சகல மங்களகரமான வைபவங்களுக்கான படங்கள் எடுக்க ★

நீங்கள் தொடர்பு கொள்ளும் ஸ்தாபனம்

# பாரத் ஸ்ருடியோ

82/1 கஸ்தூரியார் வீதி,

**யாழ்ப்பாணம்.**

போன்: 252 Phone: 252

வணிகமலர் சிறப்புடன் மலர வாழ்த்துகிறோம்.

★ B. Com.

★ B. A.

★ G. A. Q.


★ G. C. E. A/L & O/L.

# BRILLIANT INSTITUTE

Sivanpannai Road,

**JAFFNA.**

வணிக மாணவர் மன்றம் 1976 - 1977
செயற்குழு உறுப்பினர்கள்



நிற்பவர்கள்: (இ. வ.) (முதல் வரிசை) வே. ஞானசூரியர், இ. கனேசலிங்கம் (உ. செயலாளர்), ச. சந்திரயோகன், தி. கணேசராஜா, த. சிவானந்தன்

(இ. வ) (இரண்டாவது வரிசை) ஆ. தெய்வேந்திரன் (பொருளாளர்), யோ. மரியநாயகம், சி. குலசபாநாதன், த. ராஜ்மோகன், செ. செல்வகுமார், ந. வேலாயுதம் (உ. தலைவர்), ஆ. பி. மரியசீலன் (துணைப் பத்திராதிபர்), க. கருணாநிதி, செ. சிறீஇந்திரன், க. ஆனந்தராஜா, அ கேதீஸ்வரன், சி. நா. இராஜநாயகம் (உ. பொருளாளர்), த. சண்முகசுந்தரமூர்த்தி

இருப்பவர்கள் (இ. வ.) சி. றூபா, இ. பரமேஸ்வரி, சி. மாலதி (பத்திராதிபர்), மு. நா யோகராஜா (செயலாளர்), வே. து. பாக்கியநாதன் (ப. வ. து: தலைவர்), சி. இராஜேந்திரா (உப அதிபர்), சீ. டா. ஜெயசிங்கம் (அதிபர்), பொ. பாக்கியராஜா (தலைவர்), இ. வதனராணி, சு. ஸ்ரீரமணி, த. ஞானேஸ்வரி

# ஈழத்து ஆக்க இலக்கியத் துறைகளிற் பெண்களின் பங்கு

மனோன்மணி சண்முகதாஸ் *B. A. (Hons.)*

## ஈழத்து ஆக்க இலக்கியப் பின்னணி

தமிழிலக்கிய வரலாற்றிலே 19-ம் நூற்றாண்டின் சில புதிய போக்குகள் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணங்களாக அமைந்தன. அந்தப் புதிய போக்குகளிற் சில ஈழத்திலும் காணப்பட்டன. ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றினது ஆரம்பகாலமாகவும் இக்காலத்தைக் கொள்ளலாம். 19-ம நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் ஈழத்திலே நிலவிய அரசியல், சமய, சமூகக் காரணிகள் இப்புதிய போக்குகளை உருவாக்குவதற்கு முக்கியமானவையாயமையினும், பிற நாட்டவரது வருகைதான் இக் காலப்பிரிவினை இனங்கண்டு கொள்வதற்குத் துணைசெய்ததெனலாம்.

ஈழத்தின் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் ஆட்சி செய்த காலத்தில் இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைக் காண முடியாதிருக்கின்றது. ஆனால் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இவ் வளர்ச்சியின் ஆரம்பத்தினையும் அதன் சிறப்பினையும் உணர முடிகின்றது. கிறிஸ்தவ மதப்பரம்பலும் மதப் போதகர்களது தொண்டும் அவர்களது சமயப் பரம்பலுக்கு மட்டுமன்றி இலக்கிய விழிப்புணர்வுக்கும் காரணங்களாயின. கிறிஸ்தவப் போதகர்களது கல்வியறிவு மக்களைக் கவர்ந்தது. போதனை மூலம் சமயக் கருத்துக்களைப் பரப்புவதற்காகப் பாடசாலைகளை அவர்களமைத்து நாட்டில் கல்வியறிவினைப் பரப்பினர். இதனால் ஆங்கிலக் கல்வி மட்டுமன்றித் தாய் மொழிக் கல்வியும் வளரத் தொடங்கியது.

இக் காலச் சூழ்நிலையில் ஈழத்தில் குறிப்பிடத்தக்கவராக நாவலர் சமயப் பணியிலீடுபட்டது மட்டுமன்றி இலக்கியப் பணியிலும் ஈடுபட்டுத் தொண்டாற்றினார். அவருக்குப் பின் அவரது பரம்பரையினரான சி. வை. தாமோதரம்பிள்ளை, சபாபதி நாவலர், காசிவாசி செந்திநாதையர், கதிரைவேற்பிள்ளை, குமாரசாமிப்புலவர் போன்றோர் பிற்பட்ட காலங்களில் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்தனர். நாவலர் 1823-ல் பிறந்தவர். குமாரசாமிப் புலவர் 1922-ல் மறைந்தவர். இவ்விடைப்பட்ட நூற்றாண்டுக் காலத்தில் ஈழம் இலக்கிய வளர்ச்சியில் தென்னகத்திற்கே வழி காட்டிய பெருமை பெற்றிருந்தது. இக் காலப் பகுதியில் இலக்கியப் பணியிலே பெண்களெவரும் பங்கு கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் 1914-ல் தெல்லிப்பளை மங்களநாயகம் தம்பையாவின் நொருங்குண்ட இருதயம் என்ற நாவல் ஈழத்து முதல் பெண் எழுத்தாளரது நாவலாக வெளிவந்தது.

இதுவரை காலமும் ஈழத்து இலக்கிய வளர்ச்சியிலே பெண்களது பணி ஏற்படாமைக்கும் இப்போது ஏற்படுவதற்கும் சில காரணங்களைக் குறிப்பிடலாம். கிறிஸ்தவ மதப் பரம்பலுக்காக ஏற்பட்ட கல்விச் சீர்திருத்தங்களின் பலனாகப் பெண் கல்வியும் அக்காலத்தில் நாட்டில் வளரத் தொடங்கியது. "தேச முன்னேற்றத்திற்குப் பெண் மக்களும் காரணர்"[1] என்ற கருத்து இக்காலத்திற் பரவத் தொடங்கியது. ஈழத்திலே இக் கருத்துக்குச் சாதகமாயும் பாதகமாயும் பல கருத்து மோதல்கள் ஏற்பட்டன. கிறிஸ்தவ சமயத்தின் கொள்கைகளால் இதுவரை பெண்களைப் பொறுத்தவளவில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த சில மூட நம்பிக்கைகளும் சமுதாய மரபுகளும் மறையத் தொடங்கின. இந்த மரபுகள் அழியவே பெண்களும் சுதந்திரமாக நாட்டு நடப்புக்களில் பங்கு பற்றக் கூடிய வாய்ப்புக்களேற்படத் தொடங்கின. பெண் கல்வி வளர்ச்சிக்காகப் பல பாடசாலைகளும் நிறுவப்பட்டன.

இக் கருத்தினை ஈழத்துப் பெண் நாவலாசிரியையான மங்களநாயகம் தம்பையா தமது நாவலின் முன்னுரையிற் குறிப்பிட்

டிருக்கும் செய்தியுடன் இணைத்துப் பார்க்கும்போது அக்காலத்திய சூழ்நிலையை நாம் தரிசிக்க முடிகின்றது.

"சன்மார்க்க சீவியத்தின் மாட்சிமையை உபதேசத்தால் விளக்குவதிலும் உதாரணங்களால் விளங்குவது மிகவும் நன்மை பயத்தற்கேதுவாகுமென்றெண்ணி இக் கதையை எழுதத் துணிந்தேன்...... ... இக் கதையை வாசிக்கிறதனல் ஒரு ஆத்மாவுக்குத்தானும் அருட்சியுண்டாகுமாயின் அதன் மகிமை கருணை நிறைந்த எம் பெருமானுக்கேயுரியது."[2]

இவ்வாறு சமயக் கல்வியும் சமூகச் சீர்திருத்தங்களும் பெண்களை ஆக்க இலக்கியத் துறையிலே ஈடுபடுத்தினவெனலாம்.

## பெண் எழுத்தாளர்களின் பங்கு:-

ஈழத்து ஆக்க இலக்கிய வளர்ச்சியிலே பெண்களது பங்கு பற்றி ஆராயுமிடத்து அவர்களது பங்களிப்பு மிகக் குறைவானதென்று அறியக்கிடக்கின்றது.

"எழுத்துத் துறையிலே பெண்களுடைய முயற்சிகள் திருப்தி தரத்தக்கதாக இல்லை. எழுத்துத் துறையிலே தென்னகப் பெண்மணிகள் முன்னணியில் நிற்கிறார்களென்பது உண்மையாகும். தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் எந்தப் பத்திரிகையையோ விசேட வெளியீடுகளையே புரட்டிப் பார்த்தால் நாம் எத்தனையோ தரமான எழுத்தாளர்களைச் சந்திக்க முடிகின்றது. ஆனல் ஈழத்தில் பல்கிப் பெருகியுள்ள பட்டதாரிகள், தமிழாசிரியைகளென்னும் பகுதியிலிருந்து கூட விரல் விட்டு எண்ணக்கூடிய எழுத்தாளர்கள் தாமும் தோன்றவில்லை"[3] என்று

கூறும் ஈழத்திலக்கிய வளர்ச்சி நூலாசிரியரான கனகசெந்திநாதனது கருத்தோடு மாறுபடுவதற்கும் சில காரணங்களுண்டு. பாரதியுகத்தில் பெண்ணுக்குச் சுதந்திரம் பெருமளவு வழங்கப்பட்ட போதிலும் ஏன் மேலை நாடுகளைப் போல கீழைநாட்டுப் பெண்களுக்கு எழுத்துச் சுதந்திரம் கிடைக்கவில்லை. குடும்பத் தொல்லைகளையும் பொறுப்புக்களையுமே தனது முக்கிய காரியங்களாகப் பெண் கருதி வந்தாள். அந்த எண்ணத்தைச் சர்வதேச மகளிர் ஆண்டுப் பிரகடனம் கொஞ்சமாவது குறைத்தாலும் இன்னும் பெண்களினது பொறுப்புக்கள் ஆரம்பத்திற் குறிப்பிட்ட நிலையிலேயே இருக்கின்றன. இலங்கை போன்ற சிறிய நாட்டிலே பொருளாதார வளத்தை நாடி உழைக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் இவர்களுக்கு இலக்கியப் பணிக்கேற்ற சூழல்களும் இல்லாதொழிந்தன.

எனினும் கல்வியறிவு படைத்த ஒரு சில பெண்கள் ஆக்க இலக்கியத்துறைகள் சிலவற்றில் தமது பங்களிப்புக்களைச் செய்துள்ளனர். இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியிலே பெண் கல்வியானது,

"இல்லற வாழ்க்கையின் பரம்பரை வழக்கங்களைத் தகர்த்து வழமையாக அவர்களுக்கென ஒதுக்கப்படும் கடமைகளைச் செய்வதற்கு முடியாதவர்களாகவோ அல்லது செய்ய விருப்பமற்றவர்களாகவோ பெண்களை ஆக்கிவிடும்"[4]

என்ற கருத்தில் ஈழத்தில் பெண் எழுத்தாளர் தோற்றம் பெறவில்லை யெனலாம்.

மதச் சார்பினடிப்படையில் கல்வியறிவு வளர்ச்சியடைந்த காலக் கட்டத்தில் பெண்களின் அறிவு விருத்தியடைந்ததைக் காண முடிகின்றது. கிறிஸ்தவ மிசன் பாடசாலைகளே இதற்குக் காரணமெனத் தோன்றுகிறது. ஆண்களிலும் பார்க்கப் பெண்களே கிறிஸ்தவ மதக் கொள்கைகளுக்கமைய பற்றுடன் ஒழுகியபடியால் ஆரம்பத்திலிருந்தே மிசனிமார் பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். அத்துடன் கிறிஸ்தவ மதத்தின் மீது பெண்களுக்கிருந்த அன்பும் பற்றும் வாழ்க்கையின் பின்னும் மத வழக்கங்களுடன் நன்கு இணங்கியிருந்தன.[5]

இத்தகையதொரு காலப் பின்னணியிலே ஈழத்துப் பெண்களின் ஆக்க இலக்கியப் பணியின் ஆரம்பத்தினையும், நாம் இனங் கண்டுகொள்ள முடிகின்றது. ஈழத்து முதற் பெண் நாவலாசிரியரான மங்களநாயகம் தம்பையா இத்தகையதொரு சூழலிலிருந்தே தோன்றினர். இவரெழுதிய நாவலாகிய நொறுங்குண்ட இருதயம் சென்னைக் கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தின் ஆதரவில் வெளியிடப்பட்டது. இவர் இதைவிட அரியமலர் என்ற நாவலையும், அனுபவக் களஞ்சியமென்ற கட்டுரைத் தொகுப்பினையும் எழுதியுள்ளார். இவ்விரண்டு நூல்களும் கிறிஸ்தவ சமயப் பின்னணியில் யாழ்ப்பாணத்துச் சமூகத்தைச் சித்தரித்துக் காட்ட முற்பட்டுள்ளன. இவரது முகவுரை இதனை வலியுறுத்தி நிற்கிறது. இவரது அனுபவக் களஞ்சியம் என்ற கட்டுரைத் தொகுப்பு ஆக்க இலக்கியப் பணியிலீடுபட்ட ஈழத்துப் பெண் எழுத்தாளரான இவரது நோக்கத்தைப் புலப்படுத்துகின்றது.

''அனுபவக் களஞ்சியம்'' என்னும் இச் சிறிய புத்தகத்தின் முழுநோக்கமும் நம் சகோதரிகள் கிறிஸ்துவின் அன்பில் வளர்ச்சியடையத் தெண்டிக்க வேண்டும் என்பதும் தம் நாட்டிற்குக் தமக்கும் நன்மை பயக்கும் நோக்கங் கொண்டு தேசபத்தியை வளர்க்குங் காரியங்களில் தம் மனதைப் பதிய வைக்க வேண்டும் என்பதுவுமே. நம் சிறந்த நாட்டில் நன்கு வாசித்தும் கற்றும் உலக காவியம் சீர் திருத்தம் முதலியவற்றிற் செவ்வனே தேர்ந்த அநேக சீமாட்டிகளிருக்கின்றனர். அவர்கள் தாம் கற்றவாறும் அறிந்தவாறும் கிறித்துவமார்க்க வளர்ச்சிக்குரிய காரியங்களில் மற்றோர்க்கு உபயோகமாயிருக்க முன்னேறி வரத் தெண்டிக்க வேண்டுமென்பதே நமது வாஞ்சை.[6]

படித்த பெண்கள் பலர் இக் காலத்திலிருந்த போதும் இலக்கியப் பணியிலோ அன்றேல் கருத்து வெளிப்பாட்டிலோ அவர்கள் கவனஞ் செலுத்தாமையும் இதனால் நன்கு புலப்படுகிறது. தமது காலத்துப் பெண்களது மனோபாவத்தையும் அதே நேரத்தில் தனது எழுத்துப் பணியின் நோக்கத்தையும் புலப்படுத்திய மங்கள நாயகம் தம்பையா ஈழத்துப் பெண்களில் ஆக்க இலக்கியப் பணியில் முன்னோடியாகத் திகழ்கின்றார்.

''இவருக்குப் பின்னர் இத்துறையிலீடுபட்ட பெண்மணியாக இராசதுரை என்னும் நாவலை எழுதிய செ. செல்லம்மாளைக் குறிப்பிடலாம். இவரெழுதிய இராசதுரை என்னும் நாவல் 1924-ல் வெளியானது. துணிந்தெழுதிய முதல் நாவலாசிரியை என்றபடியாலும் தொகையில்லாவிட்டாலும் கதைத் தன்மையிற் பொறுமை காணமுடியுமென்பதாலும் தமிழ் நாட்டுக் கோதை நாயகியாருடன் இந்த அம்மையாரை ஒப்பிடுவது தவிர வேறெதுவும் சொல்வதற்கில்லை'[7]

என்ற சில்லையூர் செல்வராசனின் கருத்து இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது. 1914-ல் எழுதிய மங்களநாயகம் தம்பையாவை விடுத்து அவர் செல்லம்மாளை ஈழத்து முதல் நாவலாசிரியை எனக் குறிப்பிட்டுள்ளார். ஏறக்குறைய இராசதுரை 10 ஆண்டுகளுக்குப் பின்னர் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் நாவலின் கருத்தமைதியில் நொருங்குண்ட இருதய நாவலின் பண்பினை இராசதுரையிலும் காண முடிகின்றது. இதனை நாவலாசிரியையான செல்லம்மாளின் கூற்றினைக் கொண்டறிய முடிகிறது.

''வாசிப்பவர்களின் இருதய கமலத்தை நல்வழிப் படுத்தவும் அதிருசிகரமான ''இராசதுரை'' என்னுமிக் கதை துர்த்தர் துட்டஸ்திரி முதலியோரின் கொடிய சிந்தனையையும் அவர்களின் மர்மமான செய்கைகளையும் நன்கு வெளிப்படுத்தி அப்படிப்பட்ட பாவிகளோடு கூட்டுறவு செய்யாமலும் வார்த்தையாடாமலும் அவர் திருஷ்டி கோசரம் செய்யாமலும் புத்தி சாதுரியத்தால் விலக்கி சற்சங்கத்தால் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் செவ்வனேயடைந்து வாழும்படி என் சிற்றறிவிலுதித்த அனுபவத்தைக் கொண்டு நலமாக எழுதப்பட்டது''[8]

இதன் மூலம் மங்களநாயகம் தம்பையாவினால் ஆரம்பிக்கப்பட்ட எழுத்து மரபையே இவரும் பின்பற்றினார் என்பது தெளிவாகின்றது.

1929-ல் அ. இராசம்மாள் என்ற நாவலாசிரியை சரஸ்வதி அல்லது காணாமற் போன பெண்மணி என ஒரு நாவலை எழுதியதாக அறியப்படுகின்றது.[9]

நாவலின் பிரதி இல்லாமையினால் அதன் பண்பினைப் பற்றியும் ஆசிரியரது தனித்துவம் பற்றியும் எழுத்துப் பற்றியும் எதுவும் குறிப்பிட முடியாதிருக்கின்றது.

இதன் பின்னர் சிலகால இடைவெளிக்குப்பின் 1950 அளவில் ஈழத்துப் பெண்களது இலக்கியப் பணி ஆரம்பிக்கின்றது. 1950-ம் ஆண்டில் மா. மங்களம்மாள் தமிழ் மகள் என்ற பத்திரிகையை நடத்திப் பணியாற்றினார். இப் பத்திரிகையில் பல பெண் எழுத்தாளர்கள் கட்டுரைகள் எழுதிப் பணி செய்தனர். இதற்கு முக்கிய காரணமாக அக்காலத்துச் சூழ்நிலையைக் குறிப்பிடலாம். ''தேச முன்னேற்றத்திற்குப் பெண் மக்களே காரணர்'' என்ற கருத்துப் பரவத் தொடங்கிய காலமிது.[10] மா. மங்களம்மாளுடைய கட்டுரைகள் பெண்களின் உணர்வினைத் தூண்டக்கூடியதாக இருந்தன.

''ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டின் பெண்மணிகட்கிடையே காணக்கிடக்கின்றது. ஆண்களிடத்தில் இருந்து பெருங் காரியங்களை வேண்டி நிற்காதவோ அல்லது எதிர்பாராதவோ நாட்டில் ஆண்கள் எளியவர்களாகின்றனர். அன்றியும் தனித்தனியான புருஷர்களிடமிருந்து இயற்கைக்கு விரோதமான உயர்வை ஒரு பெண் எதிர்ப்பாளேயானால் அவன் மிக

*With the Best Compliments of*

# A. K. S. & SONS

# Jewel House

68, Kannathiddy, **JAFFNA.**

Phone:- **519**

மெலிந்தவர்கள் பொலிய
பொலிந்தவர்கள் இன்னும் பொலிய
ஊட்டம் தரும் உணவுகளுக்கு
சிறந்த இடம்

ஒரே இடம்
இதோ

**' ஸ்ரீ முருகன் கபே"**

[ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்]

திருநெல்வேலிச் சந்தி.

சித்திரம் சித்தரித்துக் காட்டும்
சித்திரகலா படம் பிடித்துக் காட்டும்
சகல வித படப்பிடிப்புத் தேவைகட்கு
நீங்கள் விஜயம் செய்ய வேண்டிய
ஒரே இடம்

**சித்திரகலா**

*70, K. K. S. Road,*

சுண்ணுகம்.

வும் எளியவனுகின்றுன். இதற்காகவே பெண்ணுனவள் தனது சொந்த அபிப் பிராயத்தை வெளியிடுவதற்கு வேண்டிய சௌகரியங்களை அவளுக்குச் செய்து கொடுப்பது அவசியம்.[11]

இவ்வாறு மங்களம்மாளுடைய கட் டுரைகளால் கவரப்பட்டுப் பல பெண் எழுத்தாளர்கள் கட்டுரைகள் எழுதத் தொடங்கினர். 1950க்குப் பின்னர் படிப் பும் அடக்கமும் கொண்ட சில பண்டிதைகள் நீண்ட கட்டுரைகள் வாயிலாகத் தமது பணியை ஆரம்பித்தனர். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் பண்டிதை வேத நாயகி, சத்தியதேவி துரைசிங்கம் என்பவர் களாவர். சத்தியதேவி அவர்கள் சமயத் தத்துவக் கட்டுரைகளை எழுதிய போதும் அவற்றினை அக்காலத்தின் போக்கோடு இணைத்துக் காட்டினுர்.

''மனித நீதியை விற்றுப் பணத்தையும் ஆன்ம சிந்தனைகளை விற்றுச் சுகபோகங் களையும் விலைக்கு வாங்கும் மேல் நாட்டு நாகரீகம் வெகு துரிதமாகப் பரவிய போதும் நமது பண்பாட்டை முற்ருக அழித்துவிட முடியவில்லை. காரணம் நமது தாய்மார்களின் உறுதிப்பாடே யாகும். இனியும் உறுதி தவருது நின்று நமது வாழ்க்கைத் தத்துவங்களை உல குக்கு எடுத்துக் காட்டுவது அவசிய மாகின்றது.''[12]

என்ற இவரது கருத்து பெண்களைப் பற்றி அவருக்கிருந்த அபிப்பிராயத்தினைப் புலப்படுத்துவதுடன் மட்டுமன்றி மேல் நாட்டுக் கலாசாரத்தின் தாக்கம் பெண் களைப் பலவீனத்துக்களாக்காத ஒரு நிலை யையும் காட்டி நிற்கிறது. இவரோடு பண் டிதை வேதநாயகியும் கருத்தில் ஒற்றுமைப் பட்டு நிற்கின்ருர்.

பெண்களைப் பற்றிய கருத்துக்களைச் சாடிப் பல கட்டுரைகளை எழுதியவர் பண்டிதைக. இராஜேஸ்வரி, ''பெண்ணறிவு என்பது பெரும் பேதமைத்தே'' என்னும் வீண் கொள்கை இடைக் காலத்தில் தான் தமிழ்நாட்டில் ஏற்பட்டதென்று கூறினுர். இவரது கட்டுரைகள் பெண்களின் சீர்திருத் தத்தினை வலியுறுத்துகின்றன.

''தமிழ் நாட்டுப் பெண்கள் சிலரின் ஆங் கில நாகரீக மோகம் இன்று தமிழ் வளர்ச்சிக்கும் தமிழர் நாகரீக உயர்ச்சிக் கும் இடையூருகவுள்ளது.''[13]

என்ற இவரது கூற்று இவர் காலத்தில் பெண்களின் பண்பாட்டில் ஏற்பட்ட மாற் றத்தைப் புலப்படுத்தி நிற்கின்றது. இவ் வாறு கட்டுரைகள் வாயிலாக வளர்ந்த இலக்கியப் பணியிஞேடு ஒரு புலவரின் மகளும் இளமுருகனுரின் மனைவியுமான பண்டிதை பரமேஸ்வரியின் பணி சிறிது வேறுபட்டமைந்தது. அவர் நாமகள் புகழ் மாலைக்கு அரியதோர் உரை எழுதியதுடன், கதிரைச்சிலேடை வெண்பா விருத்தியுரை யும், சிறுவர் செந்தமிழுக்கு பதவுரை உரையும் எழுதியுள்ளார். இவற்ருேடு மங்கையற்கரசியார் என்னும் நாடகத்தை யும், கதிரைமுருகன்கலிப்பாவையும் இயற்றியுள்ளார். இவர் பணி ஈழத்துப் பெண்களின் இலக்கியத் துறையினை அணி செய்கிறதெனலாம்.''

எனினும் 1960க்குப் பின்னர் ஈழத்துப் பெண்களின் பங்கு சிறுகதை நாவல் துறை களில் ஓரளவு குறிப்பிடத்தக்கதாகவுள்ளது. முதலில் சிறுகதைகளை எழுதிப் பின்னர் நாவல்கள் எழுதிய பல பெண் எழுத்தாளர் கள் இக்காலத்திற் தோன்றியுள்ளனர். பாலேஸ்வரி, அன்னலட்சுமி இராசதுரை இருவரும் இங்கு குறிப்பிடத்தக்கவர்கள். பாலேஸ்வரி எழுதிய முதல் நாவலான சுடர்விளக்கு வீரகேசரியால் தொடர் கதையாக வெளிவந்து அக்கால வாசகரது பாராட்டினைப் பெற்றது. தொடர்ந்து நினைவு நீங்காதது, உள்ளக்கோயில், எங்கே நீயோ அங்கே உன்னுேடு, தந்தை விடு தூது, பூஜைக்கு வந்த மலர் முத லான பல தொடர்கதை பத்திரிகைகளில் வெளியாயின பத்திரிகைகளின் ஆதரவால் பெண் எழுத்தாளராகப் புகழ் பெற்ற பாலேஸ்வரி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

''எழுத்தாளராக வேண்டுமென்று நான் இளமையிலே கொண்டிருந்த எண்ணம் என்னை எழுதும்படி தூண்டிற்று. எழுதி னேன். எழுத்திலுருவான என் சிருஷ்டி கள் சுதந்திரன், வீரகேசரி, தினகரன், கலைச்செல்வி, அமுதம், ஈழச்சுடர் போன்ற ஈழத்துப் பத்திரிகைகளிலும் கல்கி, உமா, பூந்தொட்டி போன்ற வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும் வெளி வந்து வாசகர்களின் பாராட்டைப் பெற் றன.''[14]

இலங்கையின் அரசியல் ரீதியாக ஏற்பட்ட மாற்றங்கள் எழுத்துலகத்தினையும் பாதிக்க ஆரம்பித்த காலத்தில் பாலேஸ்வரியும் எழுதத் தொடங்கினுர். ஆனல் ஏனைய ஆண் எழுத்தாளர்களின் எழுத்துக்குச் சூழ்நிலை முக்கிய காரணமாக அமைந்தது போலப் பெண் எழுத்தாளராகிய இவரது எழுத்தினை அச் சூழ்நிலை பாதித்ததாகத்

தெரியவில்லை. இதற்கு முக்கிய காரணமாக அக்காலத்தில் ஈழத்தின் அரசியலில் பெண்களின் பங்கு குறிப்பிடத்தக்களவுக்கில்லாதிருந்ததைக் குறிப்பிடலாம் திருகோணமலை எழுத்தாளர் சங்கத்தின் வெளியீடாக 1960ம் ஆண்டு இவரது சுடர்விளக்கு என்ற நாவல் வெளியாகியது. காலத்தின் தேவைக்கேற்ப இலக்கியங்களின் போக்கு மாறுபடுவது வரலாற்று அடிப்படையில் முக்கியமானதொரு அம்சமாக இருந்ததெனலாம். மங்களநாயகம் தம்பையா செல்லம்மாள் போன்ற பெண் எழுத்தாளர்கள் தமது காலச் சூழ்நிலையை கருத்திற்கொண்டு அதற்கேற்றதொரு இலக்கியப் பணியினை மேற்கொண்டனர். ஆனல் அவர்களோடு ஒப்பிடுமிடத்துப் பாலேஸ்வரியின் எழுத்து காலத்தோடு ஒட்டிய மாற்றத்தின் அவசியமெதனையும் சுட்டிக்காட்டுவதாகவோ அன்றேல் அதனுடன் இணைந்து செல்வதாகவோ அமையாதிருப்பதிங்கு குறிப்பிடவேண்டியதொன்ருகும்.

புதுமுறைக் கல்வியினுல் சமுதாயத்தில் அச் சமயம் ஏற்பட்ட மாற்றங்கள் பெண்களைப் பலவாறு பாதித்தன. ஆனல் அதனைப் பற்றிய எழுத்துக்கள் பெண்களால் வழங்கப்படவில்லை. பெண்களைப் பொறுத்தவரையில் தமக்குரிய தொழில்களைப்பற்றிய திருப்தியுடனிருந்தமையால் அவர்களது அபிப்பிராய பேதங்களைச் சரியாக அறிய முடியவில்லை. பாராளுமன்றம் வரை அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டபோதும் அதனை எல்லோரும் பயன்படுத்தினர் என்று கொள்வதற்கு இல்லை. இக்காலத்தில் பல பெண்கள் வேலை வாய்ப்புப் பெற்று தமது குடும்பத்தினைத் தாமே தோள்களிற்றங்கி நிற்கக்கூடிய வல்லமை பெற்றவர்களாக இருந்தனர்.[15] இந்த நிலையினையே பாலேஸ்வரி தமது சுடர் விளக்கு நாவலில் பிரதிபலித்துக் காட்ட முற்பட்டிருக்கின்ருர். ''படித்துப் பட்டம் பெற்ற பெண்களாக இருந்தாலும் தமது மரபான சமுதாயக் கட்டுப்பாட்டுக்களை மீறுவதென்பது அவர்களைப் பொறுத்தவரையில் மிகப்பெரியதொரு சாதனையாகவே கருதப்பட்டது.[16] என்ற கருத்துக்கு இவராலும் மாறுபட்டுப் போக முடியாமையையே அவரது நாவலில் காணமுடிகின்றது.

ஆனல் பின்னர் தோன்றிய பெண் எழுத்தாளர்கள் இத்தகைய நிலையினைச் சற்று ஆய்வுக்குட் படுத்தியவர்களாகக் காணப்படுகின்ருர். அவர்களுள் முக்கிய இடத்தைப் பெறுபவராக ''யாழ் நங்கை'' எனப் புனை பெயர் பெற்று எழுத்துப்பணி செய்யும் திருமதி - அன்னலட்சுமி இராசதுரையைக் குறிப்பிடலாம் இவருக்கு முன்பாகவும் ஓரிரு பெண் எழுத்தாளர்கள் ஈழத்தில் தோன்றியுள்ளார்கள். சிறுகதைத் துறையில் சசிதேவி தியாகராசா, பவானி, சாந்தினி, குறமகள், புதுமைப்பிரியை, குந்தவை, பாலாம்பிகை நடராசா, ஆகியோரைக் குறிப்பிடலாம். சசிதேவி தியாகராசா அவர்கள் ஈழகேசரி, உதயம் போன்ற பத்திரிகைகள் நடத்திய சிறுகதைப் போட்டிகளிலே பரிசு பெற்று எழுத்தாளரானவர். ''தெளிந்த நடையையும் காண்டேகரின் சாயல் கொண்ட உவமானங்களையும் இவரது கதைகளிற் காணலாம்'' என்று கனக செந்திநாதன் விமர்சனம் இவர் எழுத்துப் பற்றியதாக இருந்தாலும் அக் காலத்துப் பெண் எழுத்தாளரது நடையினைப் பற்றிய பொதுவான விமர்சனம் போலவே தென்படுகின்றது.

பெண் எழுத்தாளர்களிலே துணிச்சலானவராகப் பவானி விளங்குகின்ருர். மேல் நாட்டு இலக்கியங்களில் அவருக்கிருந்த பயிற்சியை அவர் கதைகளில் காண முடிந்தாலும் கதை கூறும் தன்மையில் எந்த விதமான சிறப்புமில்லையென்றே உணர வேண்டும். தமிழ்ப் பண்பாட்டிற்கு ஒவ்வாத விடயங்களை அதிர்ச்சியுடன் கூறினுலும் சமுதாயப் பணியென்று பார்க்குமிடத்து அதில் எவ்வித பங்கும் இருப்பதாகக் கொள்வதற்கில்லை. சாந்தினி, குறமகள் புதுமைப்பிரியை போன்ருேர்களது சிறுகதைகளும் காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் பணியில் பின்தங்கியே நிற்கின்றன. தெளிவான நடையும், கதை சொல்லும் பாணியுமிருந்தாலும் இலக்கியப்பணியென்று மதிப்பிடுமிடத்து இவர்களைப் பற்றிச் சிறிது சிந்திக்க வேண்டியுள்ளது.

''1956ம் வருடம் இலங்கையின் சமூகப் புரட்சி நடந்தது. தேசிய விழிப்புணர்வு நாடெங்கும் பரவிற்று. சில சமயங்களில் வகுப்புக் கலவரங்களும், இனவாதப் போராட்டங்களும் காணப்பட்டன. இதன் பின்னரே இலங்கைத் தமிழர் தம்மை அயல்நாட்டுடன் இறுகப் பிணைத்து தமது தேசியவுணர்வினைக் காட்டினர். இத் தேசியவுணர்வு ஈழத் தமிழ் எழுத்தாளரிடையே புதிய உணர்வினைத் தோற்றுவித்தது. ஈழத்துக்கெனத் தனி

யொரு இலக்கியப் பாரம்பரியம் வேண்டுமென்ற குரல் கிளம்பிற்று. இலக்கிய இயக்கம் ஒன்று தோன்றிற்று''[17]

என்ற கலாநிதி - சிவத்தம்பி அவர்களின் கூற்றினை ஈழத்துப் பெண் எழுத்தாளர்களது சிறுகதைகளிற் பொருத்திப் பார்க்குமிடத்து இது தெளிவாகின்றது. சிறுகதைகள் மக்களால் விரும்பி வாசிக்கப்பட்ட இச் சந்தர்ப்பத்தில் ஏனைய ஆண் எழுத்தாளர்களது கதைகளிற் சிறப்பினைக் காண முடிவது போலப் பெண் எழுத்தாளர்களது கதைகளிற் சிறப்பினைக் காண முடியவில்லை இதனால் இதுவே அவர்களது வளர்ச்சிக் குறைவுக்கு காரணமானது போலவுந் தெரிகின்றது.

''இலங்கை எழுத்தாளர் பலர் இலக்கிய நோக்குடனும் தத்துவ நெறியுடனும் எழுதுபவராதலின் சிறுகதையாசிரியர் நிலையிலிருந்து நாவலாசிரியர்களாக வளர்ச்சியுறுவதைக் காணலாம்.''[18]

என்ற அடிப்படையில் ஈழத்துப் பெண் எழுத்தாளர்கள் நாவலாசிரியைககளாக வந்தார்கள் என்று கூறுவதற்கு இல்லை. தென்னிந்தியப் பெண் எழுத்தாளர்களது வளர்ச்சியினை இந்த அடிப்படையில் இலகுவில் கணித்துக் கொள்ள முடிவது போல ஈழத்துப் பெண் எழுத்தாளர்களது வளர்ச்சியினைக் கணித்துக் கொள்வது சற்றுச் சிரமமாகவே இருக்கின்றது.

இந்நிலையில் ஈழத்துப் பெண் எழுத்தாளர்களைச் சற்றுத் திசை திருப்புபவராக அன்னலெட்சுமி விளங்குகிறார். கலைச் செல்வி மூலம் அறிமுகம் ஆகி இன்று வீரகேசரியில் உதவி ஆசிரியயையாகப் பணிபுரியும் இவரது எழுத்துப் பணிக்கு ஒரு இடம் ஈழத்து ஆக்க இலக்கிய வரலாற்றில் உண்டு என்பதில் ஐயமில்லை. கலைச்செல்வி முதலாவது இதழில் ''அன்னையின் ஆவல்'' என்ற கவிதையை எழுதி வளரும் எழுத்தாளராக அறிமுகமான இவர் பல சிறுகதைகளையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். வீரகேசரி நிறுவனத்தாரின் ஜோதி வார சஞ்சிகையின் பொறுப்பாசிரியையாகக் கடமையாற்றியவராதலால் வாசகர் தரம் அறிந்த எழுத்தாளர் இவர் எனலாம். இரசிகமணி கனக செந்திநாதன் தனது அணிந்துரையில் இவர் பற்றிய தமது கருத்தினை வெளியிட்டுள்ளார்:

''வெறும் சாதி, அடிமை, குடிமை, மேல்தட்டு வர்க்கம், கீழ்தட்டு வர்க்கம் என்றெல்லாம் எழுதி ஆகா, நாங்கள் தான் மக்களைப் புகுந்து கொண்டு மக்களுக்காக எழுதுபவர்கள் என்றெல்லாம் ஆர்ம்பரிக்கின்றார்களே அவர்கள் இக்காலத் தமிழ்ச்சாதியில் - முக்கியமாக யாழ்ப்பாணத் தமிழரில் - தோன்றியிருக்கும் மற்றொரு வர்க்க வேறுபாட்டை நோக்குகிறார்களில்லை. அவை டாக்குத்தர் வர்க்கம், இஞ்சினியர் வர்க்கம், பட்டதாரிகள் வர்க்கம், ஆசிரியர் வர்க்கம் எனப்பல. இவை எல்லாச் சாதிக்குள்ளும் இருக்கின்றன. இந்த வர்க்கம் கேட்கும் சீதனம், நன்கொடை தமிழ்ச் சமூகத்தையே திகைக்க வைக்கிறது. இதனாற் கண்ணீர்விடும் பெற்றோர் பலர். கலியாணமாகாமல் இதயங் குமுறும் கன்னியர்கள் பலர். 'விழிச்சுடர்' என்ற நாவலில் ஆசிரியை பல இடங்களில் தொட்டுக் காட்டியும், இடித்துரைத்தும் காலத்துக்கேற்ற தொண்டைச் செய்து வாசகர்களைச் சிறிதாவது சிந்திக்க வைத்திருக்கிறார். ஒரு பெண் எழுத்தாளர் (யாழ் நங்கை) இதைச் செய்திருப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.''[19]

இக் காலத் தமிழ்ச் சமூகத்திலே நிலவுகின்ற சம்பவங்களைப் படம் பிடித்துக் காட்டுவது போல யாழ்நங்கையின நாவலில் பல சம்பவங்கள் அமைகின்றன. வேறெவரும் எழுதத் துணியாத சில கருத்துக்களை இவர் பெண் எழுத்தாளராக இருந்தும் துணிந்தெழுதியது சிறப்புக்குரியது. ஆசிரியை தனது உரையில் ''பாம்பின் காலைப் பாம்பறியும் என்பார்கள். மங்கையருலகினை வாட்டி நிற்கும் பிரச்சினைகள், அபிலாசைகள், எழுச்சிகள், இன்ப துன்ப உணர்வுகள் ஆகியன என் கவனத்தினை முற்றிலும் ஈர்த்துக் கொண்டிருப்பதில் ஆச்சரியமெதுவுமில்லை. சகல துறைகளிலும் பெண்ணினம் சமத்துவமான உரிமைகளைப் பெற்று முன்னேறியுள்ள போதும் வாழ்க்கைச் சூழலில் அவள் அனுபவிக்கின்ற கஷ்டங்கள் குறைந்தபாடில்லை''[20] என்று கூறியது அவரது ஆழ்ந்த சமுதாய உணர்வினைப் புலப்படுத்துகின்றது. தனக்கு முன்னர் எழுதிய பெண்கள் செய்யத் தவறியதை இவர் செய்துள்ளார். வெறும் கற்பனா ரீதியான வாழ்க்கைச் சித்தரிப்பை விடுத்து யதார்த்தமான சித்தரிப்பின் மூலம் சமுதாயத்திற்குத் தனது இலக்கியப் பணியை ஆற்றியுள்ளார். பிற்காலப் பெண் எழுத்தாளர்களுக்கு இவ்வகையில் இவர் ஒரு வழிகாட்டியாக அமைவாரென்றும் கூறலாம்.

தாகமா?

பசியா?

வேண்டாம் கவலை

அவற்றைப் பூர்த்திசெய்ய

உடனே விஜயம் செய்யுங்கள்

மிக மிக மிக சிறந்த

**"றூபன் கபே"**

உங்களுக்காகவே.

திருநெல்வேலிச்சந்தி,

யாழ்ப்பாணம்.

தரமான

உள்நாட்டு வெளிநாட்டு

மதுபானங்களுக்கு

நாடுங்கள்



**"சோமாஸ்"**

வேம்படி வீதி,

காரைநகர்.

**பாண், கேக், பிஸ்கட்**

இன்னும்

**சுவைமிகு பண்டங்கள்**

தயாராக இருக்கின்றன, உடனே நாடுங்கள்

# தாவடி பேக்கரி

**தாவடி**

உரிமையாளர்: *K. G.* குணசேனா

மகளிர் ஆண்டாகச் சென்ற ஆண்டினைப் பிரகடனஞ் செய்ததின் மூலம் மகளிர் சம உரிமை தேடிய இலக்கியத்தின் வரிசையில் இவரையும் இணைத்துக் கொள்ளலாம். ஈழத்துத் தமிழ்ப் பெண்களின் நிலையையுணர்ந்து தனது எழுத்தின் மூலம் அவர்களின் வாழ்க்கைக்கு ஒரு விதத்தில் விமர்சகராக இவர் அமைவதே இவரது எழுத்தின் வெற்றியெனலாம். துணிந்து கருத்துக்களைக் கூறும் அவரது இலட்சிய நோக்கினை

> ''போயும் போயும் தெரிந்து கொண்டு திருமணமான பெண்ணை மனைவியாக்கிக் கொள்வதா? என்று நினைக்கத் தான் செய்தேன். ஆனால் ஆண் சமூகம் சுய நலத்தின் பாற்பட்டுச் செய்கின்ற துரோகங்களுக்கு பெண் சமூகம் என்றைக்கும் துன்பப்பட்டே மாய்வதா? இதனைத் துடைக்க என்னளவில் நான் ஒருத்தனுவது ஏன் முயலக்கூடாது? என்று என் அறிவு என்னைக் குத்திக் குடைந்தது''

என்ற வாசகங்கள் நிரூபித்து நிற்கின்றன. சிறுதுளி பெருவெள்ளம் என்பது போலச் சீர்திருத்தங்களைச் செயற்படுத்த முனைந்த இந் நாவல் ஆசிரியை இந்தியப் பெண் நாவலாசிரியையினின்றும் கருத்தளவில் வேறுபட்டு நிற்பதும் ஈழத்து இலக்கியத்தின் தனித்துவமெனலாம்.

கடந்த ஒரு சில வருடங்களுக்கு முன்னர் வீரகேசரி நிறுவனத்தாரால் வெளியிடப்பட்ட தூரத்துப்பச்சை நாவல் மூலம் கோகிலம் சுப்பையா ஈழத்தில் அறிமுகமானார். அவர் நாவல் 1964ல் 'சென்னைத் தமிழ்ப் புத்தகாலயத்தினரால்' வெளியிடப்பட்டு வீரகேசரியில் இரண்டாம் பதிப்பாக வெளிவந்தது. எனவே காலத்தால் முந்தியவரானாலும் அறிமுகத்தால் பிந்திய நாவலாசிரியையான கோகிலம் சுப்பையா இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக வாழ்ந்த மக்களது வாழ்க்கையைப் பற்றிய கதையாகத் தூரத்துப்பச்சையைப் படைத்திருக்கின்றார். பெண் எழுத்தாளராக இருந்த போதும் அக்கால அரசியல் தாக்கத்திற்குட்பட்ட பெண் எழுத்தாளராக இவர்விளங்குவது குறிப்பிடத்தக்கது. தோட்டத் தொழிலாளருடன் நெருங்கிப் பழகி அவர்களோடு கூடிவாழ்ந்து அவர்களது சுகதுக்கங்களில் நேரடியாகப் பங்கு கொண்டதால் பிறந்த காவியமாக இவரெழுதிய தூரத்துப் பச்சை விமர்சகரால் போற்றப்பட்டது. இந்தியாவில் பிறந்த போதும் ஈழத்தின் சூழலை வைத்து இலக்கியம் சிருஷ்டித்தமையால் ஈழத்து இலக்கியத்திற்கே இவர் பணி சேர்கிறது.

## இன்றையப் பெண் எழுத்தாளர் பங்கு:-

இன்றையப் பெண் எழுத்தாளர்களது பணியினை நோக்குமிடத்துப் படித்த பெண்கள் பலரிருந்த போதும் சமுதாய உணர்வற்றவர்களாக வாழ்ந்து கொண்டிருப்பவர்களே பலராக இருக்கின்றனர். இதனால் எழுத்துலகில் அவர்கள் ஈடுபடுவதும் குறைவாகவே இருக்கின்றது. இந்த நிலை மாறுவதற்குப் படித்த பெண்கள் தான் மாற வேண்டும். வெறும் பட்டம் பெற்றுத் தமக்கு வசதியான தொழில்களைத் தேடிக் கொள்வதுடன் மட்டும் நின்றுவிடாது எதிர்காலப் பெண்ணினத்தைப் பற்றியும் சமுதாயத்தில் அவர்களது நிலைமை பற்றியும் ஒரு தெளிவான கருத்தைப் பரப்புவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இன்றையப் பெண் எழுத்தாளர் தமது மரபுமரபான கருத்துக்களைச் சீர்தூக்கி இன்றைய காலகட்டத்திற்கு ஏற்றவைகளையே எடுத்துத் தமது எழுத்தில் வடிக்க வேண்டும்.

> ''எப்படியாயினும் பெண்களுக்கு மாத்திரம் சுதந்திரமோ, தன்உணர்வோ ஏற்படப் போவதில்லை. சுரண்டல், மயக்கம் ஆகியவையற்ற புதிய மதிப்பீட்டு முறையினை வன்மை மிகுந்த சமூக மாற்றமே உருவாக்க வல்லது. இம் மதிப்பீட்டு முறையே எதிர்கால எழுத்தாளர்களைப் புதிய போக்கில் திசை திருப்பவல்லது''[21]

என்ற லக்ஷுமியின் கூற்றோடு இன்றையப் பெண் எழுத்தாளர்கள் அணி சேர்ந்து பணியாற்ற வேண்டும். குறிப்பாகப் பெண் எழுத்தாளர்கள் கொஞ்சம் குறுகிய நோக்குடையவர்களாகவும் மரபை மீறுவதற்குப் பயந்தவர்களாகவும் ஈழத்தைப் பொறுத்தவரை காணப்படுகின்றார்கள். இந்த நிலையே பெண் எழுத்தாளர்கள் பெருக்கத்தின் குறைவுக்கும் காரணமாகலாமோ என்ற சந்தேகமும் தோன்றுகின்றது. ஆனால் படித்துப் பட்டம் பெற்ற ஈழத்துப் பெண்கள் பலராக இருந்த போதும் ஆக்க இலக்கியத் துறையில் முழு மூச்சுடன் உழைப்பவர்கள் எவரையும் குறிப்பிட முடியவில்லை. குறிப்பாகப் பல பல்கலைக்கழகப் பட்டதாரி


கள் இருந்த போதும் அவர்களுக்கு எழுத்துப்பணியில் ஈடுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறு ஈடுபாடு கொண்ட ஒரு சிலரும் பரந்த நோக்குடையவராக இன்றி சுயநலத்துக்காகவே எழுத்துத் துறையில் அங்கம் வகிப்பவர்களாக இருக்கின்றனர். தமதினத்தவரைப் பற்றிய எண்ணமும் சிந்தனையும் அற்றவர்களாக அவர்கள் வாழ்ந்து கொண்டிருப்பதால் பெண்ணுலகத்தின் முன்னேற்றத்திற்கும் வழியின்றிக் காணப்படுகின்றது. இந்த நிலைமாற வேண்டுமானால் படித்த பெண்கள் சமுதாயச் சீர்திருத்த நோக்கோடு எழுத்துப் பணியாற்ற வேண்டும். அப்போதுதான் ஈழத்து ஆக்க இலக்கியத் துறையிலும் அவர்கள் பங்களிப்புப் பெருமளவில் ஏற்பட இடமுண்டாகும்.

---

அடிக்குறிப்புக்கள்


1. சிவபாதம் அ.
''தேச முன்னேற்றத்திற்குப் பெண் மக்கள் காரணர்'' ஈழகேசரி ஆண்டு மடல் 1935, பக். 75-80.
2. மங்களநாயகம் தம்பையா
நொறுங்குண்ட இருதயம் முகவுரை 1914, பக். 3.
3. கனகசெந்திநாதன்
ஈழத்து இலக்கிய வளர்ச்சி 1964, கொழும்பு அரசு வெளியீடு பக். 129.
4. சிரிசேன யூ. டீ. ஐ.
'எழுத்தறிவு விருத்தி' இலங்கையிற் கல்வி நூற்றாண்டு விழா மலர் 1969, கொழும்பு. இலங்கை கல்வி கலாச்சார அலுவலமைச்சின் வெளியீடு. பக். 611.
5. மேற்குறிப்பிட்ட கட்டுரை: பக். 613.
6. மங்களநாயகம் தம்பையா
அனுபவக் களஞ்சியம் முகவுரை
7. செல்வராசன் சில்லையூர்,
ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி (முதற் பதிப்பு. 1967) பக். 21.
8. செல்லம்மாள்
இராசதுரை பக். 92.
9. நா. சுப்பிரமணிய ஐயர்
M. A. பட்டத்திற்குச் சமர்ப்பிக்கப் பட்ட ஆய்வுக் கட்டுரை
10. கனகசெந்திநாதன்
ஈழத்து இலக்கிய வளர்ச்சி பக். 129.
11. மா. மங்கம்மாள்
12. சத்தியதேவி துரைசிங்கம்
''வாழ்க்கைத் தத்துவம்'' ஈழகேசரி வெள்ளி விழா மலர் 1956. பக். 121 - 122.
13. இராஜேஸ்வரி க. (பண்டிதை)
''தமிழ்ப் பெண்கள் பண்புள்ளம்'' இலங்கைத் தமிழ் விழா மலர் 1957. பக். 96 - 102.
14. பாலேஸ்வரி பா.
சுடர் விளக்கு முதற் பதிப்பு 1966 முன்னுரை
15. Education of Women for Involument in National Development.
*Report of Regianal Seminar- S. E. Asia. 1975.*
16. *Siriwardena B. S.*
*The life of Ceylon Women* Women in the new Asia *P. 150 - 172.*
17. சிவத்தம்பி கா.
தமிழிற் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் 1967. மதராஸ். பாரி நிலைய வெளியீடு. பக். 149.
18. மேற்டிறிப்பிட்ட நூல் பக். 152.
19. யாழ் நங்கை
விழிச் சுடர். முகவுரை. 1970. தமிழருவி வெளியீடு
20. யாழ் நங்கை
விழிச் சுடர் பக். 66.
21. *Luxmy C. S.*
*Tradition and Modernity of Tamil Women Writers.* **Social Scientist** *april 1974; P. 44-45.*

தலைவர்



J. P. பாக்கியராஜா

செயலாளர்




மு. நா. யோகராஜா

பத்திராதிபர்




சி. மாலதி

பொருளாளர்



A. தெய்வேந்திரன்

உப பொருளாளர்



S. N. இராசநாயகம்

# சென்மதி நிலுவையும் - இலங்கையின் சென்மதி நிலுவையின் போக்கும்

செ. யோசேப் மரியநாயகம்
தொ. க. தே. த. ப. சந்தைப்படுத்தல் (இறுதி வருடம்)

சென்மதி நிலுவை பற்றிய ஒரு பின்னணியைக் கூறி இலங்கையின் அண்மைக் கால சென்மதி நிலுவையின் போக்குக்களை ஓரளவு எடுத்து முன்வைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். (*Balanc of Puyment*) என்ற ஆங்கிலச் சொல்லிற்கு ''சென்மதி நிலுவை என்ற பதம் தமிழில் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த சொல்லைப் பார்த்தவுடன் உபயோகிக்கப்பட்ட நோக்கத்திற்கு மாறான ஒரு விளக்கம்தான் அநேகரின் மனதில் தோன்றக்கூடும். இதனால் செல்மதி நிலுவை என்றால் என்ன என்பதை எந்த ஒரு ஆரம்ப மாணவனும் சொல்லின் போக்கினைக் கொண்டு உடனடியாக உணர முடியாமல் தடுமாறுவது தவிர்க்முடியாததொன்றாகி விடுகின்றது. ஆங்கிலத்திலும் இச் சொல்லைப் பாவிக்கும் பொழுது சர்வதேச வர்த்தகம் தொடர்பாக ''வருமதிக்கும் மேலான செலுத்தையே'' (*Excess of Payment over receipt*) குறிப்பதாக ஆரம்பத்தில் கருதப்பட்டது. பொன் நியமத் திட்டத்தின் கீழ் பொன்னின் வெளியேற்றத்தையே இது பெரிதும் சுட்டி நின்றது. ஆனால், இச் சொல் மிக விரைவில் ''சர்வதேசக் கணக்குகளின் மீதி நிலை'' (*State of the Balance of international Accounts*) என்று பக்கம் சாராத முறையிலே வழக்கிற்குக் கொண்டு வரப்பட்டது.

இதன் விளைவாக ''செல்மதி நிலுவை என்பது சர்வதேசக் கணக்கிலுள்ள வருமானங்களினதும் செலவுகளினதும் ஒரு கூற்றாகும்'' என்று வரைவு படுத்தப்படுகின்றது

இன்றைய உலகில் எந்த ஒரு நாடும் தனியாக இயங்குவதென்பது இயலாததொன்றாகும். ஒவ்வொரு நாடும் ஏனைய நாடுகளுடன் வர்த்தக ரீதியில் தொடர்புபட்டே ஆகவேண்டிய ஒருநிலையை உலகப்பொருளாதார அமைப்பு ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஒரு நாடு ஏனைய நாடுகளிடமிருந்து பொருள்களையும், சேவைகளையும் இறக்குமதி செய்வதும் அதே போன்று உலக நாடுகளுக்கு அவற்றை ஏற்றுமதி செய்வதுவும் அவசியமான பொருளியல் நிகழ்வுகளாக அமைந்து விட்டன. இந்த வகையில் நாடுகளிடையே ஏற்படும் வர்க்கத்தை ''சர்வதேச வர்த்தகம் *International Trade*) என்று அழைக்கப்படுகின்றது. எனவே நாடுகளிடையே ஏற்படுகின்ற இச் சர்வதேச வர்த்தகமும் ஏனைய நிதித் தொடர்புகளும் ஒன்று இன்னொன்றுக்கு செலுத்துக்களைக் கொடுக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளன. இவ்வாறான நிலையில் ஒரு நாடு ஏனையநாடுகளுக்கு கொடுக்க வேண்டிய செலுத்துக்களுக்கும், ஏனைய நாடுகளிடமிருந்து கிடைக்க வேண்டிய மொத்த வருமதிகளுக்கும் இடையேயுள்ள தொடர்பினைக் காட்டுவதாலே சென்மதி நிலுவை அமைகின்றதெனலாம்,

சென்மதி நிலுவையைப் பிரதிபலிக்கின்ற சர்வதேசக் கணக்கில் அடங்கும் வருமதிகளையும், செலுத்துக்களையும் மூன்று வகையாகப் பிரித்து நோக்குவார்.

(1) கட்புலனாகும் வியாபார நிலுவை
*The Visible Balance Trade*
(2) கட்புலனாகா அம்சங்கள்
*Inviscble Items*
(3) மூலதன மாற்றுக்கள்
*Gapital tranjers*

பிரதான வருவாய்களும் செலுத்துக்களும் பொருள்களை ஏற்றுமதி இறக்குமதி செய்வதின் மூலமே பெறப்படுகின்றன. சென்மதி நிலுவையில் இவ்வியாபார நடவடிக்கைகளே பெரும் பங்கை வகிக்கின்றன, இவ்வாறான ஏற்றுமதி இறக்குமதிகளின் தொடர்பை எடுத்துக் காட்டுவதே கட்புலனாகும் வியாபார நிலுவையாகும். இதை வியாபர நிலுவை *Balance of Trade* என்று அழைக்கப்படுவதும் உண்டு.

நாடுகளிடையே நடைபெறுகின்ற சேவைகள் மூலமும் ஒரு நாடு வேறோர் நாட்டிற்கு கொடுக்க வேண்டியும், வேறு

*With the Best Compliments of*

# A. Vaithilingam & Co.

138, K. K. S Road,

**JAFFNA.**

**சுத்தம் சுகம் தரும்**

*உங்கள் உடம்புத் தூய்மைக்கு*

**நீம் வாசனை சோப்**

**எண்ணெய் முழுக்கு ஒலிவ் ஸ்நானப் பவுடர்.**

*உங்கள் உடைத் தூய்மைக்கு*

**மில்க்வைற் நீல சோப்,** **நியூ மில்க்வைற் சோப்**

**மில்க்வைற் பார் சோப்,** **மில்க்வைற் சலவைப் பவுடர்.**

*உங்கள் உறைவிடத் தூய்மைக்கு*

**நீம் சுகாதார தூபம்**

(இதைத் தணலில் இட்டுப் புகைத்தால் ஈ, கொசு, நுளம்பு, சிலந்தி ஆகியவை அணுகா.)

# மில்க்வைற் சவற்காரத் தொழிலகம்

யாழ்ப்பாணம்.
தொலைபேசி: **7233**

கிளை
79, மெஜன்சர் வீதி,
கொழும்பு - 12
தொலைபேசி: **36063**

நாடுகளிலிருந்து பெற வேண்டியும் இருக்கலாம். அதாவது கப்பல் சேவைகள், வங்கிச் சேவைகள் காப்புறுதிச் சேவைகள் வெளிநாட்டு முதலீட்டு வருமானம், சுற்றுலா. கல்விச் சேவைகள், இன்னும் பிற சேவைகள் போன்றவற்றினால் நாடுகளிடையே கொடுப்பனவுகள் ஏற்படலாம் எனவே இவ்வாறான சேவைகள் தொடர்பாக ஏற்படும் கொடுக்கல் வாங்கல்களை கட்புலனாகா அம்சங்கள் என்ற பிரிவின்கீழ் அடக்கப்படுகின்றன,

மூலதன அசைவுகளும் சென்மதி நிலுவையைப் பாதிக்கலாம். ஒரு நாடு வெளிநாடுகளில் முதலிடுவதால், அல்லது உள்ள முதலிட அனுமதிப்பதால், ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு மூலதனத்தை மாற்றுவதால், ஏனைய நாடுகளுக்கு கடன் கொடுப்பதால் அல்லது ஏனைய நாடுகளிடமிருந்து கடன் பெறுவதால் ஏற்படுகின்ற நிகழ்வுகள் சர்வதேச ரீதியில் சாதாரணமாக ஏற்படும் நிகழ்ச்சிகளாகும். இவ்வாறாக நடவடிக்கைகளை மூலதன மாற்றுக்கள் என்ற வகையில் அடக்க முடியும்.

ஆயினும், மேற் கண்டவாறு வருவாய்களையும், செலுத்துக்களையும் மூன்று வகையாகப் பிரித்த பொழுதினும், சென்மதி நிலுவைக் கணக்கில் இவை யாவற்றையும் தொகுத்து இரு பெரும் முக்கிய பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

(1) நடைமுறைக் கணக்கு
*(Current Account)*

(2) மூலதனக் கணக்கு
*(Capital Account)*

மேற்கூறிய கட்புலனாகா, கட்புலனாகும் நடவடிக்கைகளை ஒன்றிணைத்துக் கூறுவதே நடைமுறைக் கணக்காகும். இதில் பொருள்களினாலும், சேவைகளினாலும் ஏற்படும் கொடுக்கல் வாங்கல்களினது தொடர்புகள் எடுத்துக் காட்டப்படுகின்றன. சர்வதேச கொடுக்கல் வாங்கல்களை பிரதிபலிக்கும் இந் நடைமுறைக் கணக்கினைக் கொண்டே ஒரு நாட்டினது சர்வதேச வர்த்தக நிலைமையின் போக்கினை அவதானித்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

நாட்டுக்குள்ளும், வெளியேயும் ஏற்படுகின்ற மூலதன அசைவுகளை எடுத்துக் காட்டும் பகுதியாகவே மூலதனக் கணக்கு அமைகின்றது. இக்கணக்கினைக் கொண்டே ஒரு நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்களை நிலைமையை இலகுவில் கவனித்துக் கொள்ளலாம். செல்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கில் ஏற்படுகின்ற பற்றுக் குறைக்கு இவ் வெளிநாட்டுச் சொத்துக்கள் மூலமே பெரும்பாலும் நிதியீட்டம் செய்யப்படுவதுண்டு. வெளிநாட்டு சொத்துக்கள் குறைவாக இருக்கும் பட்சத்திலேயே பற்றுக் குறையை நிரப்புவதற்காக கடன்களும், வேறு உதவிகளும் நாடப்படுகின்றன.

செல்மதி நிலுவையின் மீதி எவ்வாறு அமைகின்றது என்பதைப் பொறுத்து அதன் சாதக, பாதக நிலைமையினை உணர்த்துவதற்காகப் பலவகையான அடைகள் சேர்த்துப் பாவிக்கப்பட்டு வந்தன. மெக்கன்டலிஸ்ற் காலத்தில் *(Favourable)* என்று சாதக மீதியையும் *(Unfavourable)* பாதக மீதியையும் அழைத்தனர். ஆனால், இது பூரண திருப்தியைத் தராத காரணத்தினால் சாதக, பாதக நிலைமையினை, *(Activ, Passive)* என்றும் பின்பு *(Positive, Negative)* என்றும் குறித்தனர். இவையும் ஒரு தற்காலிகமான பாவனையாக அமைந்தன. இன்று சாதக, பாதக நிலைமையைக் குறிப்பதற்கு முறையே *(Surplus)* மேலதிகம் என்றும் *(deficit)* பற்றுக்குறை என்றும் வழக்கிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இச் சாதக, பாதக நிலைமைகள் நடை முறைக் கணக்குகள் மீதியைக் கொண்டே கணிக்கப்படுகின்றது. நடைமுறைக் கணக்கு மீதி சாதகமாக இருந்தால் ''மேலதிகம்'' என்றும் பாதகமாக இருந்தால் ''பற்றுக் குறை'' என்றும் கணிக்கப்படுகின்றது. நடைமுறைக் கணக்கின் சாதக மீதி மூலதனக் கணக்குடன் சேருகின்றது. அதே போன்று பற்றுக்குறை ஏற்பட்டால் முன்பு கூறியது போன்று, வெளித்தேசச் சொத்துக்களைக் கரைப்பதன் மூலமும் மூலதன உள் வருகை, திட்டக்கடன், உதவிகள், ஏனைய கடன்கள் ஆகியவற்றின் மூலமும் நிதியீட்டம் செய்யப்படுகின்றது. எனவே செல்மதி நிலுவை என்ற சர்வதேச வர்த்தக நிலைமைக் கூற்றானது எக்காலமும் செலவுகளும், வரவுகளும் சமனானதாக இருப்பதையே காண்பிக்கும். அதாவது நடைமுறைக் கணக்கில் ஏற்படுகின்ற மேலதிகங்கள் அல்லது பற்றுக்குறைகள் எவ்வகையிலாயினும் நிதியீட்டம் செய்யப்பட்டு சர்வதேசக் கணக்குச் சமன்படுத்தப்படுகின்றது என்பதையே இது குறிக்கின்றது.

**இலங்கையின் செல்மதி நிலுவைப் போக்குகள்:-**

இலங்கை இன்று செல்மதி நிலுவைப் பற்றுக்குறையினால் அனுபவிக்கின்ற பொருளாதார நெருக்கடிகளோ அனேகம். இச் சென்மதி நிலுவைப் பற்றுக்குறைப் போக்


கானது கடந்த ஒரு தசாப்தத்திற்கும் *(Decade)* மேலாகவே இருந்து வந்திருக்கின்றது. முதன் முதலாக இப் பிரச்சனை 1950-ம் ஆண்டின் பிற்பகுதியிலேயே தோன்றியது எனலாம். இதற்கு முன்னர் 1950 – 51-ம் ஆண்டுகளில் ஏற்பட்ட கொரியன் செழிப்பினுலும் (*Korean Boom*) 1954—56-ல் ஏற்பட்ட தேயிலைச் செழிப்பினுலும் *(Tea Boom)* கிடைத்து செலாவணி உழைப்பினைக் கொண்டு போதியளவுக்குப் பண்டங்களை இறக்குமதி செய்வதற்கு இலங்கைக்கு வாய்ப்பிருந்தது. ஆனல், கடைப்பிடிக்கப்பட்டு வந்த கட்டுப்பாடற்ற இறக்குமதிக் கொள்கையினுலும், பாதகமான வெளிநாட்டு வியாபாரப் போக்கினுலும் 1956-ம் ஆண்டிலிருந்து நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்கள் குறைந்து செல்லும் போக்கினைக் காட்டியது. 1957-ம் ஆண்டிலிருந்து 1965 தவிர்ந்த ஏனைய ஆண்டுகளில் இலங்கையின் நடைமுறைக் கொடுப்பனவானது வருவாய்களை விட அதிகரித்துச் சென்றுள்ளது. 1057—60ஆம் ஆண்டு காலப்பகுதியில் சென்மதி நிலுவைப் பற்ருக்குறைக்கு முதன்மையான காரணம் இறக்குமதிக் கேள்வியானது இறக்குமதி இயலளவை (*Import Capasity*) விட கூடிச் சென்றுள்ளமையாகும். இறக்குமதிக் கேள்வி அதிகரிப்பிற்கு வரவு செலவுத் திட்டத்தின் விரிவடைந்த பற்ருக்குறையினுல் ஏற்படுத்தப்பட்ட நுகர்வுப் பொருள்கள் மீதான கொள்வனவு சக்தி அதிகரிப்பும் காரணமாக அமைந்தது எனலாம்.

இத்தகைய போக்கினுல் மேலும் இலங்கை தடையற்ற வர்த்தகக் கொள்கையைக் கடைப் பிடிக்க முடியாது என்பதை 1960-ம் ஆண்டில் உணரக் கூடியதாக இருந்தது. காரணம் இலங்கையின் வெளி நாட்டுச் சொத்துக்களின் வேகமான வீழ்ச்சியேயாகும். 1956-ம் ஆண்டில் 1195.5 மில்லியன் ரூபாய்களாக இருந்த வெளிநாட்டுச் சொத்தானது 1960ம் ஆண்டில் 457·7 மில்லியனுக பாரதூரமாக வீழ்ச்சியடைந்தது. இப்படியான வீழ்ச்சிக்கு இலங்கையின் ஏற்றுமதிஇறக்குமதிகளின் போக்குத் தான் முக்கியபொறுப்பை ஏற்க வேண்டும் எனலாம்.

சென்மதி நிலுவைப் பற்ருக்குறைக்கு முக்கிய காரணிகளில் ஒன்ருக நாட்டின் ஏற்றுமதிகளுக்கு கொடுக்கப்பட்ட பாதகமான விலையைக் கூறலாம். இலங்கையின் மரபுவழி ஏற்றுமதி பொருள்களான தேயிலை, தென்னை, இறப்பர் ஆகியன உலக சந்தையில் விலைத் தளம்பலை எதிர் நோக்க வேண்டியிருந்ததோடு, இத்தளம்பல் நிலையானது கீழ் நோக்கிய ஒரு சரிவையுங் காட்டிச் செல்கின்றது. 1947-1970 காலப் பகுதியில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவானது 60%ஆல் அதிகரிக்க வருமானம் 10% மட்டும் அதிகரித்துள்ளமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இது உலக சந்தையில் தேயிலைக்கான மந்த விலையைப் பிரதிபலித்துக் காட்டுகின்றது. தேயிலையைப் போன்றே இறப்பரும் ஏற்றுமதி அளவில் கூடிய போதும் அதற்கேற்ப விலையில் கூடிச் செல்லாத தன்மையைக் காணக் கூடியதாக இருக்கின்றது. 1956—57, 1962, 1964-ம் ஆண்டுகளில் இறப்பர் விலையானது மோசமான மந்த நிலையை அடைந்து 1967-68 ஆண்டுகளில் மிகவும் தாழ்ந்த விலை மட்டத்தை எட்டியிருந்தது. இதைப் போன்று தென்னையின் உற்பத்தி அதிகரித்த பொழுதிலும், ஏற்றுமதி அளவில் தளம்பலைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இதற்கு முக்கிய காரணமாக உண்ணுட்டு நுகர்வுப் போக்கின் மாற்றத்தையே முன் வைக்கப்படுகின்றது. இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்கள் இவ்வாருக விலையில் தளம்பலை எதிர் நோக்கியமைந்தமைக்குக் காரணமாக செயற்கைப் பொருள்களுடன் போட்டியிட வேண்டியிருந்தமையையும், பிரதான நுகரும் நாடுகளின் நிச்சயமற்ற கையிருப்புக் கோட்பாட்டினையும் கூறலாம்.


ஏற்றுமதியின் தாக்கத்தைப் போன்றே, எதிராக இறக்குமதிகளின் தாக்கமும் சென்மதி நிலுவையைச் சீர்கெடச் செய்தது எனலாம். தொடர்ச்சியாக அதிகரித்து வந்த இறக்குமதிப் பொருள்களின் விலைப் போக்கானது, இறக்குமதிகளின் அளவைக் குறைக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்திய போதிலும் கூடுதலான விலையைச் செலுத்த வேண்டிய நிலையை உருவாக்கியது. உதாரணமாக 1970-ல் இறக்குமதி அளவுச் சுட்டெண்ணுனது 102-ல் இருந்து 1974-ல் 56ஆக, குறைய இறக்குமதிப் பொருள்களுக்கான விலைச் சுட்டெண்ணுனது 140-ல் இருந்து 370ஆக உயர்ந்து சென்றுள்ளது. இவ்வாருன போக்கு அண்மைக் கால எரிபொருள் விலையேற்றத்துடன் வலுவடைந்த உலக பண வீக்க நிலைமையினுல் மேலும் தீவிரமடைந்து செல்கின்றது. இத்தகைய போக்குகள் செல்மதி நிலுவைப் பிரச்சனைக்கு இன்று கூடிய அழுத்தத்தைக் கொடுக்கின்றதெனலாம்.


1960-ம் ஆண்டிற்குப் பின் சென்மதி நிலுவையின் பாதக நிலைமையை உணர்ந்தமையினுல், அதைப் பாதுகாப்பதற்கான




மரம்நாட்டு விழாவில் எமது அதிபரும் 'மில்க் வைற்' உரிமையாளரும், மாணவர்களும்

பஸ் தரிப்பு நிலையத் திறப்பு விழாவில் எமது அதிபரும் - சாலை அதிபரும் - மில்க் வைற் உரிமையாளரும் - மாணவர்களும்






உப தலைவர்:
V. வேலாயுதம்



உப செயலாளர்:
R. கணேசலிங்கம்



உப பத்திராதிபர்:
A: F. மரியசீலன்

நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமானதெனக் கருதப்பட்டது. இதனால், இக்காலத்திலிருந்து உயர்ந்த இறக்குமதித் தீர்வை விதிக்கப்பட்டதோடு, அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகள் விரிவாக்கப்பட்டு இறுக்கப்பட்டன. அத்தோடு சென்மதி நிலுவைக்கு ஆதரவு அளிக்கும் முகமாக இலங்கை மத்திய வங்கி விசேட ஒதுக்கு வீதத்திட்டத்தை (*Scheme of special reserve requirnents*) 1961-ம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. இதன்படி சட்ட முறை ஒதுக்குடன் 38% ஒதுக்குசெய்யப்பட வேண்டுமெனக் கோரப்பட்டது. இது 1975வரை நீடித்த பின் வணிக வங்கிகளின் கடன்கள் மீதான கட்டுப்பாட்டுடன் இத்திட்டம் நீக்கப்பட்டது இக்காலத்தில் அடுத்த நடவடிக்கைகளில் ஒன்றே மத்திய வங்கி தனது வங்கி வீதத்தை நான்கு தடவைகள் உயர்த்தி 1965-ல் 2½% ஆக இருந்ததை தற்பொழுது 6½% ஆக்கியுள்ளது.

இவற்றைவிட 1967-ம் ஆண்டு ரூபாவின் மதிப்பை 20%ஆல் மதிப்பிறக்கம் செய்ததோடு, 1968-ம் ஆண்டு அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்தையும் அறிமுகம் செய்து வைத்தது. அந்நியச் செலாவணி உரிமைச்சான்றிதழின் செயற்பாட்டினால் வழமை சார்பற்ற ஏற்றுமதிகள் உற்சாகப்படுத்தப்பட்டு, வளர்ச்சியடைந்து வருவது ஒரு நல்ல அறிகுறியாகும்.

இவ்வாறாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதோடு மட்டுமன்றி, ஏற்றுமதி ஊக்குவிப்பு ஆகிய செயற்பாடுகளும் பூரண வெற்றியை அளித்ததெனக் கூறிவிட முடியாது. செல்மதி நிலுவைப் போக்கானது தொடர்ந்து ஒரு பற்றுக்குறையான கடந்த காலங்களில் சுட்டிக் காட்டுகின்றது. உதாரணமாக செல்மதி நிலுவைகளில் முக்கிய பங்கினை வகிக்கும் வர்த்தக நிலுவையானது 1960-ல் பர்தக மீதியாக 210 மில்லியனெனக் காட்ட 1970-ல் 315 மி. ஆகவும், 1974-ல் 1263 மி. ஆகவும் உயர்ந்து சென்றுள்ளதெனக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனால், நடைமுறைக் கணக்கில் தொடர்ந்து பற்றுக்குறை ஏற்படுவதைத் தவிர்க்க முடியாதிருக்கின்றது. இப் பற்றுக்குறையை 1960-ம் ஆண்டுவரை இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் மூலம் நிதியீட்டம் செய்யப்பட்டது. ஆனால், அக்காலங்களின் பின், இது இயலாமையினால், மூலதன உட் பாய்ச்சல் திட்ட உதவிகள் (*Projects aid*) உதவு தொகைகள் (*grante*) ஆகியவற்றின் மூலமும், மீதிக்கு சர்வதேச நிதித் தாபனத்திடமிருந்து கடன் பெறுவதன் மூலமுமே நிவர்த்தி செய்யப்பட்டது. 1962—65 காலப் பகுதியில் ¼ பங்கு பற்றுக்குறையானது இக்கடன்கள் மூலமே நிதியீட்டம் செய்யப்பட்டன. என்பது குறிப்பிடத்தக்கதாகும். சென்மதி நிலுவைப் பற்றுக்குறைக்கு நிதியீட்டம் செய்வதற்காகப் பெறப்பட்ட கடன்களின் அதிகரிப்பானது சென்மதி நிலுவையில், பாதகமான வர்த்தக மாற்றுடன் சேர்ந்து கூடிய அழுத்தத்தைக் கடந்த 10 ஆண்டுகளாக கொடுத்து வந்துள்ளது. இவ்வாறாக, பிரச்சினைக்குரிய கூறான சென்மதி நிலுவையைப் பாதுகாப்பதற்காக கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் எடுக்கப் பட்டமையினால் நுகர்வுப் பொருள்கள் மூலப் பொருள்கள் ஆகியவை குறைந்த அளவிலேயே இறக்குமதி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால், ஒரு புறம் அதிகரித்துச் செல்லும் வரவு செலவுத் திட்டத்தின் பற்றுக் குறையினால் உண்டாகும் பண வீக்கப் போக்கினால் நுகர்வுப் பொருட்களுக்கான கேள்வியை உள் நாட்டில் அதிகரித்துச் செல்லுகின்ற அதே வேளையில் பற்றுக்குறையான நுகர்வுப் பொருள்களில் கிடைப்பானது வாழ்க்கைச் செலவை மிகவும் உயரத் தள்ளிச் செல்கின்றது. அத்தோடு கோட்டா முறையிலான மூலப் பொருள்களின் இறக்குமதியானது இருக்கும் கைத்தொழில்களில் முழு இயலளவையும் (*Full Capasity*) பாவிக்க முடியாத நிலையை உருவாக்கியுள்ளது. இது பெரும் பொருளாதார இழப்பாகும். இவையன்றி புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கும் சென்மதி நிலுவையானது ஒரு பிரச்சினைக்குரிய கூறாக இருப்பதனால், அழுத்துகின்ற வேலையின்மைப் பிரச்சனைக்கு போதியளவு நிவாரணம் கைத்தொழில் துறையினால் கொடுக்க முடியாதிருக்கின்றது.

எனவே, இலங்கைக்குப் போதியளவு செலாவணி கிடைக்குமாயின் அநேக பொருளாதார சமூகப் பிரச்சனைகள் தீர்க்கப் படலாமென்று கருதப்படுகின்றது. ஆயினும் சென்மதி நிலுவையைச் சாதகமாக மாற்றிக் கொள்ள இலங்கை பல முயற்சிகள் செய்த போதிலும் உள்நாட்டுப் பொருளாதார போக்குக்களும் சர்வதேச பொருளாதார ஒழுங்குகளும் சென்மதி நிலுவையை ஒரு பிரச்சனைக்குரிய விடயமாக மாற்றிக்கொண்டு செல்கின்றது.

# நல்லூர் பலநோக்கு

## கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி.

நுகர்ச்சியாளரின் தேவைகளைப் பூர்த்தியாக்குவதே எமது நோக்கம்

★ சிறந்த புடவைகள் விவசாய மருந்துகள் ★

உரவகைகள்

மற்றும் முக்கிய தேவைகளுக்கு நாடுங்கள்

அத்தோடு

**சேமிப்பு, அடைவு மூலம் பணம் பெறுதல், கடன் வசதிகள்**

முதலியவற்றிற்கு

## கிராமிய வங்கி

**கொக்குவில், திருநெல்வேலி.**

★ கிருமிநாசினிகள்

★ உரவகைகள்

நிதான விலையில் எந்நேரமும்

பெற்றுக் கொள்ள சிறந்த நிலையம்

# பிள்ளையார்

# விவசாய சேவை நிலையம்

ஆஸ்பத்திரியடி, **இணுவில்.**

உரிமை: K. V.ஜெயரட்ணசிங்கம்

# இலாபப் பகிர்வுத் திட்டம்

நா. இராசநாயகம்
தே. தொ. க. த. ப. கணக்கியல் (இறுதி வருடம்

இலாபப் பகிர்வுத்திட்டம் பேரளவு உற்பத்தியின் விளைவாக தொழிலாளர்களின் நலன் கருதி அமுலுக்கு கொண்டு வரப்பட்ட ஒரு திட்டமாக கருதப்படுகின்றது. இத்திட்டத்தின் பிரகாரம் தொழில் ஸ்தாபனங்களுக்கு ஏற்படும் லாபத்தின் ஒரு பகுதி தொழிலாளர்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்படல் வேண்டும் என்ற கோட்பாடு வலியுறுத்தப்படுகின்றது. வழமையாக தொழில் ஸ்தாபனங்களில் ஏற்படும் லாபம் முதலாளிவர்க்கத்துக்குரித்துடையதாக கருதப்பட்டு வந்தது. ஆனால் தொழில் ஸ்தாபனங்களில் ஏற்படும் பெரும் லாபத்துக்கு முதலாளிமார்கள் மட்டுமன்றி தொழிலாளர்களும் காரணகர்த்தாவாக அமைகின்றதனால் லாபத்தின் ஒரு பகுதி பங்குகளாக அல்லது பணமாக தொழிலாளர்களுக்கும் வழங்கப்படல் வேண்டும் என்பது இத்திட்டத்தினூடாக வலியுறுத்தப்படுகின்றது. இலங்கை அரசாங்கமும் வெகு அண்மைக் காலத்தில் 24 அரசாங்க கூட்டுத்தாபனங்களிலும் 20 பெரும் தனியார் ஸ்தாபனங்களிலும் லாபப்பகிர்வுத் திட்டத்தை அமுல் செய்வதற்கு உத்தேசித்துள்ளது.

இத்திட்டம் அமுல் செய்யப்படுவதனூடாக நாட்டின் பொதுவான சமுதாயத்துக்கும் பல சாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனை பரவலாக அமுல் செய்வதனூடாக நீண்டகாலமாக, லாபம் முதலாளி வர்க்கத்துக்கு மட்டும் உரித்துடையது என்று கருதப்பட்ட தவறுதலான தத்துவத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கூடியதாக இருக்கின்றது. இத்திட்டத்தினை தீவிரமாக அமுல் செய்வதனூடாக தொழிலாளர்களுடைய வருமானத்தை அதிகரிக்கக் கூடியதாக இருக்கும். இவ்வாறு ஏற்படும் வருமான அதிகரிப்பின் விளைவாக தொழிலாளர்கள் கூடிய திருப்தியுள்ளவர்களாக ஸ்தாபனத்தின் வளர்ச்சியிலீடுபடுவார்கள். இதன் விளைவாக ஸ்தாபனம் பெரும் லாபத்தை அனுபவிக்கக் கூடியதாக இருக்குமாதலால் அதனூடாக முதலாளி வர்க்கமும் தொழிலாளி வர்க்கமும் தகுந்த பலாபலனை அனுபவிக்கக் கூடியதாக இருக்கும். மேலும் முதலாளி தொழிலாளி நல்லுறவை ஸ்தாபனங்களில் ஏற்படுத்துவதற்கு லாபப்பகிர்வு திட்டம் ஸ்தாபனங்களிலும் சாதகமான சூழ்நிலையை உருவாக்கக் கூடியதாக இருக்கும். இதன் விளைவாக காலத்துக்குகாலம் தொழிலாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையில் ஏற்படும் பிரச்சினைகள் பெருமளவுக்கு குறைக்கப்பட்டு ஸ்தாபனம் துரிதமாக வளர்ச்சியடையக் கூடியதாக இருக்கும்.

முதலாளி தொழிலாளி வகுப்புப் பேதங்களை குறைப்பதற்கும் இது உதவியாக அமையும். லாபம் இதுவரை காலம் வரையும் முதலாளி வர்க்கத்தினால் மட்டும் அனுபவிக்கப்பட்டதனால் முதலாளி தொழிலாளி வகுப்புப் பேதங்கள் பெருமளவுக்கு வளர்ச்சியடைந்தன. ஆனால் லாபப் பகிர்வுத்திட்டத்தினூடாக லாபத்தின் ஒரு பகுதி தொழிலாளர்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்படுவதினால் இதை அமுல் செய்வதனூடாக முதலாளி தொழிலாளி வகுப்புப் பேதங்களை குறைப்பதில் மட்டுமன்றி முதலாளித்துவத்தின் துரிதமான வளர்ச்சியையும் கட்டுப்படுத்தக் கூடியதாக்வும் இருக்கும். தொழிலாளர்களின் வருமானம் இதனூடாக அதிகரிக்கப்படுவதனால் அவர்களே நாட்டின் சமுதாயத்தின் பெரும் பகுதியினராக இருக்கின்ற காரணத்தால் அவர்களின் வருமான அதிகரிப்பு நாட்டின் பொது சமுதாயத்தின் வருமான அதிகரிப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். இவ்வாறு சமுதாயத்தின் வருமான அதிகரிப்பு ஏற்படுவதனால் அவர்களுடைய கொள்வனவு சக்தி அதிகரித்து அதனூடாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு தகுந்த சந்தை வாய்ப்பும் ஏற்படுத்தப்படும்.

நாட்டில் அதிகப்பற்றான சமுதாய அங்கத்தினர்களுடைய வருமானம் குறைவாக இருக்கின்றதனால் அரசாங்கம் தனது வருமானத்தில் பெரும் பகுதியை இலவச கல்விச் சேவை இலவச சுகாதார சேவை போன்ற சமுதாய சேவைகளில் ஈடுபடுத்த வேண்டி இருக்கி

றது. லாபப்பகிர்வுத் திட்டத்தை அமுல் செய்வதனூடாக நாட்டின் தொழிலாளர் களுடைய வருமான அதிகரிப்பு ஏற்படுத் தப்பட்டு அதன் பிரதிபலனுக அரசாங்கத் தின் சமுதாயப் பொறுப்பு குறைக்கப்படு கின்றது. எனவே அரசாங்கம் தனது வரு மானத்தின் பெரும் பகுதியை நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலீடுபடுத்தி பொருளாதாரத்தை மேம்படுத்தக் கூடிய தாக இருக்கும் தொழிலாளர்களின் வரு மானம் குறைவாக இருக்கின்ற காரணத் தினுல் அவர்கள் மத்தியில் சேமிப்பும் பற் றுக் குறையாகக் காணப்படுகின்றன. லாபப் பகிர்வுத் திட்டத்தை அமுல் செய் வதனூடாக தொழிலாளர்களின் வருமான அதிகரிப்பை ஏற்படுத்தி அதன் விளைவாக நாட்டின் பொது சமுதாயத்தின் மத்தியில் சேமிப்புப் பண்பை வளர்க்கக் கூடியதாக இருக்கும் சேமிப்புப் பண்பு வளர்ச்சியடை வதன் விளைவாக நாட்டின் முதலாக்கம் முதலீடு ஆகியவை பெருமளவில் ஏற்படுத் தப்படுவது மட்டுமன்றி வங்கி அமைப்பின் வளர்ச்சியையும் துரிதப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

லாபப் பகிர்வுத்திட்டம் பலதரப்பட்ட சாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்ற பொழுதும் ஒருசில பிரச்சினைகளையும் ஏற் படுத்துகின்றது. இத்திட்டம் நாட்டின் சகல ஸ்தாபனங்களிலும் அமுல் செய்யப் படாது ஒருசில ஸ்தாபனங்களில் மட்டும் அமுல் செய்யப்பட்டால் தொழிலாளர்கள் மத்தியில் இது பிரிவினையை ஏற்படுத்தும். லாபப்பகிர்வுத் திட்டம் அமுல் செய்யப் படும் ஸ்தாபனங்களில் தொழில் புரியும் தொழிலாளர்கள் ஏனைய ஸ்தாபனங்களி லுள்ள தொழிலாளர்களிடமிருந்து தம்மை வேறுபடுத்தி நடப்பார்கள். இதன் விளை வாக தொழிலாளர்கள் மத்தியில் ஒற்றுமை குறைக்கப்படுவது மட்டுமன்றி தொழிற் சங்கங்களின் வளர்ச்சிக்கு பாதகமான சூழ் நிலையும் உருவாக்கப்படுகின்றது. இவ்வாறு தொழிலாளர்கள் மத்தியில் ஏற்படும் ஒற் றுமைக் குறையை முதலாளி வர்க்கம் தமக்கு பாதகமாக மாற்றி அமைத்துக் கொள்ளலாம். மேலும் லாபப் பகிர்வுத் திட்டத்தினூடாக தொழிலாளர்களுக்கு உடனடியாக லாபம் வழங்கப்பட்டது. லாபத்தினூடாக பங்குகள் வழங்கப்பட் டால் தொழிலாளர்கள் பிற்போடப்பட்ட வருமானத்தையே அனுபவிக்கக்கூடியதாக இருக்கும். ஆனுல் பணப்பலம் குறைந்த தொழிலாள வர்க்கம் வழமையாக பிற் போடப்பட்ட வருமானத்தை விரும்பமாட் டாது தொழிலாளர்களுக்கு லாபத்தினூ டாக பங்குகள் வழங்கப்பட்டால் ஸ்தா பனங்களுக்கு ஏற்படும் நட்டத்திலும் அவர் கள் பங்குபற்ற வேண்டிய கட்டாயம் ஏற் படும். ஆனுல் பணப்பலம் படைத்த முத லாளி வர்க்கத்தை போலல்லாமல் தொழி லாளி வர்க்கம் அபாய நட்டங்களை ஏற் பதற்கு பெருமளவுக்கு விரும்பாது. லாபப் பகிர்வுத் திட்டம் அமுல் செய்யப்படுவதன் காரணத்தினுல் இதுவரை காலமும் முத லாளி வர்க்கத்தினரால் அனுபவிக்கப்பட்ட லாபம் தொழிலாளர்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்படுகின்றது. ஆனுல் லாபத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்டு மூல தனத்தை ஈடுசெய்யும் முதலாளி வர்க்கம் இதன் விளைவாக ஏற்படும் அதிர்ப்தியினூ டாக முதலீடுகளையும் பெருக்காதிருந்தால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி பாதிக் கப்படும். வழமையான பொருளியல் தத் துவங்களின் பிரகாரம் தொழிலாளர்களி லும் பார்க்க முதலாளி வர்க்கம் கூடிய சேமிப்புத் தன்மையுடைய வர்க்கமாகக் கருதப்படுகின்றது. எனவே இதுவரைகால வரையும் முதலாளி வர்க்கத்தினுல் மட்டும் அனுபவிக்கப்பட்டு வந்த லாபம் நுகர்வுத் தன்மைகூடிய தொழிலாளர்களுக்கும் பிரித் துக் கொடுக்கப்பட்டால் நாட்டில் நுகர்வு அதிகரிக்கும் சேமிப்பு குறையும். இதன் விளைவாகவும் நாட்டில் பொருளாதார வளர்ச்சியும் பாதிக்கப்படும். லாபப் பகிர் வுத் திட்டம் அமுல் செய்யப்படும்பொழுது முதலாளி வர்க்கத்துக்குரித்துடைய லாபம் எது தொழிலாளர்களுக்குரித்துடைய லாபம் எது என்பதை நிர்ணயிப்ப தும் தொழிலாளர்களுக்காக ஒதுக்கப்படு கின்ற லாபம் பணமாகவோ அல்லது பங் குகளாகவோ வழங்கப்பட வேண்டும் என் பதும் பிரச்சினைகளாக எதிர் நோக்கப்பட லாம். லாபப் பகிர்வுத் திட்டம் இத்த கைய குறைபாடுகளை உடையதாக கருதப் படுகின்ற பொழுதும் இத்திட்டம் தொழி லாளர்களுக்கு பெருமளவுக்கு சாதகமான சூழ்நிலையையே ஏற்படுத்தும் என்று கரு தப்படுகின்றது.

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

# உணர்வில் எழுதிய சிலை

நா. யோகராசா
(தே. தொ. க. த. ப. கணக்கியல் இறுதி வருடம்)

தேன் சிந்திடும் பொன்னெழில் மலரே
வான் தந்திட்ட வண்ண நிலவே - நீ
இந்தச் சுந்தரச் சோலையில் இன்பச்
சந்தணச் சிலையாய் நிலைகொள் வதேனோ?

மானென்று உனைக் கவிஞர் பாடியதால்
நானுனை வில்கொண்டு வேட்டை யாடிடுவேனென்றோ
மௌனத்தை நிலையாக்கி மனத்தைக் கல்லாக்கி
கானத்து மழை பெய்யாது சிலையானாய்

சேலென்று பாவலர் விழிகளை நோக்கியதால்
தூண்டிலர் அங்கு வந்திடுவாரென்றோ சிலையானாய்?
சேலை விலக்கி வேலையெடுத்து வைக்கிறேன்
சிறிதும் அச்சம் வேண்டாம் உயிர்த்துவிடு

ஓடுகின்ற இடைகண்டு ஓராயிரம் பேர்கள்
ஓடி வந்தங்கே கலை படித்திடுவாரென்றோ
நடிக்கின்ற கலை நிறுத்தி நாயகியே
நிலை கொண்ட எழில் வண்ணச் சிலையானாய்

அசைகின்ற உன்னெழில் அபிநயம் கண்டு
ஆருத்துயரில் அவமானம் அடைந்திங்கு
வசைமாரி கொண்டு தேவ கன்னியர்கள்
வந்துன்னைத் திட்டிடுவாரென்றோ நீ சிலையானாய்

பனித்திரையில் பருவ நிலைகள் மறைந்து நிற்க
பண்பு தவறிப் பலர் வந்திடுவாரென்றோ,
கனிந்திருக்கும் உன் நிலையை காத்திடும் பண்பாலோ,
காவியமே கனிமொழியே நீ சிலையானாய்.

கண்ணயர்ந்து காதல்க் கனவில் மிதக்கையிலே
கள்வரைப் போலங்கு களவாக ஓடி
வண்டினம் மணம்தேடி வந்தடையும் என்றோ
வடிவழகே வசந்தமே நீ சிலையானாய்

முன்னமெலாம் நடையினிலே தாமே மேலென்று
முழுச்சிறப்பும் பெற்றுப் புகழ்பூத்த வெள்ளை
அன்னமெலாம் உன்நடைகண்ட பொறாமைச் சபிப்பால்
அழகே அசையாது அப்படியே சிலையானாயோ?

கம்பர் பாடிவிட்ட இன்பக்கவி கேட்டுமிங்கே
கலையாத நிலைகொண்டு ஏன் சிலையானாய்?
கொம்பர் தழுவும் கொடியினைப் பார்த்துமிங்கே
கோல வெழிற் கலைவண்ணமே உயிர் கொள்ளாயோ?

தழுவும்நேரம் பார்த்து நிற்கின்றாயோ - துணை
தழுவும்வரை கற்பினை காக்கவென்றோ - உணர்வில்
எழுதிவைத்திட்ட தமிழ்ப் பண்பாட்டு மாதரசே
எனையாளும் கவியரசியே நீ சிலையானாய்.

# இலக்கியத்தில் வணிகம்

கலாநிதி அ. சண்முகதாஸ்

மனிதன் தான் உற்பத்தி செய்த பொருட்களில் தனது தேவையைப் பூர்த்தி செய்து எஞ்சுவனவற்றை வேறொரு பொருளுக்காகப் பண்டமாற்றுச் செய்யத் தொடங்கியதே வணிக வரலாற்றின் ஆரம்பமாகும். இவ்வரலாற்றின் வளர்ச்சியிலே, மனிதன் உள்நாட்டில் செய்த வணிக முயற்சிகளையும் வெளிநாட்டுடன் கொண்ட வணிகத் தொடர்புகளையும் நாம் காணுகின்றோம். தமிழ் மக்கள் தாம் மேற்கொண்ட உள்நாட்டு வெளிநாட்டு வணிகம் பற்றிய பல தகவல்களைத் தமிழ் இலக்கியங்கள் எமக்குத் தருகின்றன.

வணிகம் பற்றிப் பல செய்திகள் கூறுந் தமிழ் இலக்கியங்கள் வணிகர்கள் பண்புகள் பலவற்றையும் விதந்து பேசுகின்றன. வாணிகஞ் செய்வாரின் குணநலம் எப்படியிருக்க வேண்டுமெனக் கூறவந்த வள்ளுவர்,

''வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தம்போற் செயின்''

என்று கூறுகிறார். ''பிறர் பொருளையும் தம்பொருள்போல் பேணிச் செய்யின், வாணிகஞ் செய்வார்க்கு நன்றாய் வாணிகமாம்'' என இக்குறளுக்குப் பரிமேலழகர் பொருளுரைக்கின்றார். வணிகர்கள் போர், குழப்பம் போன்றனவற்றை விரும்பாதவர்கள். ஏனெனில் அவை தம் வணிக முயற்சிகளுக்குத் தடையாயிருப்பதனாலேயாகும். இதனால், வணிகர்கள் அறக் கருத்துக்கள் பலவற்றை நடைமுறைப்படுத்தவும், அவைபற்றிப் பேசவும் தலைப்படுவர். இந்நிலையினையே, பண்டைத் தமிழ் வணிகர்கள் பண்புபற்றிப் பேசும் தமிழ் இலக்கியங்களும் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. ''பண்டைக் காலத்தில் தமிழகத்தில் வணிகம் உலக நன்மைக்காகவே நடந்து வந்தது. பொருள் ஈட்டுவது என்னும் கருத்தால் மட்டும் அவர் இத்தொழிலை நடத்தவில்லை'' என கலாநிதி சு. வித்தியானந்தன் வணிகர் பண்புபற்றித் தனது தமிழர் சால்பு என்னும் நூலிலே கூறுகிறார். பட்டினப்பாலை என்னும் சங்க இலக்கிய நூலிலே,

''நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது
கொடுப்பதூஉங் குறைகொடாது''

என்று காவிரிப்பூம் பட்டினத்து வணிகர் நலன் பேசப்படுகின்றது. கலப்பையின் நீண்ட நுகத்திலே பொருத்தப்பட்டுள்ள பகலாணிபோல நடுவுநிலை தவறாதுள்ள நல்ல மனத்தையுடையவராகவும், பிறர் குறை கூறுவரென அஞ்சி உண்மையே பேசுபவராகவும், தம்முடைய பொருளைக் கொடுக்கும்போது குறைத்துக் கொடாமலும் பிறர்பொருளைக் கொள்ளும்போது மிகுதியாகக் கொள்ளாமலும் இருவர் பக்கப் பொருள்களையும் ஒரே தன்மையாய் நோக்குபவராகவும் காவிரிப்பூம்பட்டினத்து வணிகர் விளங்கினர் என மேற்காட்டிய பாடலடிகள் கூறுகின்றன. இவை தமிழ்ப் புலவர்களால் உயர்வுநவிற்சியுடன் கூறப்பட்டனவென்று கொள்வதற்கில்லை. பிற நாட்டு வரலாற்றாசிரியர்களும், யாத்திரிகர்களும் இப்பண்புகளை எடுத்துக்கூறியுள்ளனர். பன்னிரண்டாம் நூற்றாண்டு யூத யாத்திரிகனான பெஞ்சமின் தமிழகத்துத் துறைமுகத்தில் தொழில்புரியும் சோழ உத்தியோகத்தர்களின் நம்பத்தகு பண்புடையார் எனத் தன் குறிப்புகளிலே கூறியிருப்பதாக வரலாற்றுப் பேரறிஞர் நீலகண்டசாஸ்திரி கூறுவர்.

இன்று மேலை நாட்டில் *Burton The Tailor, Martin The Barker* என்றெல்லாம் பெயரிட்டு விளம்பரஞ் செய்வதைக் காணலாம். இதேபோன்று தமது சிறப்பு வணிகப் பெயர்கொண்ட பலரை எமது பழந் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. நெல் முதலிய தானியங்களை விற்கும் காரணத்தால் சீந்தலைச்சாத்தனார் என்பவர் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் என அழைக்கப்பட்டார். ஆடை வியாபாரஞ் செய்த காரணத்தால், அறுவை வணிகன் இளவேட்டனார் என்னும் பெயர் உண்டாயிற்று. மதுரைப் பண்ட வாணிகன் இளநந்தனார் என்பவர் பலசரக்கு வியாபாரஞ் செய்தவாராவர்.

தமிழகத்தின் உள்நாட்டு வணிகத்தில் உப்பு, மிளகு, நெல், தயிர், மீன், தேன், கிழங்கு, இறைச்சி, கரும்பு போன்ற பொருட்கள் இடம் பெற்றன. பண்ட

மாற்றே இவ்வணிகத்தின் போக்காகவிருந்தது. நெல்லைக் கொடுத்துப் பிறபொருட்களைப் பெறுவதே பெருவழக்காயிருந்தது.

''உப்பை மாறி வெண்ணெற் றரீஇய'' என்று குறுந்தொகைப் பாடலடி உப்பை விற்று வெண்மையான நெல்லைப் பெறுவதுபற்றிக் கூறுகின்றது. மீன் பிடிப்பவர்கள் தமது மீனைக் கொடுத்து நெல், பயறு, உப்பு முதலிய பொருட்களைப் பண்டமாற்றுகக் கொள்வர். உள்நாட்டு வணிகப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு எருதுகள் பூட்டிய வண்டிகள் உபயோகப்படுத்தப்பட்டன; சில சந்தர்ப்பங்களில் எருதுகளுக்குப் பதிலாகக் கழுதைகளும் வண்டியிழுக்கப் பயன்படுத்தப்பட்டன. பெரும்பாணாற்றுப்படை என்னும் சங்க கால இலக்கிய நூல், உப்புப் பொதிகளை ஏற்றிய வண்டியினைப் பெண்கள் ஓட்டிச் செல்வதையும், அவ்வாறு செல்லுமிடத்து அவ்வண்டியின் இரண்டு பக்கங்களிலும் உப்பு வணிகர் வண்டியின் அச்சு முறியாமற் பாதுகாத்து நடப்பதையும், வண்டியில் முன் பூட்டிய எருதுகள் இளைத்தால், அவற்றின் இடத்திற் பூட்டுதற்குச் சில எருதுகளை மேலதிகமாக நடத்திச் செல்வதையும் பற்றிக் கூறுகின்றது.

தமிழ் நாட்டில் பிறநாட்டு வணிகம் பண்டைக்காலந் தொட்டே சிறப்புற நடைபெற்று வந்தது. இதன் காரணத்தால் தமிழ் நாட்டுத் துறைமுகப் பட்டினங்களில் பிறநாட்டு வணிகர் குழாங்கள் இருப்பிடங் கொண்டிருந்தன. காவிரிப்பூம்பட்டினத்தில் வேறுவேறு மொழிகளைப் பேசுவோர் வாழ்ந்தனர் என்பதைப் பட்டினப்பாலை,

''மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம்''

என்று கூறுகின்றது. இவ்வாறு வாழ்ந்த வேற்று நாட்டு வணிகருள், யவனர் எனத் தமிழ் இலக்கியம் குறிப்பிடும் கிரேக்கர் முக்கியமானவர்களாகும்.

பிறநாட்டு வணிகர்கள் வாழ்ந்த பட்டினத் துறைமுகங்களில் பண்டகசாலைகள் பல அமைக்கப்பட்டிருந்தன. ஏற்றுமதிக்காகப் பொருட்களைச் சேகரித்து வைக்கவும், இறக்குமதிசெய்யப்பட்ட பொருட்கள் உரிய இடம் சென்று சேரும் வரையும் பாதுகாப்பதற்கும் இப் பண்டகசாலைகள் உதவின. பொருட் பொதிகளிலே பெயர்களை எழுதிப் பாதுகாப்பாக வைத்திருக்கும் வழக்கம்பற்றி சிலப்பதிகாரம் கூறுகின்றது;



வம்ப மாக்கள் தம் பெயர்பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப்
பல்பொதி

''வேற்று நாட்டினின்று வந்த புதியோர், தம் பெயர் எழுதிய அடையாள எழுத்தினை இலச்சினையாகப் பொறித்த பலவாகிய எண்களையுடைய பண்டப் பொதிகள் காவிரியின் கடைமுக வாயிலோரங்களிலே குவிந்து கிடந்தன. கண்டார்க்கு அச்சத்தை ஊட்டுபவரும் வலிய கால்களையுமுடைய காவற் பணிமக்கள் இப்பண்டகசாலைகளைக் காவல் புரிந்தனர்.

வணிகத்துக்கு உபயோகப்படுத்தப்பட்ட கலங்கள் பற்றிப் பெரிப்ளூஸ் ஆசிரியர் (The author of *The Periphis of the Erythraen Sea*) பின்வருமாறு கூறுகிறுர் சோழநாட்டுத் துறைமுகங்களில் கரையோரமாகத் தமிரிக்கா (*Damirica*) வரையும் செல்லும் கப்பல்கள் உள்ளன; இன்னும் மரங்களைப் பிணைத்துச் செய்யப்பட்ட சங்கர (*Sangara*) எனப்பட்ட பெரும் கப்பல்களும் அங்கு உள்ளன. கிரிசி (*Chryse*) என்ற ஊருக்கும் கங்கை நதிக்கும் செல்லும் கப்பல்கள் கொலண்டியா (*Colandia*) எனப்பட்டன. கொலண்டியா என்னும் இக்கப்பல்கள் மிகப் பெரிய உருவத்தை உடையன. பெரிப்பிளூஸ் ஆசிரியர் குறிப்பிட்ட கப்பல் விபரங்கள் பற்றிக் குறிப்புரை வழங்கும் தமிழர் சால்பு ஆசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன்,

''பெரிப்புளுசு ஆசிரியர் இங்கு மூன்று வகைக் கப்பல்களைக் குறித்திருக்கிறுர். கரையோரங்களிற் செல்லும் கப்பல்கள் ஒருவகையைச் சார்ந்தன. தமிழ் இலக்கியத்தில் பஃறி, தோணி, அம்பி என்று வழங்குவனவோடு அவை பொருந்துவன. பரந்த இடத்தையுடைய பெருங் கடலிற் செல்லும் கப்பல்கள் யாவும் மற்றைய இரண்டு வகைகளையும் சார்ந்தன. அவையே சங்க நூல்களில் நாவாய் எனவும் வங்கமெனவும் வழங்கின.''

என்று கூறுகின்றுர்.

தமிழ் நாட்டிலிருந்து பிறநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டனவாக மிளகு, சந்தனம், அகில், பவளம் ஆகிய பொருட்கள் அமைந்தன. யவனர்களுடைய கப்பல்கள் தமிழ்நாட்டுக்குப் பொன்னை இறக்குமதிப் பொருளாகக் கொண்டுவந்து, மிளகினை ஏற்றிச் செல்வன என்று அகநானூறு கூறுகின்றது:

''யவனர் தந்த வினைமா ணன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு
பெயரும்''

இறைச்சி முதலிய உணவுகளைப் பழுது படாது வைப்பதற்கு மேல்நாட்டவர்க்கு மிளகு உதவியது. கிரேக்க – உரோம வைத்தியர்கள் மிளகை மருந்துக்குப் பயன் படுத்தினர். இதனை இந்திய மருந்து என அவர்கள் அழைத்தனர்.

பிறநாட்டு வணிகம் காரணமாக பிற நாட்டு மொழிச் சொற்கள் தமிழ் மொழியில் வந்து சேர்ந்தன. அதேபோன்று தமிழ்மொழிச் சொற்கள் பல பிறமொழிகளிற் சேர்ந்தன. அரிசி என்ற சொல் கிரேக்க மொழியிலும், துகி என்னுஞ் சொல் ஹிபிரு (*Hebrew*) மொழியிலும் இடம்பெற்றதை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

# ஏடெடுத்து நான் கவிதை எழுத வேண்டும்

K. திருரவீந்திரநாதன்
தமிழ் சுருக்கெழுத்து மாலை

ஏடெடுத்து நான் கவிதை எழுதவேண்டும்
என் கவியின் கருவாக நீ மாறவேண்டும்
பாடுபடும் உந்தனுக்கு நல்ல வாழ்வு
பாரிதனில் பறந்தோடி வரவும் வேண்டும்!

மாடாக நீயுழைத்த உழைப்பைத் தின்று
மாடிமேல் மாடி வீடு கட்டுமந்தக்
கேடு கெட்ட பணக்காரக் கும்பலுன்னை
ஓடாக மாற்றும் நிலையொழிய வேண்டும்!

தெருத்தெருவாய் கால்கள் தேய வண்டியோட்டி
தெருவினிலே ஏழை நீ படுக்கும் போது
பருத்தவுடல் பணக்காரக் கும்பலுன்னை
பழிக்காது அழைத்தவர்கள் பழகவேண்டும்!

இத்தனையும் இந்நாட்டில் இல்லை என்றால்
ஏழை இனி உனக்கெங்கே நல்ல வாழ்வு
தூயவனே உன்துயரைத் துடைக்கவெனத்
துணிவுடனே கவி சமைப்பேன் நித்தமிங்கு!

மங்கையரை மதிநிலவைப் பாடியென்ன - நித்தமொரு
மலரதனைக், குரைகடலைப் பாடியென்ன
உண்ணவொரு வழியற்ற உந்தனுக்கு
உயர்வற்ற வாழ்விங்கு இருக்கும் போது!

கன்னியரைக் காட்சிதனைப் பாடியென்ன
காமத்தின் சுவை ததும்பப் பாடியென்ன
உழைத்து வரும் தொழிலாளி உந்தனுக்காய்
உருவாகும் கவியாவும் உதிக்க வேண்டும்!

தூயநெறி ஏட்டிலிருந் தென்ன லாபம்
தூயவர்கள் துயரடைந்து வாழும் போது
வாழவழியற்ற தொழிலாள
வர்க்கமது வழியற்று வாழும்போது!

(கவிதைப் போட்டியில் முதலாவது பரிசு பெற்றது)

# செவ்"வாய்த்" தோஷம்

செல்வி. கு. கந்தையா
தேசிய உயர் கணக்கியல் தகுதித் தேர்வு IIம் வருடம்

வழக்கம்போல், அந்த பஸ் ஹோல்ற்றில் பஸ்ஸை நிறுத்தினேன்.

''அன்ரீ!'' ஊளையிடுவதுபோல் எழுந்தன பல குரல்கள்.

''அன்ரி இறங்கப் போருவடா வழியை விடுங்கோடா.''

''ஆ......ஆ...... மெதுவா மெதுவா—பாத்து பாத்து''

ஆசனத்திலிருந்து எழுந்த அவள் பஸ்ஸைவிட்டு இறங்கும்வரை இந்தக் கூக்குரல்கள் அடங்கவேயில்லை. அடங்கவும் மாட்டாது. நானும் பார்க்கிறேன். தினமும் அந்தப்பெண் இறங்கும்போது இந்த ''ரெக்னிக்கல் கொலிஜ்'' மாணவர்கள் செய்யும் ஆர்ப்பாட்டம்!

இவர்களுக்கெல்லாம் எதற்கு இந்த ''ஈவினிங் கோஸ்'' படிப்பு? மேற்படிப்பைத் தொடரமுடியாமல் உத்தியோகங்களில் அமர்ந்து விட்டவர்களுக்குத் தொடர்ந்து படிக்க ஒரு வாய்ப்பளிப்பதற்காகவா? இல்லை கண்ணில் காணும் பெண்களுக்கெல்லாம் 'அன்ரி'... 'மாமி'... என்று பட்டம் வைத்து வம்புக்கிழுக்க ஒரு சந்தர்ப்பம் கொடுப்பதற்காகவா? லேசான ஆத்திரத்துடன் பஸ்ஸை ஸ்ரார்ட் செய்தேன்.

அவர்களுடைய வயதுக்கு - அவர்கள் அடிக்குங்கூத்து கொஞ்சம் மிகையாகப்பட்டது எனக்கு. கல்யாணமாகாத பையன்கள்தான் ஏதோ வயதுக்கோளாறு... போகட்டுமென்ருல், ஒன்றிரண்டைப் ''பெற்றுப் போட்டவர்கள்'' படுத்துகிற பாடு! வெறுப்புடன் அக்ஸிலேட்டரை மிதித்தேன். சீறிப் பாய்ந்தது பஸ்.

''டிங்!'' பெல் சத்தம். பஸ்ஸை ''ஸ்லோ'' பண்ணினேன். அந்த மஞ்சள் நிறக்கட்டிடம் — அந்தப் ''பல்தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம்'' என்ற பெயர்ப்பலகையைத் தாங்குகின்ற அந்தக் கட்டிடம்—அதன் முன்னே பஸ்ஸை நிறுத்தினேன்.

''ஆ... வயோதிபர் மடம் வந்திட்டுது. இறங்குங்கோ, இறங்குங்கோ'' எந்தக் குறும்புக்காரனோ அவசரப்படுத்தினுன். 'கொல்'லென்ற சிரிப்புடன் முண்டியடித்துக் கொண்டு அந்த மாணவ மாணவியர் பட்டாளம் இறங்கியவுடன் பஸ்ஸே வெறுமையாகிக் காட்சியளித்தது.

''வயோதிபர்தான்—ஆனுல் ''டீன் ஏஜெர்ஸ்'' போல அக்ட் பண்ணினம்'' நினைத்துக் கொண்டே பஸ்ஸைச் செலுத்தினேன்.

என்னுடைய இத்தனை வருட சேர்விஸில் தினமும் அந்த மஞ்சள்க் கட்டிடத்தின் வாசலில் எத்தனை ஆயிரம்பேரை இறக்கிவிட்டிருக்கிறேன். ஏற்றி வந்திருக்கிறேன். எத்தனை ரக மாணவர்கள்? கல்வியே கண்ணுக வந்து செல்லும் அப்பாவிகள்—குழந்தைத்தனமான குறும்புக்காரர்கள்... முற்றிய ஈவ் டீஸிங் பிரியர்கள்... காதல் மன்னர்கள்... இப்படி எத்தனை ரகம்? உள்ளே என்ன நடக்குமோ, எதைப் படித்துக் கிழிக்கிருர்களோ, இங்கே பஸ்ஸில் நடப்பதை வைத்துச் சொல்கிறேன்.

அதிலும் இந்த—இப்போ இறங்கிப் போகிருர்களே இந்த 'பட்ஜ்' கொஞ்சம் ஓவர்தான். அந்தப் பெண்ணை 'அன்ரி' என்று அழைத்துப் பண்ணுங் கலாட்டா ஒன்றே போதுமே அதை நிரூபிக்க.

கண் பாதையிலும்—கை ஸ்ரேரிங்கிலும் பதிந்திருந்தாலும் சிந்தனை என்ருே நிகழ்ந்த—அந்தப் பெண் 'அன்ரி' என நாமகரணஞ் சூட்டப்பட்ட அந்தச் சம்பவத்திலே போய்ப் பதிந்துகொண்டது.

அன்று—நேரம் 4-25 யாழ்ப்பாணம் பஸ் ஸ்ராண்டில் நின்றிருந்த அந்த '808'-ல் ஏறி என் ஆசனத்தில்—ட்ரைவர் சீற்றில்—அமர்ந்து கொண்டேன். கொண்டக்டர் டிக்கெட் எழுதி முடிக்கும்வரை பொழுது போக வேண்டாமா. தலைக்கு மேலிருந்த கண்ணுடியிலே உள்ளே—பஸ்ஸின் உள்ளே - இருப்பவர்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தேன். என்பார்வை என்னையறியாது முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த அவளின் மேற் பதிந்து நிலைத்தது. வியந்து போனேன். இப்படி ஒரு அழகா? காலை வேளைகளில் தினமும் அவள் இதே பஸ்ஸில் ஏறி யாழ்ப்பாணம் வருவதைக் கவனித்திருக்கிறேன். எங்கோ உத்தியோகம்பார்க்கிருள் போல இருக்கிறது. நல்ல அமைதி

# ராமகிருஷ்ணஸ்

ஸ்தாபனத்தாரின்

**விசேஷ அறிவித்தல்**

**கார், லொறி, மீன்பிடி வள்ளம், தண்ணீர்ப்பம்,**
**டிராய்க்ரர் என்ஜின்களுக்கு**

சிலிண்டர் — றிபோறிங்; கிருங்சாவ்ற் — கிறைன்டிங்
காம்சாவ்ற் — கிறைன்டிங்; மேயின் லேயின் — போறிங்

மற்றும் வேலைகள் திறம்படச் செய்து கொடுக்கப்படும்.

**வட மாகாணத்தில் முதன்முதலாக இவ்வித சேவையை ஆரம்பித்து நடத்தும் ஸ்தாபனம்.**

## ராமகிருஷ்ணஸ்

**ஸ்ரான்லி வீதி,** **யாழ்ப்பாணம்.**

போன்: 7179 தந்தி: ''குருதேவ்''

---

சுடச் சுட

உங்கள் தேவைகள் பூர்த்தியாக்கப்படுகின்றன.

★ **பாண்**

★ **கேக்**

★ **பிஸ்கட்**

**இன்னும் உண்ணும் பண்டங்களுக்கு**

# "சந்திரன் பேக்கரி"

**(ஆடர்கள் கவனிக்கப்படும்.)**

**கோண்டாவில்.**

யான—அடக்கமான பெண் என்று அடிக்கடி நினைத்துக் கொள்வேன். அழகு? அதைக் கவனித்ததில்லை. அதைப்பற்றி அக்கறைப் படும் வயதா எனக்கு? என்றாலும் நடுத்தர வயதைக் கடந்துவிட்ட என்னையே கூர்ந்து பார்க்க வைத்துவிட்டதே அவளது அழகு.

அடடா! அந்த முகத்திலே என்ன ஒரு தெய்வீகக் களை. உடலிலே என்ன ஒரு மினுமினுப்பு. எலுமிச்சம்பழம்—மாம் பழம்—எந்தப் பழமுமே கிட்டநிற்க முடியாது அவள் மேனி நிறத்துக்கு. நல்ல உயரம். ஏற்ற பருமன். சுருக்கமாகச் சொன்னால், என்னுடைய பஸ் 'றாட்'டிலே இருக்கும். அத்தனை தியேட்டரிலும் உள்ள ''கட்டவுட்''களில் ''பானர்''களில் தேடிப் பார்த்தாலும் இவளைப்போல ஒருத்தியை அங்கே காணமுடியாது. அப்படி ஒரு அழகு!

ஜன்னலுக்கு வெளியே—எங்கோ ஆகா யத்தைப் பார்ப்பதும், அடிக்கடி ''ரிஸ்ட் வாச்சைப்'' பார்ப்பதுமாக இருந்தாள் அவள்.

''எக்ஸ்கியூஸ் மி மிஸ்'' ஒரு ரெக்னிகல் கொலிஜ் பையன் (பையனா!?) அவளருகில் வந்து அமர்ந்தான். அவனுடன் இன்னொரு வனுஞ் சேர்ந்துகொண்டான்.

ஏன் மிஸ், நீங்க ஒரு மதகுருவா? இதிலே இருக்கிறீங்களே! திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள் அவள். ஓ அவள் ''மதகுருமாருக்கு'' என்று ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்ததற்காக இந்தக் கிண்டலா?

''அப்ப நீங்ககூட மதகுருமார்தானா?'' வெறுப்புடன் கேட்டுவிட்டு வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள் அவள். அசடுவழிந்தது இருவருக்கும். எனக்குச் சிரிப்பாக இருந்தது—பின்னே தாங்களும் அதே சீட்டில் இருந்துகொண்டு அவளுக் கென்ன ''ஹின்ற்''?

மீண்டும் மீண்டும் அவர்கள் ஏதோ ''இடியட்ஸ், கீப் யுவர் மௌத்ஸ்'' என்று சினந்துகொண்டாள் அவள். அவ்வளவு போதாதா இந்தப் பையன்களுக்கு. இளம் பெண்ணென்றாலே சும்மா சும்மா சீண்டிப் பார்ப்பவர்கள் அவள் அழகான பெண்ணாக வும் இருந்து—அவர்களை அவமதித்தும் பேசிவிட்டாளென்றால் ஏதேதோ கேலி கள், கிண்டல்கள், 'ஹின்ற்'கள். அவளுக் குச் சகிக்கமுடியாது இருந்திருக்க வேண் டும். பின்புறந்திரும்பி ஒருத்தியிடம், ''பாரடி இதுகளை'' என்றாள் அழாக்குறை யாக. ''என்னவாம்?'' கேட்டாள் மற்ற வள்

''பேர் கேக்கினம் பேர்: இவையென்ன கொலிஜ் ஸ்டுடன்ஸ்ஸா, இல்லைப் பத்திரி கை நிருபர்மாரா? என்ரை ஹிஸ்ட்ரியை இவைக்குச்சொல்ல, நான் என்ன இவைக்கு அன்ரியா், கஸினா?'' கோபத்துடன் வெடித் தாள் அவள்.

அவ்வளவுதான். ''டேய் அன்ரியா மடா!'' ஹோ, என்ற சிரிப்பொலி. விஷ யம் கடைசி 'சீற்'வரை பரவிவிட்டது போலும். மூலைக்கு மூலை ''அன்ரி! அன்ரி!'' என்ற கூப்பாடு.

அவமானத்தால் உறைந்துபோய் அமர்ந்திருந்தாள் அவள். பாவம். அன் றைக்கு—ரெக்னிகல் கொலிஜ்ஜிற்குச் செல் லும் வழியிலுள்ள அந்த—அவளது—ஹோஸ்ற்றில் அவள் இறங்கும் வரைக்கும் இந்த 'அன்ரி'க்கு நிகழ்ந்த அர்ச்சனை ஆரா தனை கண்ணில் நீர் துளிர்க்க அவள் இறங்கிய காட்சி! இன்றுவரை அந்த 'அன்ரி' இவர்களின் நித்திய அர்ச்சனைக்குத் தப்பியதேயில்லை.

ஆனால் அவள் அதைப்பற்றி அக்கறைப் பட்டதாயுந் தெரியவில்லை. ஒரு வேளை 'கஸின்' என்று—மச்சாளென்று அழைக்கா மல் 'அன்ரி'யென்று 'மாமி'யென்று அழைப் பதுடன் நிறுத்திக் கொண்டதே போதும் என்ற திருப்தியோ! ஆனால் உள்ளூரத் துக்கம் இல்லாமல் போய்விடுமா? பாவம். அவளுக்காக அனுதாபப் பட்டுக்கொண்டே பஸ்ஸைக் கொண்டுபோய் டிப்போவில் நிறுத்தினேன்.

அடடா! 4-28 ஆகிவிட்டதே! ஓடி வந்து பஸ்ஸில் ஏறிக்கொண்டேன்.

''டேய் எங்கையடா அன்ரியைக் காணேல்லை?''

''அதுதானே, எங்கையடா அன்ரி?''

அந்த மாணவர்கள் பேசிக்கொள்வது என் காதிலும் விழுந்தது. ஆமாம். எங்கே அந்தப் பெண்? எனக்கும் ஆச்சரியந்தான். சில நாட்களாக இந்தப் பஸ்ஸில் அவள் வரவேயில்லை.

''ஒரு வேளை நாங்க போட்டுப் படுத் துற பாட்டிலை பயந்து வரேல்லையோ?''

''இருக்குமடா, பாவம். நாங்க ஆகத் தான் அதைப் போட்டுக் கழட்டுறது. இனிமேல் அன்ரி வந்தா ஒண்டும் சொல்லக் கூடாது. அன்ரி எண்டுகூடக் கூப்பிடக் கூடாது. ஆ? சரியோ?'' ஒருவன் கேட் டான்.

''ஓ. கே!'' அத்தனை குரல்களும் ஒத் துப் பாடின.

அப்பாடி! அந்தப் பெண்ணுக்குக்கூட விடிவுகாலம் வந்து விட்டது போல இருக்கிறதே! எனக்கு நிம்மதியாக இருந்தது. என்ன இருந்தாலும் படித்த பையன்கள் படித்த பையன்கள்தான். தவறு என்று உணர்ந்தும் உடனே திருத்திக்கொண்டு விடுகிருர்களே! மனதுள் அவர்களைப் பாராட்டிக்கொண்டேன்.

திடீரென்று,

''அடேய்—அங்கை பாரடா அன்ரியை'' பஸ்முழுதும் 'டக்'கென்று ஒரே நிசப்தம், அவர்கள் பார்த்த திசையில் நானும் வியப்புடன் பார்வையைச் செலுத்தினேன். என் கண்களை என்னுலேயே நம்ப முடியவில்லை. இவர்களது அந்த 'அன்ரி' யாரோ ஒரு வாலிபனுடன் உராயாத குறையாக நடந்து வந்து கொண்டிருந்தாள். நிச்சயமாக அவன் ரெக்னிகல் கொலிஜ் மாணவனில்லை. அதிர்ந்தே பேசியறியாதவள் என்று நான் நினைத்துக்கொண்ட அவள் உரத்த குரலில் அவனிடம் ஏதோ சொல்லிச் சிரிக்கிருள். தொட்டுத்தொட்டுப் பேசுகிருள். பகிரங்கமாக—அதுவும் பஸ்ஸிலே உள்ளவர்கள் பார்க்கவேண்டுமென்பதற்காகவே—டிக்கெட் வாங்கும் கூட்டத்திலிருந்து கொஞ்சந்தள்ளி—எல்லோர் கண்களிலும் படும்படியாக நின்றுகொண்டு அவனுடன் கொஞ்சிக் குலாவுகிருள். எனக்குத் ''துணுக்''கென்றது.

அடி, பாவிப்பெண்ணே! வெண்ணெய் திரண்டு வரும் வேளையில் இப்படித் தாழியைப் போட்டு உடைக்கிருயே! உன்னைக் கேலி செய்வதை விட்டுவிடவேண்டும் என்று இவர்கள் தீர்மானஞ் செய்திருக்கும் இந்த வேளையில் மேலும் மேலும் கேலிசெய்யும் விதத்தில் நடந்து கொண்டு விட்டாயே! இனிமேல் இவர்கள் உன்னையெப்படியெல்லாம் படுத்தப் போகிருர்களோ!

''டேய் அன்ரியோடை ஒரு அங்கிளடா!'' சற்றுமுன் தாங்கள் எடுத்திருந்த தீர்மானத்தைக் காற்றிலே பறக்கவிட்டுவிட்டு மாணவர் குழாம் தலைக்குத்தலை கூச்சலிடுகிறது,

இவளுக்கென்ன பைத்தியமா? என் மனம் அதிர்ந்தது. அவனது கையைப் பற்றிக்கொண்டு பஸ்ஸில் ஏறுகிருள். பஸ்ஸிலே மேலே—கம்பத்திலே பிடித்துக்கொள்வதற்குப் பதில் அவனது தோள்களைத் தழுவிக்கொள்கிருள். 'பிரேக்' பிடிக்கும் போதெல்லாம் அவன்மேல் சாய்ந்து தொலைக்கிருள். அவள் செய்கை எனக்கே அசம்பாவிதமாகப் பட்டுப், பல்லைக் கடித்துக்கொண்டேனென்றுல் மாணவர்கள்?...

''டேய்! ஃபெர்ஸ்ட் கிளாஸ் லவ்சீனடா!''

''சிவாஜி—ஜெயலலிதாவடா''

''இல்லை, எம். ஜி. ஆர்.—லதாவடா''

''ஊஹூம், அங்கமுத்துவும் சாயிராமுமடா'' குபீரென எழுந்த சிரிப்பொலி பஸ்ஸையே அதிரவைதததது.

சே... சே... என்ன இந்தப் பெண். இந்த மாணவர்களைச் சீண்டும் விதமாய் ஏதாவது செய்யவேண்டும்—அவர்களுக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியம் செய்து பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்ற நினைப்பில், ''இதோ எனக்கென்று ஒருவன் இருக்கிருன். நீங்கள் வாயை மூடிக்கொண்டு இருங்களடா மடையன்களா'' என்று வாயால் கூருமற் செய்கையால் காட்ட விரும்பி அதைச் செயற்படுத்துகிருள் என்று எனக்குப் புரிந்தது.

ஆனுல்... கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதுபோல் மாணவர்கள் கிண்டலிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள அவள் செய்த அந்த ஏற்பாடு அவளை மேலும் கேலிக்கு ஆளாக்குந் நிலைக்குக் கொண்டு வந்து விட்டதே! எனக்குத் துக்கமாக இருந்தது.

அவன்—அவளுடன் வந்த அந்த வாலிபன் அழகன்தான்—அவளுக்கு எல்லா விதத்திலும் ஏற்றவன்தான். ஆனுல் என்னதான் காதலர்களாக இருந்தாலும்—இந்தப் பட்டப்பகலில்—மட்டுமரியாதை கொஞ்சங்கூட இல்லாமல் என்ன சல்லாபம் வேண்டிக் கிடக்கிறது? பற்றிக்கொண்டு வந்தது இதை நினைக்க.

அன்று வழக்கமான அந்தப் பஸ் ஹோல்ற்றிலே, அவனுடன் அவள் இறங்கியபோது, மாணவர்களிடையே இருந்து எழுந்த ''ஊய்'' என்ற ஓசை வழக்கம் போல் எனக்கு ஆத்திரத்தை மூட்டவில்லை. இந்த நெஞ்சழுத்தக்காரப் பெண்ணை இப்படியும் மட்டந்தட்டத்தான் வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன்.

''ஏப்பிரல் ஹொலிடேய்ஸ்'' முடிந்து மீண்டும் தொழில்நுட்பக் கல்லூரி திறக்கப்படும் நாள்.

புதுப்புது ''ஸீசன் டிக்கெட்டு''களுடன் வந்து என் பஸ்ஸில் ஏறிக்கொண்டிருந்தனர் அந்த 'ஈவினிங் கோஸ்' மாணவர்கள். இன்றைக்கும் இவர்கள் ''அன்ரி''யைத் தேடுவார்களா? என் உதட்டில் புன்னகை ஒன்று பிறந்தது. விரக்திப் புன்னகை!

''டேய் என்னட இது—ஐயோ—என்னடா இது அன்ரியின்ரை கோலம்?''

''அதுக்குள்ளே கல்யாணம் முடிஞ்சு, அதுக்குள்ளே இப்பிடியும் ஆகிப் போச்சோடா?''

''சீச்சீ... போனகிழமை எக்ஸ்ட்ரா கிளாசுக்கு வரேக்கைகூடப் பாத்தனான். அந்தப் பெடியனோடை இறங்கிப் போனவ.''

அத்தனை ''மருமக்களையும்'' திக்பிரமை அடையச் செய்தபடி பஸ்ஸிலே ஏறிக் கொண்டிருந்தாள் அவர்களது அன்ரி.

வெள்ளை வெளேரென்ற சேலை. பாழ் நெற்றி. கையில் இருந்த ரிஸ்ட்வாட்ச் தவிர உடலில் மருந்துக்குக்கூட ஒரு நகை யில்லை. ஏற்கெனவே—4,5 நாட்களாகவே நான் கண்டு பழக்கப்பட்டுவிட்ட கோலம். இந்த மருமக்களுக்குத்தான் அந்தக்கோலம் புதிது. பெருமூச்சுடன் பஸ்ஸைக் கிளப்பி னேன்.

கொண்டக்டரை முந்திக் கொண்டு ''அண்ணை ரைட்'' என்று கோரஸ் பாடும் அந்த மாணவப் பட்டாளம், இன்று அந்தக் கோஷ்டிகானத்தை மறந்து அன்ரியையே விழித்தெறிக்கப் பார்த்துக்கொண்டிருந் தது. அவளது இடத்தில் அவள் இறங்கும் போது மூச்சுவிடும் ஒலிகூட பஸ்ஸிலிருந்து கிளம்பவில்லை. அவள் இறங்கிப் போய் விட்டாள்.

''அண்ணை, எஞ்சினைக் கொஞ்சம் ஓவ் பண்ணுங்கோ'' கொண்டக்ரர் சொன்னார். ஏற்கனவே நாங்கள் தீர்மானித்துவைத் திருந்ததுதான்.

பேசாமல் எஞ்சினை 'ஓவ்' பண்ணிவிட்டு 'ஸ்ரேறிங்'கின்மேல் குப்புறப்படுத்துக் கொண்டுவிட்டேன். ஏற்கெனவே—அந்தப் பெண்ணின் உறவினனான இந்தக் கொண் டக்டரிடமிருந்து தெரிந்துகொண்ட அந்த அவலக்கதையை மீண்டுங்கேட்டு மனதைப் புண்படுத்திக்கொள்ள விரும்பாமல் காது களைப் பொத்த முயற்சிசெய்தேன். என்ன பிரயோசனம். கொண்டக்டர் சொல்வது காதில் அப்படியே விழுகிறதே!

''கேளுங்கோ தம்பியவை. இந்தப் பிள்ளை பஸ்ஸிலை ஏறின்ன நாளெல்லாம் நீங்கள் அன்ரி அன்ரி எண்டு ஆராத்தி எடுக்கிறது பொறுக்காமல்—உங்கடை வா யை அடைக்க வேணுமெண்டு தன்ரை புருஷனைக் கூட்டிக்கொண்டு பஸ்ஸிலே வரத் தொடங்கிச்சுது...''

''ஆ... புருஷனோ?'' யாரோ ஒரு மாணவன் அலறினாற்போல் கேட்டான்;

''புருஷன்தான்...''

''எப்ப கல்யாணம் நடந்தது—நாங் கள்.''

''அது எப்பவோ இரண்டு மூண்டு வருஷத்துக்கு முன்னம் முடிஞ்சுது. பெடியன் கொழும்பிலை வேலை செய்தது. உங்கடை ஆக்கினை தாங்காமல் அந்தப் பிள்ளைதான் அவனைக் கொஞ்ச நாளைக்கு இங்கை வரச் சொல்லி எழுதியிருந்திச்சுதாம்.''

''அதெப்பிடி, அவவைப் பாத்துக் கல்யாணம் முடிச்ச ஆள் மாதிரியே இல் லையே—தாலிகூட இல்லை...'' யாரோ ஒரு வன் முணுமுணுத்தான்.

''ஓ.. அதுதானே சொல்ல வாறன். இந்தப் பிள்ளைக்குச் செவ்வாய்தோஷம். தாலி கட்டினாக் கழுத்திலே தங்காதெண்டு— தாலி கட்டாமலே கல்யாணம் முடிச்சு வைச்சவை. அது சங்கிலியோடை திரிய... நீங்கள் அதைக் கல்யாணம் முடிக்காத பிள்ளையெண்டு நினைச்சு நீங்க கண்டபடி கதைக்க—அவள் பெடியனை இங்கை கூப் பிட—வந்த பெடியன் பாவம் ஒரு கார் அக்ஸிடென்டிலை செத்துப்போக.''

''ஆ!'' ஏக காலத்தில் அலறினர் எல்லோரும். ''என்ன, ஆ?'' அவளின்ரை செவ்வாய் தோஷந்தான் அவளின்ரை புருஷனைக் கொண்டு போட்டுதெண்டு ஊர் சொல்லுது. ஆனால், உண்மையாய் உங் கடை செவ்வாயின்ரை—வாயளின்ரை தோஷந்தான் அவளை விதவையாக்கிப் போட்டுது. தெரியுதே இனிமேல் எண் டாலும் பள்ளிக்கூடம் போற பிள்ளையள் மாதிரி, வாயை மூடிக்கொண்டு ஒழுங்கா, நல்ல பிள்ளையளா நடந்து கொள்ளப் பாருங்கோ, நீங்க எல்லாம் வளர்ந்த ஆட்க ளெல்லா'' கொண்டக்டர் நிறுத்தினார்.

சிலையைப் போல அமர்ந்திருந்தனர் அனைவரும். சில நிமிடங்களுக்குப் பிறகு அந்த மஞ்சள் நிறக் கட்டிடத்துக்கு எதிரே பஸ்ஸை நிறுத்தியபோது, ஏதோ மௌன ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள்போல அமைதியாக இறங்கி நடந்தனர் அத்தனை மாணவர்களும். கொண்டக்டரது ''லெக் சர்'' அவர்களிடம் அந்த மாற்றத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இந்த மாற் றம் நிலைக்க வேண்டுமே! நிலைக்குமா?

என்னுடன் சேர்ந்து பெருமூச்சுவிட்டுக் கொண்டு அந்தப் பல்தொழில் நுட்ப நிறுவனத்திலிருந்து புறப்பட்டது பஸ்.

## JAFFNA LAW SENTRE

பதி. இல: *9667*

சட்டமுன் தேர்வு *G. A. Q, L. L. B G. C. E. (O/L A/L)* வர்த்தக, விஞ்ஞான பாடங்கள் யாவும்

பயிற்றப்பட்ட ஆசிரியர்களாலும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களாலும் நடாத்தப்படுகின்றது.

**யாழ் சட்டக் கலவி நிலையம்**
81, பிரதான வீதி,
**யாழ்ப்பாணம்.**

---

அன்பளிப்பு

**கேம்பிறிச் கல்வி நிலையம்**
திருநெல்வேலிச் சந்தி,
பலாலி றோட்
யாழ்ப்பாணம்.

---

**அசல் தங்க, வைர, நகைகளுக்கு**
ஒரே ஒரு ஸ்தாபனம்



**ஸ்ரீ முருகன் நகைமாளிகை**
*137 – A*
பிரதான வீதி,
இரத்தினபுரி.

---

அண்ணா! அண்ணா!! அண்ணா!!!

அண்ணா கோப்பி

அண்ணா பத்தி

அண்ணா தேயிலை

திறமானவை தரமானவை

குறிப்பு:
மேலுறைகளை அனுப்பி சிறந்த பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**அண்ணா கோப்பி**
இணுவில் தெற்கு,
இணுவில்.

# இலங்கையின் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் ஒரு கண்ணோட்டம்

தி: கணேசராஜா
தொ. க. தே. த. ப. (கணக்கியல்) பகல் இறுதி வருடம்

ஒரு நாடு இன்னோர் நாட்டுடன் செய்து கொள்ளும் பொருட்கள் சேவைகளின் கொடுக்கல் வாங்கல்களை நாம் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் எனக் கருதுகின்றோம். இதனை நாட்டிடை வர்த்தகம் என்றும், சர்வதேச வர்த்தகம் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் என்றும் அழைக்கின்றனர். உலக நாடுகளில் எந்த ஒரு நாடாயினும் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபடாமல் சுயதேவைப் பூர்த்தி அடிப்படையில் செயல்பட முடியாது. ஏனெனில் உலக நாடுகள் யாவற்றுக்கும் பௌதீக பண்பாட்டுக் காரணிகளைத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இயற்கை அன்னை கொடையாக வழங்கியுள்ளாள் எனக் கூறுவதற்கில்லை. எனவே எந்த ஒரு நாடும் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாகவும் நாட்டிடை வர்த்தகத்தினால் ஏற்படும நன்மைகளை அனுபவிக்கும் பொருட்டும் எல்லா நாடுகளும் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபடுகின்றன: இவ்வகையில் இலங்கையும் உலக நாடுகளுடன் பொருட்கள் சேவைகளை ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபடுத்தி வருகின்றது.

இலங்கை பெருமளவில் விவசாயப் பொருட்களின் ஏற்றுமதியையே மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. குறிப்பாக தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள் என்பன முன்னணி வகிக்கின்றன. இவற்றைவிட தற்காலத்தில் நாட்டின் சென்மதிப் பிரச்சனையைக் கட்டுப்படுத்தவும், உலக சந்தையில் உள்ள கிராக்கி காரணமாகவும் பாரம்பரியமற்ற ஏற்றுமதிப் பொருட்களும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவற்றுடன் சேவைகளும் ஓர் அளவு இடம் பெறுகின்றது. பாரம்பரியமற்ற ஏற்றுமதிப் பொருட்கள் என்று குறிப்பிடும் போது கைத்தொழிற் பொருட்கள், கைத்திறன் பொருட்கள, கறுவா, ஏலம், கராம்பு, மிளகு, சாதிக்காய், கறுவா இலை, கறுவாப் பட்டை, புல் நெய், இஞ்சித் தைலம் போன்ற வாசனைத் திரவியங்கள், கனிப்பொருட்கள், இரசாயனப் பொருட்கள், இரத்தினக் கற்கள் போன்ற பொருட்களைக் குறிப்பிடுகின்றன.

மேற்குறிப்பிடப்பட்ட பாரம்பரியமற்ற பொருட்களின் ஏற்றுமதி 1960ம் ஆண்டின் பின்னரே கணிசமான அளவு அதிகரிக்கத் தொடங்கிற்று. ஆயினும் பாரம்பரிய பொருட்களே மொத்த ஏற்றுமதி வருமானத்தில் கணிசமான பங்கினைத் திரட்டிக் கொடுக்கின்றது. 1972ம் ஆண்டில் 20090 இலட்சம் ரூபாக்கள் மொத்த ஏற்றுமதியாய்ப் பெறப்பட்டது. இதில் 88 வீதமானவை தேயிலை, தென்னை, இறப்பர் போன்றவற்றினால் பெறப்பட்டது. பின்னர் 1973ம் ஆண்டு மொத்த ஏற்றுமதி வருமானம் 26170 இலட்சம் ரூபாவாக அதிகரித்தது. இதில் 77 வீதம் மட்டுமே பாரம்பரிய ஏற்றுமதி மூலம் பெறப்பட்டது. இது 1972ம் ஆண்டு பெறப்பட்ட ஏற்றுமதி வருமானத்தை விடக் குறைவுடையதாகவே அமைந்துள்ளது. இவ்வாறாக பாரம்பரிய ஏற்றுமதி வருமானம் தற்காலத்தில் பெரிதும் மோசமான நிலையை அடைந்ததாக உள்ளது. இவ்வாறு வருமானம் வீழ்ச்சி அடைய ஏற்றுமதிப் பொருளின் விலை வீழ்ச்சியே காரணம் எனலாம். கடந்த காலப் புள்ளி விபரங்களை எடுத்து நோக்குமிடத்து ஏற்றுமதித் தொகையானது வருடா வருடம் அதிகரித்துச் செல்வதையும் (தேயிலையைத் தவிர) அவற்றின் விலைகள் வீழ்ச்சி அடைந்து செல்வதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. முதலில் இலங்கையின் தேயிலை ஏற்றுமதியை நோக்குமிடத்து 1964ல் தேயிலையின் மொத்த ஏற்றுமதி 455.7 மில்லியன் இருத்தலாகும்;

இன்நிலையில் றுத்தல் ஒன்று 2.50 சத வீதம் வெளிநாட்டு வருமானமாக 1142 மில்லியன் ரூபா பெறப்பட்டது. இதே போன்று 1974ம் ஆண்டில் தேயிலையின் மொத்த ஏற்றுமதி 453.6 மில்லியன் இறுத்தலாக குறைவடைந்தது. இன்நிலையில் றுத்தல் ஒன்று 2.88 சதவீதம் வெளிநாட்டு வருமானமாக 1260 மில்லியன் ரூபா பெறப்பட்டது. இங்கு தேயிலையின் விலை 10 ஆண்டுகளில் 33சதம் அதிகரித்திருக்கின்றது. ஆனல் மற்றைய பொருட்களின் விலை 30 வீதம் வரை அதிகரித்த போது தேயிலையின் விலை 15% மட்டுமே அதிகரித்தமையை இங்கு கவனத்திற் கொள்ளல் வேண்டியது அவசியமாகின்றது, மேலும் தேயிலையின் ஏற்றுமதி வருமான வீழ்ச்சிக்கு வேறு பல ஆதாரங்களையும் காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக 1947ம் ஆண்டில் தேயிலையின் ஏற்றுமதி 2870 இலட்சம் றுத்தலாகக் காணப்பட்டது. இதன் மூலம் 1700 இலட்சம் டொலர் வருமானமாகப் பெறப்பட்டது. ஆனல் 1970ல் 4590 இலட்சம் றுத்தல் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டு 1880 இலட்சம் டொலர் வருமானமாகப் பெறப்பட்டது. எனவே 1947ம் ஆண்டுக்கும் 1970ம் ஆண்டுக்கும் இடையிலான 23 வருட காலத்தில் தேயிலையின் ஏற்றுமதியானது 60 சத வீதம் அதிகரித்த போதிலும் வருமானம் 10 வீதம் மட்டுமே அதிகரித்தது. இவ்வாறுக இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகம் மிகப் பின்தங்கிய தளம்பும் வருமானத்தைக் கொடுக்கும் ஓர் வர்த்தகத் துறையாக அமைந்துள்ளது.

அடுத்து இறப்பரின் புள்ளி விபரத்தினை நோக்குமிடத்து இங்கும் ஏற்றுமதித் தொகை அதிகரித்துச் செல்ல அதற்கான விலை குறைவடைந்து செல்வதை நாம் கவனிக்கக் கூடியதாக உள்ளது.

| வருடம் | ஏற்றுமதி (இலட்சம் இறுத்தல்) | விலை (றுத்தல்) |
|---|---|---|
| 1969 | 314.8 | 1.37 |
| 1970 | 354.2 | 1.24 |
| 1971 | 285.2 | 1.08 |
| 1972 | 285.7 | .93 |
| 1973 | 354.4 | 1.98 |

இங்கு 1969ம் ஆண்டு முதல் 1972ம் ஆண்டு வரை விலை ரூ. 1.37 சதத்தில் இருந்து .93 சதமாக குறைவடைந்துள்ளமையையும் 1973ல் 1.98 சதமாக அதிகரித்துள்ளமையையும் காணக்கூடியதாக உள்ளது. இதற்குக் காரணம் பெட்ரோலிய விலை அதிகரிப்பு செயற்கை இறப்பரின் உற்பத்தியைப் பாதிக்க அதனல் இயற்கை இறப்பரின் கேள்வி அதிகரித்தது. இன்நிலையில் இறப்பரின் நிரம்பல் மாற்றம் அடையாமையால் விலை பெருமளவு அதிகரிக்கக் கூடியதாக இருந்தது. இவ்வாறுக இறப்பரின் ஏற்றுமதி வர்த்தகம் குறைந்து செல் விலைப் போக்கினைக் கொண்டதாக அமைகின்றது. இவ்வாறே தெங்குப் பொருட்களின் ஏற்றுமதி வர்த்தகமும் அமைந்துள்ளது. 1947ல் 5720 இலட்சம் தேங்காய்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு 390 இலட்சம் டொலர் மட்டும் வருவாயாகப் பெறப்பட்டது. ஆயினும் தெங்குப் பொருளின் ஏற்றுமதி வர்த்தகத்தினை ஓர் அளவுக்குச் சாதகமாக அமைந்துள்ளதாகக் கூறலாம்.

இவ்வாறுக இலங்கையின் பாரம்பரிய ஏற்றுமதிப் பொருட்களின் வருமான வீழ்ச்சி அன்னியச் செலாவணிப் பற்றுக்குறைப் பிரச்சினையை ஏற்படுத்தக் காரணமாக இருந்தது. அது மட்டுமன்றி இறக்குமதித் தொகை அதிகரிப்பும், இறக்குமதி விலை அதிகரிப்பும், இலங்கையின் சென்மதி நிலுவைப் பிரச்சனையைப் பெரும் அளவு ஏற்படுத்தியது. ஏற்றுமதியால் ஏற்பட்ட பாதகமான வருமான நிலைமையும் இறக்குமதியால் ஏற்பட்ட பாதகமான சென்மதி நிலைமையும் எதிர்க் கணியமான போக்கைக் கொண்டு அமைந்துள்ளமையும் அன்னியச் செலாவணிப் பிரச்சினை ஏற்படக் காரணமாக அமைகின்றது.

அடுத்து இலங்கையின் இறக்குமதி வர்த்தகத்தை நோக்கும் இடத்து அத்தியாவசியத் தேவைகளை இறக்குமதி மூலமே பூர்த்தி செய்யப் படுகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே இறக்குமதியின் தடை இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பெரிதும் பாதிக்கக்கூடியதாக அமையும். இதனல் இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பெரிதும் பாதிக்கக்கூடியதாக அமையும். இதனல் இலங்கை மக்களின் உயிர்நாடி இறக்குமதியாகவே அமைந்துள்ளது. அதாவது வெளிநாடுகளில் இருந்து வருகின்ற கப்பல்களைக் கொண்டே வாழ்க்கை நிர்ணயிக்கப் படுகின்றது என

லாம். இவ்விறக்குமதி ஏற்றுமதியின் தன்மையிலேயே அமைந்துள்ளது எனவே ஏற்றுமதி வருமானம் பாதிக்கப்பட்டமை இறக்குமதியின் கட்டுப்பாட்டிற்குக் காரணமாக அமைகின்றது. அத்துடன் இறக்குமதிப் பொருட்களின் விலை உயர்வு இறக்குமதித் தொகையைக் கட்டுப்படுத்தவும் சில பண்டங்களின் இறக்குமதியை முற்றாகத் தடை செய்யும் காரணமாக அமைகின்றது. 1971ம் ஆண்டுமொத்த வருமானத்தில் 46 சதவீதம் அதாவது 9160 இலட்சம் ரூபா மொத்த உணவு இறக்குமதிக்குப் பயன் படுத்தப்பட்டது. அதே போன்றே 1972ல் ஏற்றுமதி வருமானத்தில் 46.5 சதவீதம் அதாவது 9600 இலட்சம் ரூபா செலவு செய்யப்பட்டது. 1973ல் 48.2 சதவீதம் செலவு செய்யப்பட்டது. இது 13080 இலட்சம் ரூபாவாகும். இது 1974ல் 45.7 சதவீதம் அதாவது 21053 இலட்சம் ரூபா செலவு செய்யப்பட்டது. இவ்வாறு ஆண்டு தோறும் அதிகரித்துச் செல்லும் இறக்குமதிச் செலவு இறக்குமதியைப் பாதிப்பதாக உள்ளது. அத்துடன் சுயஸ் கால்வாய் மூடப்பட்டமையும், பெற்றோலிய விலை அதிகரிப்பும் இறக்குமதிச் செலவை பெருமளவு அதிகரித்துச் செல்லக் காரணமாக இருந்தது. இதனாலும் இறக்குமதி பெருமளவு குறைவடையக் காரணமாக இருந்தது. எனவே இறக்குமதித் தொகை குறைவடைய ஏற்றுமதி விலை குறைவு மட்டும் அன்றி இறக்குமதிப் பொருளின் விலை அதிகரிப்பும் காரணம் எனலாம். குறிப்பாக பண்டங்களின் விலை மாற்றங்களை நோக்குமிடத்து 1970ல் 1 தொன் அரிசியின் விலை 47 பவுணாகவும், 1973ல் 1 தொன்னின் விலை 56 பவுணாகவும் அதிகரித்தது. இதே போன்று 1970ல் 1 தொன் சீனி விலை 40 பவுணாகவும் 1973ல் 100 பவுணாகவும் அதிகரித்தது. இதே போன்றே 1 தொன் கோதுமைமா 43 பவுணாகக் காணப்பட்டது. ஆனால் 1973ல் 66 பவுணாக அதிகரித்தது. இவ்வாறு 10 ஆண்டுகளில் இறக்குமதிப் பொருட்களின் விலை 75% வரை உயர்ச்சி அடைந்துள்ளமையை இங்கு கவனிக்கக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறாக ஏற்றுமதியின் விலை வீழ்ச்சியும், விலைத் தளம்பலும், ஏற்றுமதித் தொகை வீழ்ச்சியும், இறக்குமதி அதிகரிப்பும், இறக்குமதிப் பொருட்களின் விலை அதிகரிப்பும் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக நிலைமையைப் பெருமளவு பாதிக்கக் காரணமாக அமைந்தன. எனவே இவற்றைப் புனரமைப்பதன் மூலம் ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரத்தை மாற்றியமைக்கப்பட வேண்டியதாகவுள்ளது. கீழ் வரும் அட்டவணை 1968ம் ஆண்டு முதல் ஏற்றுமதி இறக்குமதியால் ஏற்பட்ட பாதகமான வர்த்தக நிலையைக் காட்டுகின்றது.

| வருடம் | ஏற்றுமதி வருமானம் (கோடி ரூபாயில்) | இறக்குமதி வருமானம் (கோடி ரூபாயில்) | வர்த்தக மிகை |
|---|---|---|---|
| 1968 | 204 | 218 | — 14 |
| 1969 | 192 | 255 | — 63 |
| 1970 | 203 | 231 | — 28 |
| 1971 | 195 | 191 | — 04 |
| 1972 | 194 | 204 | — 10 |

இவ்வாறான வர்த்தக மிகை காரணமாக இலங்கை பெரும் தொகையான கடனில் மூழ்கி இருக்கின்றமையைக் காணலாம். மேற்குறிப்பிட்ட தாக்கங்கள் உள்நாட்டின் நடவடிக்கைகளைப் பெரும் அளவுக்குப் பாதிப்பதாக அமைகின்றது.

ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரம் பாதிக்கப்பட்டமையால் கைத்தொழில் வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது. கைத்தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்களில் ஏறத்தாழ 77 வீதமானவை இறக்குமதி செய்வதன் மூலமாகவே பூர்த்தி செய்யப் படுகின்றது. எனவே இறக்குமதிப் பாதிப்பு கைத்தொழில் வளர்ச்சியைப் பாதிப்பதாக உள்ளது. மேலும் கைத்தொழிற் பாதிப்பின் தாக்கம் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஏற்படுத்துகின்றது, இன்று இலங்கையில் 10 இலட்சம் பேர் வரை வேலையற்றோர் படையில் காணப்படுகின்றமை இங்கு கவனிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதனால் தலா வருமானக் குறைவும், அதன் மூலம் வாழ்க்கைத்தர வீழ்ச்சியும் ஏற்படக் காரணமாக அமைகின்றது. மேலும் ஏற்றுமதியின் பாதிப்பால் சென்மதி நிலுவைப் பிரச்சனை ஏற்படுவதோடு வர்த்தக மாற்றுவீதம் பாதகமான போக்கினைக் கொண்டதாக அமைகின்றது. குறிப்பாக 1960ல் 148 வீதமாகவும்; 1967ல் 100

வீதமாகவும், 1972ல் 75 வீதமாகவும், 1973ல் 65 வீதமாகவிம், 1974ல் 58 வீதமாகவும் வீழ்ச்சி அடைந்துள்ளது. இது ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தின் பின் தங்கிய நிலையை எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வகையில் இலங்கை எதிர்நோக்கும் பல்வேறு வகையான பிரச்சனைகளுக்கு ஏற்றுமதித் துறையே மூலகாரணி எனலாம். இலங்கையின் பொருளாதாரப் பிரச்சனை தீர்க்கப்படல் வேண்டுமாயின் ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் உறுதிப்படுத்தப்படுவதுடன் அதிக வருமானம் தரும் பண்டங்களும் சேவைகளும் ஏற்றுமதி செய்யப்படல் வேண்டும். அத்துடன் கொள்வோர் ஏகபோக உரிமையில் இருந்து விடுபட்டு ஒப்பந்த ரீதியில் அல்லது பிரதேச ரீதியில் தனிப்பட்ட முறையில் ஈடுபடவேண்டியது அவசியமாகின்றது. இவ்வாறு ஏற்படுத்திக் கொள்வதன் மூலமே இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தை சமமான, உறுதியான முறையில் வைத்திருக்க முடியும். இவ்வாறான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக தற்கால அரசாங்கங்கள் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு பிரச்சனைகளுக்கு தீர்வு காண முற்படுகின்றன.

இதன் பிரகாரம் அரசாங்கம் 1960ம் ஆண்டு தொடக்கமே தனது நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இதனால் 1961ம் ஆண்டு அனுமதிப்பத்திர முறையும் (லைசன்ஸ்) அனுமதிப் பங்கு முறையும் (கோட்டா) நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர் 1963ல் அன்னியச் செலாவணி வரவு செலவுத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் இறக்குமதியைப் பெருமளவில் கட்டுப்படுத்தக் கூடியதாக அமைகின்றது மேலும் ஆடம்பரப் பொருட்களின் இறக்குமதிக்கு முற்றாக தடை விதிக்கப்பட்டது. இதன் பின்னர் 1967ல் ஸ்ரேலிங் பவுணின் பெறுமதி குறைக்கப்பட்டமையால் நாட்டின் நாணயத்தின் 20 வீதம் நாணய மதிப்பிறக்கம் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் 1968ம் ஆண்டில் அன்னியச் செலாவணி சான்றிதழ்த் திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இது ஆரம்பத்தில் 44%மாகவும் அதன் பின் 55%மாாகவும் 65%மாகவும் உயர்த்தபபட்டமை குறிப்பிடத்தக்கது. இத் திட்டம் மரபு ரீதியற்ற ஏற்றுமதியைத் தூண்டவும் ஆடம்பரப் பண்டத்தின் இறக்குமதிறைக் கட்டுப்படுத்தவும் உதவியது. இதன் பின்னர் 1970ல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய முன்னணி அரசாங்கம் நாட்டிடை வர்த்தகத்தின் நிலைமை கண்டு அதன் மீது கூடிய கவனம் செலுத்தியது. இதனால் 1971ம் ஆண்டு மிளகாய், வெங்காயம் போன்ற உப உணவுப் பொருட்களின் இறக்குமதி முற்றாகக் கட்டுப்படுத்தப் பட்டது. பினனர் 1972ம் ஆண்டில் ஏற்றுமதியைத் தூண்டவும் இறக்குமதியைக் குறைக்கவும் இலங்கை ரூபாவுக்கும் ஸ்ரேலிங், பவுண், அமெரிக்க டொலர் ஆகியவற்றுக்கிடையில் நிரந்தரமான விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டன. அத்துடன் 1971ல் இரத்தினக்கற் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது மேலும் மரபுரீதியற்ற ஏற்றுமதியைத் தூண்டுவதற்காக 1973ல் ரூபா மாற்றுக் கணக்குத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இத்திட்டம் ஏற்றுமதியாளர் வெளிநாட்டு நாணய வடிவில் பெறக்கூடிய வசதியை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. இது பொருட்களின் தன்மையைக் கொண்டு 3% தொடக்கம் 25% வரையிலான சலுகையைச் செய்கின்றது. மேலும் அரசாங்கம் 1975ஆம் ஆண்டில் பெரும் தோட்டத் துறையில் ஆதிக்கம் பெற்ற ஸ்ரேலிங் கம்பெனிகளைத் தேசிய மயமாக்கி வெளிநாட்டுக்கு நாணய வெளிப்பாச்சலைத் கட்டுப்படுத்தியது. அத்துடன் இதன் பெறுமதியை ரூபா வடிவிலேயே வெளிநாட்டுக்குக் கொடுத்துத் தீர்த்தது. இதன் காரணத்தினால் பெருமளவு அன்னியச் செலாவணி மட்டத்தை அதிகரித்துச் செல்லக் கூடியதாக அமைந்தது.

அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்வது மட்டுமன்றி மத்திய வங்கி மூலமும், வணிக வங்கிகள் மூலமும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. இறக்குமதிக் கேள்வியை குறைப்பதற்கும் மக்களின் செலவு நாட்டத்தினைக் கட்டுப்படுத்தவும், மக்களிடையே சேமிப்பு மட்டத்தை உயர்த்தவும், வங்கிகள் பரவலாக்கப் பட்டதுடன் பல கட்டுப்பாடுகள் வங்கிகளால் மேற்கொள்ளப்பட்டன. இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்காக மத்திய வங்கி இறக்குமதித் தீர்வையை அதிகரித்தது. மேலும் வணிக வங்கியின் கடன் தொழிற்பாடு குறைக்கப்பட்டது. இதற்காக வங்கி வீதத்தினை $2\frac{1}{2}$%தில் இருந்து 4%மாகவும், பின் $6\frac{1}{2}$% வீதமாகவும் உயர்த்தியது. மேலும் வணிக வங்கியின் ஒதுக்கம் 10%திலிருந்து $12\frac{1}{2}$%மாக உயர்த்தப்பட்டது. இதன்

மூலம் கடனுக்கக் குறைவு ஏற்பட தனியாரின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தக்கூடிய தாகவும் அமைகின்றது. இவற்றுடன் அரசாங்கம் பல்வேறுபட்ட அமைப்புக்களை ஆரம்பித்து செயற்படுத்துவதன் மூலமும் செலாவணியை அதிகரிக்க முயற்சி செய்கின்றது. இவை மறைமுகமாகவும் நேரடியாகவும் செயல்படுகின்றன. ஸ்ரீ லங்கா வர்த்தகக் கூட்டுத்தாபனம், பெற்றோலியக் கூட்டுத்தாபனம், காப்புறுதிக் கூட்டுத்தாபனம், உல்லாசப் பிரயாணக் கூட்டுத்தாபனம், கப்பற் கூட்டுத்தாபனம், திரைப்படக் கூட்டுத்தாபனம் போன்ற அமைப்புக்களை இவற்றுக்குச் சான்றாகக் கூறலாம்.

மேற்கூறப்பட்ட பல்வேறுபட்ட துரித வளர்ச்சி நடவடிக்கைகள் மூலம் வெளிநாட்டுச் செலாவணி மட்டம் படிப்படியாக அதிகரித்து வந்துள்ளதைப் புள்ளிவிபர ரீதியில் அவதானிக்கக் கூடியதாக அமைகின்றது. கீழ்வரும் புள்ளி விபரம் வெளிநாட்டு இருப்புச் சொத்தைக் காட்டுகின்றது.

| ஆண்டு | இருப்பு (மில்லியன் ரூபா) |
|---|---|
| 1970 | 366.6 |
| 1971 | 456.0 |
| 1972 | 680.1 |
| 1973 | 801.2 |
| 1974 | 835:3 |

மேற்கூறப்பட்டது போன்ற பல்வேறு நடவடிக்கைகள் எடுத்ததனுல் வெளிநாட்டு இருப்புச் சொத்து பெருமளவு அதிகரித்துவந்த போதிலும் திருப்திகரமான வளர்ச்சியை நாம் அடைந்து விட்டோம் எனக் கொள்வதற்கில்லை. இன்னும் எவ்வளவோ வளர்ச்சியை அடைய வேண்டிய நிலைமை அபிவிருத்தி அடைந்துவரும் இலங்கைக்கு உண்டு. அதற்கு இங்கு வாழும் மக்களின் அபிலாஷைகளையும், சுதந்திரத்தினையும் குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. இவ் ஒத்திவைக்கப்பட்ட காலம் நாட்டு மக்களினுலேயே தீர்மானிக்கப்படும் என்பதும் இங்கு குறிப்பிடக் கூடியதாக இருக்கின்றது. வல்லமையும், துணிவுமுள்ள நாம் இயற்கை அன்னையால் வழங்கப்பட்ட வளங்களை முற்ருகப் பயன்படுத்துவதுடன் எப்பொழுது கடமை, உணர்ச்சி, நேர்மையுடன், எமது சூழலை உணர்ந்து செயல்படுகின்ருேமோ அதன் மூலமே எமது விடிவுக்காலமும் நிர்ணயிக்கப்படும் எனக் கூறிக் கொள்ளலாம்.

---

''தாங்கள் எண்ணுகின்ற எண்ணங்கள் போலவே, தம்முடைய நினைவுகளுக்கு ஒப்பவே, தங்களுடன் பழகுபவர்களின் கருத்து இருககலாம் — என்றும் எண்ணங்கள் அமையும் என்றும் சிலர் தப்பாகப் புரிந்து கொள்கிருர்கள். இதனுற்தான் கருத்து வேற்றுமைகள் ஏற்படுகின்றது. இப்படி நினைப்பவர்களுக்கு உண்மைக் கருத்தை விளங்க வைப்பது கடினம். காரணம் அவர்களுடைய அறிவாற்றல் குறைந்த பரப்பெல்லைக்குள் உள்ளது''

# இந்து சமுத்திரம் சமாதானப் பிரதேசமாகப் பிரகடனப் படுத்தப்படல் வேண்டும்.

வே. சதாசிவம்
(N. C. B. S. Accounts Evening.)

இற்றைக்கு கால்நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்து சமுத்திரம் பிரிட்டிஷ் வாவியென்றே அழைக்கப்பட்டு வந்தது. ஏனெனில் இந்துசமுத்திரத்திலும் அதனைச் சூழவுள்ள நாடுகளிலும் பிரிட்டிஷாரின் ஆதிக்கம் மேலோங்கி நின்றதேயாகும். ஆனால் 1947-ம் ஆண்டில் இந்தியா சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து, இலங்கையும் 1948ம் ஆண்டில் சுதந்திரம் அடைந்தது. இதன் பின்னர் இந்து சமுத்திரப் பிரதேசத்தில் பிரித்தானியாவின் செல்வாக்கும் மங்கிவிட்டது. இந்து சமுத்திரம் வடக்கிலிருந்து தெற்காக சுமார் 6500 மைல்களையும், கிழக்கிலிருந்து மேற்காக சுமார் 6000 மைல்களையும் கொண்டது. ஏறக்குறைய இரண்டு கோடியே எண்பது இலட்சம் சதுரமைல் விஷ்தீரணமான இது உலகில் உள்ள நான்கு சமுத்திரங்களில் மூன்றாவது பெரியபரப்பைக் கொண்டுள்ளது. இது பல கோடி மக்கள் வாழ்கின்ற நாற்பது நாடுகளின் கரைகளைத் தொட்டுக் கொண்டிருக்கின்றது. இது தெற்கு ஆபிரிக்காவிலிருந்து தென்ஆசியாவரையும், தென் கிழக்கு ஆசியாவிலிருந்து, அவுஸ்திரேலியாவுக்கு அப்பாலும் பரந்து கிடக்கின்றது. எனவே இந்துசமுத்திரம் சர்வதேச நாடுகள் அனைத்திற்கும் சொந்தமானதும் முக்கியமானதும் ஆகும். மேலும் கடல் போக்குவரத்தைப் பொறுத்தமட்டில் இது முக்கியத்துவம் வகிக்கின்றது. மேற்கு நாடுகளில் இருந்து ஆசியாவின் கிழக்கு நாடுகள் வரை இக்கடற்போக்குவரத்து மிகவும் சிறப்புப் பெற்றுள்ளது. இப்போக்குவரத்தே இச்சமுத்திரத்தைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியத்துவம் வகிக்கின்றதெனலாம்.

இம்முக்கியத்துவம் காரணமாக வல்லரசு நாடுகளாகிய ரூசியாவும் அமெரிக்காவும் இந்து சமுத்திரப் பிரதேசத்தில் தமது ஆதிக்கத்தைச் செலுத்த முயற்சிக்கின்றன. இதன் காரணமாக இருநாடுகளின் எதிரெதிர் நடவடிக்கைகள் இப்பிரந்தியத்தை அரசியல் இராணுவப் பிராந்தியமாக மாற்றிவிட்டன. இநது சமுத்திரப் பிரதேசத்தில் ரூசியாவுக்கு கடற்படைத்தளமோ அன்றி தகவல் தொடர்பு நிலையமோ இல்லையென்பது உண்மையெனினும், 1967-ம் ஆண்டில் நடந்த இஸ்ரேல்-ஏகிப்து (அரபு) யுத்தத்தின் பின்பு ரூசியாவின் யுத்தக் கப்பல்களும் அதன்பிற நடவடிக்கைகளும் இப்பிரதேசத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தியுள்ளதெனக் கருதலாம். மேலும் மொரிசியஸ்தீவிலும் தன்சானியாவிலும் துறைமுக வசதிகளையும் ரூசியாபெற்றுள்ளது. ஆனால் அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் இப்பிரதேசத்தில் அதன் செல்வாக்கு மங்கிவிட்டதென்றே கூறலாம். ஏனெனில் இன்று இப்பிரதேசத்தில் உள்ள அநேக நாடுகள் அமெரிக்காவின் இராஜதந்திர உறவுகளை முறித்துக் கொண்டவையேயாகும் எனவே அமெரிக்கா தனது ஆயுத பலத்தினால் இப்பிரதேசத்தை ஆதிக்கம் செலுத்த முயல்கின்றது. இதன் விளைவே பிரித்தானியாவுக்குச் சொந்தமானதும், இப்பிரதேசத்துள் அடங்கியதுமான டியாகோ,—கார்சியா என்னும் தீவில் அமெரிக்கா விமானக் கடற்படைத்தளமொன்றை அமைப்பதற்குத் தயாராகியுள்ளது.

டியாகோ—கார்சியாவில் கடற்படைத்தளம் அமைத்த அமெரிக்கா, இந்து சமுத்திரத்தில் சோவியத் யூனியனின் நடத்தைகள் அதிகரித்துள்ளன என குற்றம் சாட்டுகின்றது. இதனைச் சோவியத் யூனியன் மறுத்துரைக்கின்றது. எனினும் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் இப்பிராந்தியத்தில் உள்ள பல நாடுகள் தம் நடவடிக்கையில் அரசியல் விழிப்புணர்ச்சி கொண்டுள்ளன. ஏனெனில் இவை 1948-ம் ஆண்டிற்குமுன்னர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தமையும் இதன் பின்னர் சுதந்திரம் பெற்றமையால் தம்மைத்தாமே காப்பாற்றியும் காலனித்துவத்தை தம் நாடுகளில் இருந்து வெளியேற்றி வருவதையும் நாம் அவதானிக்கக் கூடியதாகவும் உள்ளது. இவை தம் உற்பத்தியில் தீவிரகவனம் செலுத்திவருகின்ற

தெனினும் பூரண அபிவிருத்தி அடைய வில்லை. எனவே இந்நாடுகளைக் குறை அபி விருத்தி நாடுகள் எனக்கருதுகின்றனர். இவற்றின் போக்கு முதலாளித்துவ ஏகாதி பத்திபத்தியத்துக்கும், சோசலிச நாடுக ளின் போக்கிற்கும் புறம்பானதாக ஓர் புதிய பாதையில் தம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றன. இதனுல் இந் நாடு களை மூன்றும் உலக நாடுகள் என்னும் கூட்டுச் சேரா நாடுகள் என்றும் கூறுகின் றனர். ஆயினும் இப்பிரதேசத்தில் உள்ள எல்லா நாடுகளும் கூட்டுசேரா இயக்கத் தில் அங்கம் வகிக்கா விடினும், அங்கம் வகிக்காத பல நாடுகள் இயக்கத்திற்கு அளி த்துள்ள பலத்த ஆதரவும், இக்கருத்தின் சார்பாக செய்துவரும் நியாயவாத முயற் சிகளும் அந்நாடுகள் இக்கருத்தினை எவ்வள வுக்கு வரவேற்கின்றன என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

இந்து சமுத்திரம் மேற்கு நாடுகளுக் கும், கிழக்கு நாடுகளுக்கும், இடையிலான போக்குவரத்து மட்டுமன்றி இப்பிரதேசத் தில் அமைந்துள்ள நாடுகள் பல இயற்கை மூலவளங்கள் உடையனவாய் இருப்பதனு லும், பசுபிக் மகா சமுத்திரத்திற்கு பிர வேச வாயிலாகவும் அமைந்துள்ளது. இக் காரணங்களே வல்லரசு நாடுகள் இந்நாடு களை பல வருடங்களாக காலனித்துவ நாடுகளாகவும், அல்லது சார்பு நாடுகளாக வும் தொடர்ந்து வைத்திருக்க தூண்டியது எனலாம். இப்பிராந்தியத்துள் ஏறக் குறைய ஒரு கோடியே முப்பது இலட்சம் மக்கள் வாழ்கின்ற எமது நாடாகிய இலங் கையும் ஒன்ருகும். இலங்கையை பொறுத்த வரையில் காலணித்துவ நாடாக மட்டு மல்லாது ஆபிரிக்க ஆசிய பெரு நிலங்களை யும், தென்கிழக்கில் உள்ள தீபகற்பங்களை யும், கபளிகாரம் செய்ய முயற்சித்த வல் லரசுகளுக்கு ஓர் தளமாகவும் அமைந்துள் ளது என்று கூறலாம்.

*1961*-ம் ஆண்டு கெய்ரோவில் நடந்த கூட்டுச் சேரா நாடுகளின் இரண்டா வது மகா நாட்டில் ஆபிரிக்க தலைவர்க ளால் ''ஆபிரிக்காவை அணுவாயுதமற்ற பிரதேசமெனப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்ற பிரேரணையை, இலங்கைப் பிரதமர் ''அணுவாயுதமற்ற சமாதானப் பிரதேசமென்ற கருத்து இந்து சமுத்திரப் பிரதேசம் முழுவதையும் உள்ளடக்க வேண் டுமென்று திருத்தினுர். மேலும் இந்து சமுத்திரம் இந்து சமுத்திர நாடுகளுக்கே சொந்தமானது, இதில் வல்லரசுகளின் தலையீடு அவசியமற்றதும், தவிர்க்க வேண் டியதுமாகும். எனவே வல்லரசு நாடுகள் இப்பிராந்தியத்துள் தளம் அமைக்கக் கூடாது என்றும், இந்து சமுத்திரம் சமா தானப் பிரதேசமாக பிரகடனப் படுத்தப் படல் வேண்டும் என்ற கருத்தினை முதன் முதலாக ஐ. நா. சபையில் வலியுறுத்திய பெருமை இலங்கைப் பிரதமர் கௌரவ திருமதி பண்டாரநாயக்கா அவர்களுக்கும், இலங்கைவாழ் மக்களுக்கும் உரியதாகும் 1971-ம் ஆண்டில் நடந்த ஐ. நா. சபை யில் 29-ம் கூட்டத்தில் இந்து சமுத்திரம் சமாதானப் பிராந்தியமாகப் பிரகடனப் படுத்திய தீர்மானத்தில் வல்லரசுப் போட்டி, நிலவும் சர்தர்ப்பத்தில் சிந்திக் கப்பட்டவாறு இந்து சமுத்திரத்தில் வல் லரசுகள் தங்களுடைய இராணுவ நடவடிக் கைகளை மேலும் பெருக்கி விரிவாக்காமல் நிறுத்திக் கொள்வதற்காக வல்லரசுகள் இந்து சமுத்திர கரையோர நாடுகளுடன் கலந்தாலோசனை செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தப் பட்டிருந்தது. ஐ. நா சபை இப்பிரேரணையை அங்கீகரிக்கும் நோக்கு டன் இந்து சமுத்திர கரையோர நாடுக ளும் அவற்றைத் தொடர்ந்த நாடுகளும், பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத் துவம் வகிக்கின்ற நாடுகளும், மற்றும் பெரிய கப்பல்-போக்குவரத்து நாடுகளும், ஒன்று சேர்ந்தே கலந்தாலோசிக்க வேண்டு மென வலியுறுத்தியது.

இந்து சமுத்திர நாடுகள் சமாதானப் பிரதேசம் என்ற கருதுகோளின் அடிப் படையில் வல்லரசுகளின் போட்டியினை யும், யுத்த அபாய நிலையையுமே எதிர்க் கின்றன. இதனுல் ஏற்படும் இராணுவ, கடற்படைப் பிரசன்னத்தை முற்று முழு தாக தவிர்ப்பதே இதன் நோக்கமாகும். மேலும் அமைதியான கப்பல்கள் போக்கு வரத்தை கட்டுப்படுத்தப் போவதில்லை என்றும் வலியுறுத்தியுள்ளது. இக்கட்டுப் பாடுகள் வல்லரசு நாடுகளுக்கு மட்டுமன்றி இப்பிராந்திய நாடுகளுக்கும் உரியதாகும். இந்நாடுகள் தமக்கிடையிலான பிணக்கு களை பயமுறுத்துவதன் மூலமோ, அல்லது பலாககாரத்தின் மூலமோ தீர்க்க முயலக் கூடாது என்றும் அவை தமக்கிடையிலான சமாதான அடிப்படை உறவுகளாலே தீர்க்கப்படவேண்டுமென்றும் கருதுகின்றது.

# பெறுமானத் தேய்வு

*K. Jayaratnam M. Com.*
கணக்கியல் விரிவுரையாளர்

பெறுமானத்தேய்வு என்பது நிலையான சொத்துக்களில் ஏற்படுகின்ற நிரந்தரமான பெறுமதிக்குறைவாகும். இப்பெறுமதிக் குறைவு நிலையான சொத்துக்களைப் பயன்படுத்துவதனால் வருகின்ற பாவனை விரயத்தால் *Wear and Tear*. காலக்கழிவினால் *Effluxion of Time*. வழக்கிழப்பால் *Obsokescence* ஏற்படுகின்றன. பெறுமானத் தேய்வினை கணக்குகளில் காட்டுவதன் நோக்கம் நிலையான சொத்தின் கொள் விலையை அச்சொத்துக்கள் பயன்படுத்தப் படுகின்ற காலங்களுக்கு பகிர்ந்து நட்டமாகக் காட்டுவதாகும்.

நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு பின்வரும் காரணங்களால் ஏற்படுகின்றன.

**1. பாவனை விபரம்:** *Wear and Tear*.

இயந்திரம், மோட்டார்வான், போன்ற சொத்துக்களின் பெறுமானத்தேய்வு, அச்சொத்துக்களைப் பாவிப்பதனால் ஏற்படுகின்றன. இச்சொத்துக்களை உற்பத்தியில் அல்லது வியாபாரத்தில் பயன்படுத்துவதனால் தேய்ந்துபோகின்றன. இது அச்சொத்துக்களின் அகக்காரணங்களினால் ஏற்படுகின்றன. கவலையீனமாகவும், அதிகமாகவும், இச்சொத்துக்களைப் பயன்படுத்துவதனால் அதிகமான பெறுமானத்தேய்வு ஏற்படுகின்றன.

**2. காலக்கழிவு:** *Effluxion of Time*.

ஆக்க உரிமை, குத்தகையின் ஆதனம் போன்ற நிலையான சொத்துக்களின் பெறுமதிக்குறைவு காலம் கடந்து போவதனால், அல்லது காலம் கழிந்து போவதனால் ஏற்படுகின்றன. உதாரணமாக ஒரு ஆதனத்தினை பத்து ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எடுத்திருப்பின் அந்த ஆதனத்தை பயன்படுத்தினாலும், அல்லது அதனைப் பயன்படுத்தாது விடினும் பத்து ஆண்டு முடிவில் அவ்வாதனத்தை குத்தகையை புதுப்பிற்காமல் பயன்படுத்த முடியாது. பத்தாண்டு முடிவில் அதனின் பெறுமதி முற்றாக தேய்ந்து போகின்றன.

**3. வழக்கிழப்பு:** *Obsolescence*.

புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட நவீனமயமான இயந்திரம், மோட்டார் வான்கள் போன்ற நிலையான சொத்துக்கள் சந்தைக்கு வருவதனால் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி வீழ்ச்சியடைகின்றன. ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட சொத்து புதிதாக இருந்தாலும், புதிய கண்டுபிடிப்பின் காரணமாகவும், நவீனமயமான இயந்திரம் சந்தைக்கு வந்த காரணத்தினாலும், பாவனையாளர்களின் பாவனைமுறையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவும் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட சொத்தின் பெறுமதி வீழ்ச்சியடைகின்றன. இதுவும் பெறுமானத் தேய்வாகும். இப் பெறுமானத் தேய்வு புறக்காரணங்களால் ஏற்படுகின்றன.

**4. அருகல்:** *Depletion*.

சுரங்கங்கள், எண்ணெய்க்கிணறு போன்ற சொத்துக்களின் பெறுமதிக்குறைவு அச்சொத்துக்களிலிருந்து எடுக்கப்படும் பொருட்களின் அளவினைப் பொறுத்தே அமைகின்றது. ஒழிவாகும் சொத்துக்களில் எவ்வளவு பொருட்கள் ஒழிந்து போனதோ அதே அதனின் பெறுமானத் தேய்வாகக் கணக்கெடுக்கப்படும்.

பெறுமானத்தேய்விற்கும் *Depreciation*, விலை தழம்பலுக்கும் *Fluctuation* உள்ள வேறுபாடுகள்:-

பெறுமானத் தேய்வு வேறு, தழம்பல் வேறாகும். பெறுமானத் தேய்வு அகக்காரணங்களாலும், புறக்காரணங்களாலும் ஏற்படுகின்றன. தழம்பல் புறக்காரணத்தால் மட்டும் ஏற்படுகின்றன.

1. பெறுமனத் தேய்வு இலாபம் ஈட்டும் தன்மையைப் பாதிக்கின்ற காரணத்தால் இலாபநட்டக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றது. தழம்பல் நிலையான சொத்துக்களின் உழைக்கும் சக்தியினை அல்லது திறனைப் பாதிக்காத காரணத்தினால் அது இலாப நட்டக் கணக்கில் வரவு வைக்கப்படமாட்டாது.
2. பெறுமானத் தேய்வு என்பது பெறுமதிக்குறைவையே குறிக்கும். ஆனால் தழம்பல் பெறுமதிக்குறைவையும் பெறுமதி ஏற்றத்தையும் குறிக்கும்.

3. பெறுமானத் தேய்வு நிரந்தரமானதாகும். ஆனல் தழம்பல் தற்காலிகமானதாகும.

4. பெறுமானத் தேய்வு நிலையான சொத்துக்களோடு சம்பந்தப்பட்டது. தழம்பல் நடைமுறைச் சொத்துக்களோடு சம்பந்தப்பட்டது.

**பெறுமானத் தேய்விற்கு ஏற்பாடு (ஒதுக்கம்) செய்யவேண்டியதற்கான காரணங்கள்:-**

1. ஓர் உற்பத்திப் பொருளின் சரியான செலவினை (கிரயம்) காண்பதற்கு பெறுமானத் தேய்வு செய்யப்படல்வேண்டும். கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் நாளாந்தம் வியாபாரத்தால் நுகரப்பட்டு அழிந்து போகின்றன. ஆகவே ஒவ்வொரு கணக்காண்டும் அழிந்துபோன அப் பெறுமதி நட்டமாகக் காட்டப்படல் வேண்டும்.

2. பெறுமானத் தேய்வு செய்யப்படாவிடின் ஐந்தொகையில் நிலையான சொத்தின் பெறுமதி அதிகரித்துக் காட்டப்படும்.

3. பெறுமானத் தேய்விற்கு ஏற்பாடு செய்வதனல் மூலதனம் இலாபமாகக் கொடுக்கப்படாமல் காக்கப்படுகின்றன.

4. கம்பனிச் சட்டத்தின்கீழ் பெறுமானத் தேய்விற்கு ஏற்பாடு செய்யாமல் பங்கு இலாபம் கொடுத்தல்கூடாது.

**பெறுமானத் தேய்வு செய்யும் முக்கியமான முறைகள்:**

1. நேர்கோட்டு அல்லது மாருப்பாக முறை: இம்முறைப்படி கொள்விலையில் ஓர் குறிப்பிட்டவீதம் பெறுமானத் தேய்வாக ஒதுக்கப்படுகின்றது.

2. ஒடுங்குபாகமுறை:- இம்முறையில் ஓர் குறிப்பிட்ட வீதம் குறைக்கப்பட்ட பெறுமதியிலிருநது ஒவ்வொரு ஆண்டுதோறும் ஒதுக்கப்படுகின்றது.

3. ஆண்டுத்தொகை முறை:- இம்முறையில் ஒரு குறிப்பிட்ட வீத வட்டியினை சம்பாதிக்கிறது எனக் கருத்திற் கொண்டு அத்தொகையை சொத்துக் கணக்கில் வரவு வைத்த பின்னரே மீதித் தொகைக்கு பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்றது.

4. பெறுமானத் தேய்வு நிதிமுறை:- சமமான ஒரு குறிப்பிட்ட தொகை ஒவ்வோர் ஆண்டும் இலாபநட்டக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு பெறுமானத் தேய் நிதிக் கணக்கில் செலவு வைக்கப்படுகின்றது. அத்தோடு அத்தொகை காசாக வெளியில் முதலீடு செய்யப்படுகின்றது. பெரும்பான்மையான நிலையான வட்டியைத் தரக்கூடிய முதலீடுகளில் முதலீடு செய்யப்படுகின்றது. இதில் ஆண்டுதோறும் பெறப்படுகின்ற வட்டியும் முதலீடு செய்யப்படுகின்றது.

5. நட்டவீட்டுப்பத்திர முறை.- சொத்தினுடைய ஆயுள்காலம் வரைக்கும் ஓர் நட்டவீட்டுப்பத்திரத்தினை எடுத்து தேவையான பணத்தை ஆயுள்கால முடிவில் சொத்தின் பெறுமதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

6. மறுபடி விலைமதித்தல் முறை:- சில சந்தர்ப்பங்களில் சரியாகக் கணக்கிடப்பட்டு பெறுமானத்தேய்வு செய்ய முடியாவிடில் மறுபடி விலைமதிப்பு முறை பின்பற்றப்பட்டு இலாப நட்டக் கணக்கில் பற்றுவைக்கப்படும்.

7. அருகல்முறை:- (*Depletion Method*) இம்முறை சுரங்கங்கள் போன்றவற்றிற்கு பின்பற்றப்படும். முதலீடு செய்த தொகையில் எவ்வளவுக்கு ஒழிக்கப்பட்டுள்ளதோ அத்தொகைக்கு மட்டும் இலாபநட்டக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

8. இயந்திர மணித்தியால முறை:- ஒரு இயந்திரத்தினுடைய ஆயுள் பூராவும் இயங்கக்கூடிய மணித்தியால அடிப்படையிலேயே பெறுமானத்தேய்வு செய்யப்படும். ஓர் குறிப்பிட்ட ஆண்டில் இயந்திரம் எவ்வளவு மணிநேரம் இயங்கியதோ அவ்வளவு மணிக்கும் பெறுமானத்தேய்வு செய்யப்படும்.

*WITH THE BEST COMPLIMENT*

**LANKA TRADING IRON WORKS**

*71 STANLEY ROAD*

**JAFFNA.**

என்றும் சிரித்து மகிழ

தீசனின்



**கலகலப்பு**

மாத சஞ்சிகையைப்

படியுங்கள்

அன்பளிப்பு

**கல்வி போதஞ நிலையம்**

34, பலாலி வீதி,

யாழ்ப்பாணம்.

அறுசுவை உணவுகள்,

குளிர்பானங்கள் பெற்றுக் கொள்ள

நாடுங்கள்

**நியூ**

**பிளவ்ஸ்**

5, 6 நவீன சந்தை

யாழ்ப்பாணம்

★ முதற் பரிசு பெற்ற கட்டுரை

# மனிதனின் சிறப்பிற்கு உறுதுணை சூழ்நிலையா? இலட்சியமா?

ப. ஸ்ரீஸ்கந்தன்
படம்வரை தொழிற் பயிற்சி

மனிதர் பிறக்கின்றார்கள். அதில் சிலர் குடத்திலிட்ட விளக்கைப் போல சிறிது நேரம் மினுமினுங்கிப் பின் அணைந்துபோகின்றார். அல்லது குன்றின் மேலிட்ட சுடர் போல குவலயம் முழுவதும் பிரகாசமாக வாழ்ந்து காட்டுகின்றார்கள். வேறுசிலர், மண்ணுக்குப் பாரமாகவும் விண்ணிற்கு வெறுப்பாகவும் தம வாழ்வைக் கழித்து விடுகின்றார்கள். இன்னுஞ் சிலர் நீடு வாழ்ந்து, நெடும்பணி செய்து உலக சரித்திரத்தில் ஒளி பொருந்திய பக்கங்களில் தம் பெயரைப் பொன்னெழுத்துக்களால் பொறித்து விட்டு மறைந்து போகின்றார்கள். மனிதரது இந்த வெவ்வேறு நிலைகளுக்குக் காரணம், அவர்கள் வளர்ந்த சூழ்நிலையா? அல்லது கொண்ட இலட்சியமா? என்பது சர்ச்சைக்குரிய விடயம்தான்

சூழ்நிலை-பெற்றோர், உற்றார், சுற்றத்தார், நண்பர்கள் ஆகியோரின் மொத்தத் தாக்கமே சூழ்நிலையாகும். இதற்கு, வதியும் இடமும் சில நேரங்களில் காலமும் காரணமாக அமைந்துவிடத் தவறுவதில்லை. இலட்சியம் என்றால் என்ன? கஷ்டம் என்று ஒன்றைக் கண்டவுடன் காணாமல் போய்விடுகின்ற விருப்பம் என்பதல்ல அது. அன்றியும், காலத்திற்குக் காலம் மாறிவிடுகின்ற கொள்கை என்றும், நிமிடத்திற்கு நிமிடம் தோன்றி மறைகின்ற ஆசை என்றும் அது அர்த்தமாகிவிட முடியாது. அவ்வாறாயின் இலட்சியம் என்பது தான் என்ன? உடல், பொருள், ஆவி இவை மூன்றாலும் காத்து, வளர்த்து, அணு அணுவாக ஒன்றை அடையத் துடிக்கும் ஆர்வம்தான் இலட்சியம் ஆகும்.

இவ்வாறாயின் இலட்சியம், மனித வாழ்க்கையை எவ்வாறு சிறப்பிற்குள்ளாக்கி விடும்? இதை அறிவியல் ஏடு கொண்டு விளக்குவதிலும் பார்க்க, வழிவழியாக நாம் கண்ட அனுபவங்கள் வாயிலாக அல்லது மாண்டுபோன பேரறிஞர்களின் வாழ்க்கைச் சக்கரத்தைத் திருப்பிப் பார்ப்பதன்மூலம் இலட்சியத்தின் சிறப்பு என்ன என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

''நான் வாழப் போவது ஒரு முறை தான். அதை வெறும் குமாஸ்தாவாகக் கழித்துவிட நான் விரும்பவில்லை'' என்று கூறியவாறே காரியாலயத்தை விட்டு வெறும் கையுடன் வெளியேறினான் இருபது வயது நிரம்பாத இளைஞனொருவன். அவனுடைய இலட்சியமெல்லாம், தான் ஒரு பெரும் எழுத்தாளன் ஆகவேண்டும் என்பதே. அவன் எழுதினான். ஒன்பது ஆண்டுகள் எழுதினான். ஆனால் அவன் எழுதிய நூல்களையும், நவீனங்களையும் யாருமே பிரசுரிக்க முன்வரவில்லை. எங்கு நோக்கினும் ஏமாற்றமும் தோல்வியும் தான் அவனிற்கு ஆனாலும் அவன் தன் இலட்சியத்தை விட்டபாடில்லை. தினமும் ஐந்து பக்கங்களாவது எழுதியே தீருவான். இறுதியில் வெற்றி அவனிற்கே. அவ்விளைஞன் யார்? அவன் தான், ஆங்கில நாடக உலகின் தந்தை, பேனா வன்மையால் பெரும் பொருளீட்டிய பெர்னாட்ஷா.

''வெற்றி இலட்சியத்தைப் பொறுத்திருக்கின்றது.'' என்று கூறினான் நெப்போலியன். உன்னதமான அபிலாஷைகளும் உயரிய இலட்சியங்களும்தான் மனிதரை மனிதருள் மாணிக்கங்களாக ஆக்கியுள்ளது. ''எவ்விதம் ஒரு சிம்மம் தன் கூரிய நகங்களைப் பதியவைத்து அடையாளம் உண்டாக்குகிறதோ, அது போன்றே நான் என் இலட்சியத்தால் என் பெயரைச் சரித்திரத்தில் பதியவைக்க விரும்புகிறேன் என்றுகூறி, பதித்தும் காட்டினான். முசோலினி.

ஒருவன் தன் வாழ்வின் இலக்கை எய்த வேண்டுமாயின் முயற்சி அவசியம். அவனிற்கு இலட்சியம் என்று ஒன்று இருக்குமானால் முயற்சி தானாகவே வந்துவிடும். இந்த அளவிடா முயற்சியின்போது அயர்ச்சி உண்டாகலாம். அதை நம்மால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாதே என்ற தளர்ச்சியும் வந்து சேரலாம். ஆனால் கொண்ட இலட்சியம் நம்மால் வெல்லப்பட வேண்டும் என்ற உணர்ச்சி மட்டும் இருந்து விட்டால் போதும், அடுக்கடுக்

காக நாம் உயர்ந்துவிடலாம். இன்றைய உலகில் பலர், நாங்கள் ஏழைகளாயிற்றே, எதற்கு எமக்கு இந்த இலட்சியம்? என்று வீணே இருந்துவிடுகிறார்கள். உலக சரித்திரத்தைப் பார்த்தோமானால் செல்வந்தர்களை விட ஏழைகள்தான் ஏந்தல்களாக வாழ்ந்திருக்கிறார்கள். பெரும், பெரும் போராட்டங்களென்ன, அரும்பெரும் புரட்சிகளென்ன, மாபெரும் மதங்களென்ன, சீர்பெறும் காவியங்கள் என்ன, சிறப்புறு ஆராய்ச்சிகளென்ன, இவை எல்லாம் ஏழைகளால்தான் செய்யப்பட்டிருக்கின்றன.

வறுமையின் தாங்கொணாத் தாபத்தால் ''நான் பிறந்ததுதான் என் முதல் துன்பம்'' என்று ஒருதடவை கண்ணீர் விட்டுக் கதறிய ரூஸோ தான், பின்னொரு கால் பிரெஞ்சுப் புரட்சியின் ஆன்மாவாக விளங்கினார். சமதர்மக் கொள்கையை உலகிற்கு அளித்த கார்ல்ஸ் மார்க்சின் வாழ்க்கை ஒரு துன்பக்கடலல்லவா? எங்கள் தந்தை என்று துருக்கியரால் போற்றப்படும் கமால் பாஷா கடற்கரையில் வேலை பார்த்த ஏழையின் மகன் தானே? வியன்னாவின் தெருக்களிலே வர்ணம் தீட்டிக் காலம் கழித்து வந்த ஹிட்லர் பின்பு சர்வாதிகாரியாகி ஐரோப்பாக் கண்டத்தின் படத்திலே புதுவர்ணம் தீட்டவில்லையா? அமெரிக்காவைச் சுதந்திர நாடாக்கிய வாஷிங்டன் ஓர் ஏழை. அமெரிக்காவில் அடிமை வியாபாரத்தை அடியோடு வேரறுத்த ஆப்ரஹாம் லிங்கன் புத்தகங்களை இரவல் வாங்கிப் படிப்பராம். சாத்திர ஆராய்ச்சிகள் பல செய்த எடிசன் புகைவண்டிப் பெட்டிகளில் பத்திரிகை விற்பனை செய்து வயிறு வளர்த்தவர். குழந்தைப் பருவத்தில் பைசாவைக் கூடக் கண்டறியாத ஏழை ராக்பெல்லர் முதுமைப் பருவத்தில் கோடீஸ்வரக் கொடை வள்ளலாகி முப்பது கோடி பவுண்களுக்கு அதிபதியானார். அடிமையின் மைந்தன், செருப்புத் தைப்பவனின் மகன் என்றெல்லாம் இகழப்பட்ட ஸ்டாலின் ரஷ்ய மக்களைத் தலைநிமிர்ந்து நடக்கச் செய்யவில்லையா?— இந்த ஏழைகள் எல்லாம் தத்தமக்கு என்று ஒரு இலட்சியம் கொண்டு வாழ்வில் சிறப்புற்றார்கள்.

துப்பாக்கியால் சுடப்பழகுபவன் ஒரு குறியே இல்லாமல் அவன் சுடுவானாயின் யாதொரு பயனையும் அடைந்துவிட முடியாது. இவ்வாறுதான் இலட்சியம் என்று ஒன்றை நாமாகவே ஏற்படுத்தி, அதை வைத்தே செயல்படுவோமாயின், நிச்சயம் வாழ்வில் நாம் சிறப்புற்று விடலாம்: சூழ்நிலையை நாம் குறியாக ஏற்படுத்த முடியாது. ஏனெனில், பெரும்பாலும் சூழ்நிலைகள் தானாகவே ஏற்படுகின்றது. அதைத் தவிர்க்க முடியாமலும் போய் விடுகிறது. மனிதன் எதை இலட்சியமாகக் கொள்கின்றானோ அதைப் போலவே ஆகிவிடுகின்றான். வித்திலிருந்தே மரம் உண்டாகின்றது. இதே போல்தான் மனதில் புதைந்துள்ள இலட்சியங்கள் அவனுடைய சிறந்த வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்துவிடுகிறது.

இலட்சியத்தின் முன்னால் பெண் என்ற பாகுபாடும் சிறப்பிற்குத் தடைக்கல் ஆகிவிட முடியாது. புற்றுநோயிற்கு மருந்து கண்டுபிடிக்க வேண்டும் என்ற இலட்சியம் தான்மேரி கியூரி அம்மையாரை இரேடியத்தைக் கண்டுபிடிக்க வைத்து, ஒருமுறை அல்ல, இரண்டு முறைகள் நோபல் பரிசை வாங்கிக் கொடுத்தது. இந்திய சுதந்திரத்தின்மீது கொண்ட இலட்சியம்தான் ஜான்சி ராணியின் கையில் வாளேந்த வைத்தது. இதே போல்தான் இலட்சியமானது அறிவே இல்லாதவர்களை அறிவாளியாக்கி, அரசியல் மேதைகளாக்கி, அறிஞர்க்கறிஞராகவும் ஆக்கியுள்ளது. காந்தியடிகள் பள்ளியில் படிக்கும் போது மட்டமான மாணவராகவே இருந்தார் பாடசாலை விட்டதும், தன்னை மற்றவர்கள் பார்த்து விடப்போகிறார்களே என்று ஒருவித வெட்கத்தால் ஒளிந்து, ஒளிந்து வீட்டை அடைவாராம். அப்படிப்பட்ட அந்த காந்தி தன் தாய் நாட்டின் மீது வைத்த இலட்சியம்தான் இன்று அவரை மகாத்மா காந்தி ஆக்கியுள்ளது. அறிவே இல்லாத வினோதமான பிறவி என்று இகழப்பட்ட ஸ்மட்ஸ் என்ற ஆங்கிலேயர்தான் பின்னொருகால் மனிதருள் அபார அறிவு படைத்த மனிதர் என்று புகழப்பட்டு பீல்ட் மார்ஷல் என்ற பட்டத்திற்கு அதிபதியானார்.

இவ்வாறு, இலட்சியம் என்ற போர்வைக்குள் ஏழை, அறிவில்லாதவர், கோழை, பெண் ஆகிய எல்லோரும் சமமாகவே கருதப்படுகிறார்கள்; இலட்சியங்கள் இவ்வாறுதான் அமைய வேண்டும் என்பதல்ல. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இலட்சியங்கள் இருக்கலாம், ஆனால், அவை யாவும் வாழ்வின் முன்னேற்றத்திற்கு அடிகோலுவனவாக இருந்தாற் சரிதான்; இவ்வுலகமாகிய மாபெரும் கடலிலே, மனிதன் என்னும் படகு, இலட்சியம் என்ற சுக்கான் இல்லாமல் செல்லுமாயின் அது

அலையோடு அலையாகப் போகவேண்டி நேரிடும். இலட்சியம் என்று ஒன்று ஒருவனிற்கு இருந்து விட்டால், பாய்ந்து வரும் சிங்கம் என்ன, குறுக்கே நீண்டு நிமிர்ந்திருக்கும் மலைச்சிகரமென்ன, ஒன்றைப் பலதாக்கிப் பரப்பித் தனக்கே களங்கத்தை ஏற்படுத்திக் கொள்ளும் சமூகம் என்ன? — இவை எல்லாம் இலட்சிய — வாதிக்கு வெறும் தூசு.

இனி, சூழ்நிலை மனிதனைச் சிறப்புறச் செய்கின்றதா என்பதை ஆராய்ந்து கொண்டு சென்றால் உண்மை என்ற பதிலைச் சொல்லித்தான் ஆகவேண்டியுள்ளது. சிறுவயதில், தாய் ஜீஜிபாய் தன் மடியில் வைத்துச் சொன்ன இராமாயணம், பாரதம் போன்ற கதைகளின் உந்தலினாலேயே சிவாஜி வீரனானான். வின்சன்ட் சேர்ச்சிலின் தகப்பன் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிதி மந்திரியாக இருந்தவர். அதே சூழலில் வளர்ந்ததனால் பின்னொருகால் சேர்ச்சில் அதே நிதிமந்திரி பதவியில் அமர்ந்து உலகை ஒரு ஆட்டு ஆட்டுவித்தார். ஒரு வீரனின் வாழ்வு ஆரம்பம் முதல் இறுதி வரை பெருந் துன்பங்களுக்கிடையே கழிந்த தென்றால் அது லெனின், வாழ்க்கையைத்தான் சொல்லலாம். அப்படிப்பட்ட நிலையிலும், லெனினின் சோர்ந்து போகிற நேரமெல்லாம் அவர் மனைவி குருப்ஸ்காயா தான், ஆக்கமும், ஊக்கமும் அளிப்பாள். இவ்வாறு மனைவி என்ற அந்த சூழல் அன்று இல்லாவிட்டால் லெனின் உருவம் வம் இன்று கண்ணாடி அறையினுள் இருந்திருக்காது அழிந்திருக்கும்.

ஆனாலும், சூழ்நிலையால் விளைகின்ற தன்மைகளைச் சற்றே நோக்கும்போது, சூழ்நிலையால் ஏற்படுகின்ற தீமைகள் அவற்றையெல்லாம் மூடி மறைத்துவிடுகிறது. ஒழுக்கமான பெற்றோர்களுக்குப் பிறந்து, ஒழுக்கமான சூழ்நிலையில் வளர்பவன் ஒழுக்கமுள்ளவனாகவே வளர்ந்து விடுகிறான். ஒழுக்கத்தை இறுகக் கடைப்பிடிக்கும் பாடசாலையில் பயில்கின்ற மாணவர்களைப் பாருங்கள்; அவர்கள் ஒழுக்கத்தின் பிரதிநிதிகளாகவே விளங்குகின்றார்கள். இது அவர்களது கல்விக் காலத்தை மட்டுமில்லாது, உத்தியோக காலத்தையும் சிறப்புடையதாக்குகின்றது. நாட்டுப்புறத்தில் வாழ்கின்ற ஒருவனது வாழ்க்கையையும், பட்டினத்தில் வாழ்கின்ற ஒருவனது வாழ்க்கையையும் ஒப்பீட்டு ரீதியில் அணுகினால் இதன் தன்மை நன்கு புலப்படும். பேச்சில் மட்டுமல்ல, நடை, உடை, பாவனை, கொள்கை ஆகியவற்றிலும் வேற்றுமைகள் வெளிப்படும்.

ஆகவே, நல்ல சூழ்நிலை ஒருவனை நல்லவனாகவும், கெட்ட சூழ்நிலை அவனைக் கெட்டவனாகவும் ஆக்குகின்றது. இதற்கு நம் வாழ்வில் ஏற்படுகின்ற அல்லது ஏற்பட்டால் என நினைத்துப் பார்க்கின்ற ஓர் உதாரணத்தை எடுத்துப் பார்ப்போம். எமக்குப் பிடித்தமான ஒரு இனிப்புப்பண்டம் விற்கின்ற ஒரு கடையைச் சிறிது நேரம் பார்க்கச் சொல்லிவிட்டு அவசர அலுவலாக எங்கோ சென்று விட்டார் என வைத்துக் கொள்வோம். வேறு யாரும் அங்கு இல்லை. இந்நிலையில் யாருடைய மனம் தான் அலை பாயாமல் இருக்கும். அதை எடுத்து உண்ணத் துடிக்க மாட்டோமா? சிலர் அதை எடுத்து உண்ணத் தயங்கமாட்டார்கள் அது களவு தான். ஆனாலும் என்ன செய்வது -? — அவர்கள் சூழ்நிலை வாதிகள். உங்களில் சிலர் எடுக்கக் கூடாதென்றே இருந்துவிடுவீர்கள் - நீங்கள் இலட்சியவாதிகள்.

உலகம் போற்றுகின்ற அண்ணல் காந்திகூட சிறுவயதில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக பீடி புகைத்துள்ளார். மது அருந்தியுள்ளார். புலால் புசித்துள்ளார். நாளடைவில், அவர் கொண்ட இலட்சியம் அவற்றை எல்லாம் மறந்துவிடச் செய்தது. அவர் சுகயீன முற்று இருந்த போது டாக்டர்கள் வற்புறுத்தியும், புலால் உண்ண அவர் மறுத்து விட்டார் இதிலிருந்து இலட்சியங்கள், சூழ்நிலையை வெகு வெற்றிகரமாக வென்றுவிடுகின்றன என்பது புலப்படுகின்றது. மேலும், சூழ்நிலை செய்கின்ற நன்மைகளிலும் பார்க்க அதனது தீமைகள் பெரிது. அது காலத்தால்

மாருத ஒன்று; ஆனல், இலட்சியம் எந்த வித தீமையையும் விளைவிப்பது அல்ல. இது உலகம் அறிந்த ஒன்று. எனவே, மனிதனின் சிறப்பிற்கு சூழ்நிலையிலும் பார்க்க இலட்சியம் உறுதுணையாக அமைந்துவிடுகிறது.

ஆகவேதான் மாணவ மணிகளே நீங்களும் இலட்சியவாதிகள் ஆகுங்கள். அதற்குத் தகைமைகள் எதுவும் வேண்டியதில்லை; முயன்ருல் யாரும் வெற்றி பெறலாம். டாக்டராவது அல்லது பொறியியலாளராவது தான் இலட்சியம் ஆகிவிடமுடியாது. உலகம் போற்றும் உத்தமர்களாகவோ, மகான்களாகவோ, மனிதருள் மாணிக்கங்களாகவோ, மதபோதகர்களாகவோ அரசியல் அறிஞர்களாகவோ, கவிஞர்களாகவோ எழுத்தாளர்களாகவோ, தத்துவமேதைகளாகவோ, புரட்சி வீரர்களாகவோ, ஆராய்ச்சியாளர்களாகவோ, அன்றேல் வியாபார மன்னர்களாகவோ மாறிவிடுங்கள். ஏனெனில், அவ்வாறு திகழ்ந்தவர்கள் யாவரும் இலட்சியம் கொண்டு சிறப்புற்ற வெறும் மனிதர்கள் தான் நிச்சயமாக வெற்றி உமதே.

திருட்டுக்கூட சில வேளைகளில் அங்கீகரிக்கப்படுகிறது. "தற்கொலை செய்யும் நோக்கத்துடன் ஒருவன் கடையில் வாங்கி மறைத்து வைத்திருக்கும் விஷ மருந்தை அவனுக்குத் தெரியாமல் திருடுகின்ற போது" இத்திருட்டு நிச்சயம் சமுதாயத்தில் அங்கீகரிக்கப்படும்.

அன்பளிப்பு

NEW DILKA
CREAM HOUSE & HOTEL

408, Hospital Road, JAFFNA.

உயர்ந்த சேவை, நிறைந்த பலன். தரமான உணவு வகைகளுக்கும், தரமான சிற்றுண்டி வகைகளுக்கும், திறமான குளிர் பானங்களுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

# கமத்தொழிற் காப்புறுதித் திட்டம்

ஆ. செந்தில்வடிவேல் B. A. Hons. (Cey.)
(உதவி விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக் கழகம் யாழ் வளாகம்)

இலங்கையில் முன் எப்போதும் இல்லாதவாறு 1970-ம் ஆண்டின் பின்னர் விவசாயப் பொருளாதார விருத்தி குறித்து பல முன்னேற்றமான சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

குறிப்பாக:-

1. 1972-ம் ஆண்டின் 2-ம் இலக்க கமத் தொழில் வினைவுப்பெருக்கச்சட்டம்.
2. 1973-ம்ஆண்டின் 42-ம் இலக்க கமத் தொழிற் காணிச் சட்டம்.
3. 1972, 1975-ம் ஆண்டுக் கால நிலைச் சீர் திருத்தச் சட்டங்கள்.
4. 1973-ம் ஆண்டின் 27-ம் இலக்க கமத்தொழிற் காப்புறுதிச் சட்டம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

1973-ம் ஆண்டுக் கமத்தொழிற் காப்புறுதித் திட்டத்தை ஆராயுமுன் கமத்தொழிற் காப்புறுதித் திட்டம் என்றால் என்ன? இலங்கையில் இதன் ஆரம்பம் போன்றவற்றை முதலில் நோக்குதல் நன்று. நீர்ப்பற்றுக்குறை, வரட்சி, மிகையான நீர், வெள்ளப் பெருக்கு போன்ற இயற்கைக்காரணங்களாலும், வண்டுப் பீடைகள், காட்டுமிருகங்கள், பட்சிகள் போன்றவற்றாலும் நெல் வியாதிகளாலும் விவசாயச் சொத்துகளுக்கு அழிவு ஏற்படுகின்றன. இலங்கையின் மொத்த நெல் உற்பத்தியில் வருடாந்தம் 7 சதவீதமான பங்கு மேற் குறிக்கப்பட்ட காரணங்களால் அழிவடைகின்றன. இவ்வித அழிவிலிருந்து விவசாயிகளை மீட்டு அவர்களுக்குக் கிடைக்கும் வருவாயை ஊர்ஜிதமாக்கி விவசாயிகளது பொருளாதார நிலையை வலுவடையச் செய்து அவர்களது நாணயத் தகமையையும் அதிகரித்து ஆகக் குறைந்த அளவிலாவது கடன் முகவர்களது ஈடுபாட்டிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கும் திட்டமாகவே கமத்தொழில் காப்புறுதித் திட்டம் அமைந்துள்ளது. தனிப்பட்ட ஒருவர் குறிக்கப்பட்ட ஒரு சிறுதொகைப் பணத்தை அங்கத்துவப்பணமாகச் செலுத்தி அதன் மூலம் தன்னைக் காப்புறுதித் திட்டத்தில் அங்கத்தவராக்கிக் கொண்டு தமக்கு ஏற்படுவதும், தன்னால் தவிர்த்துக் கொள்ள முடியாததுமான இழப்புகளுக்கு நட்டஈடு கோரிப் பெற்றுக் கொள்ளக் கூடிய அமைப்பே கமத்தொழில் காப்புறுதித் திட்டமாகும். சிறந்த காப்புறுதித் திட்டமொன்றில் நிதி தன்னிறைவு பெற்றிருத்தல் வேண்டும். அல்பிரட் மேன்ஸ் என்பவரின் கருத்துப்படி 'எந்தத் தனிநபர் ஒருவருக்காவது ஏற்பட்டுள்ள இழப்பினை நிவிர்த்தி செய்யப் போதுமான பொது நிதி ஒன்றிற்கு பெரும்பாலான தனிநபர்கள் ஒவ்வொருவராலும் செலுத்தப்படும் கட்டுப் பணங்களின் கூட்டுச் சேர்ப்பிலே காப்புறுதியின் முக்கியத்துவம் தங்கியுள்ளது.

இலங்கையின் 1958/59-ல் 5 மாவட்டங்களில் 28 ஆயிரம் ஏக்கர் நிலங்களை அடக்குவதாக காப்புறுதித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கமத்தொழிற் சேவைத் திணைக்களத்தினால் இயக்கப்பட்ட இத்திட்டத்திற்கு 1961-ம் ஆண்டு பயிர் காப்புறுதிச் சட்டத்தினால் சட்ட அந்தஸ்த்து வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி இடர் கூடிய இடத்துக்கும் இடர் குறைந்த இடத்திற்கும் கட்டுப்பணமும் நஷ்டஈடும் ஒரே சமமாய் இருந்ததின் நிமித்தம் இடர் குறைந்த இடங்களில் இருந்தோர் இத்திட்டத்தை விரும்பவில்லை இது தன்னிச்சையான திட்டமாகவே இருந்ததால் பலர் தாமாகவே முன்வந்து இதில் சேர்ந்து கொள்ளவில்லை. மேலும் 1958 முதல் 1973 வரையான காலப்பகுதியில் அங்கத்தவர்களிடம் அறவிட்ட கட்டுப்பணமும் 64 லட்சம் ரூபாவாக அமைய அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்ட நட்டஈட்டுப் பணமானது 1 கோடியே 59 லட்சம் ரூபாவாக இருந்தது. இத்தகைய காரணங்களினாலே 1958-ம் ஆண்டுத் திட்டம் கைவிடப்பட்டு 1973-ம் ஆண்டு யூலை மாதம் இலங்கையில் 1973-ம் ஆண்டின் 27-ம்இலக்க கமத்தொழில் காப்புறுதிச்சட்டம் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு;-

1. கமத்தொழில் காப்புறுதிச் சபையை ஸ்தாபித்தல் இச்சபையே இத்திட்டத்திற்கு பொறுப்பாக இருந்து வருகின்றது. 1974 ஏப்ரல் மாதத்தில் இச்சபை ஸ்தாபிக்கப்பட்டு இயங்கி வருகின்றது.
2. கட்டாய காப்புறுதி:- இலங்கையின் நெற்பயிர்கள் யாவும் கட்டாயமாக காப்புறுதி செய்யப்படுதல் வேண்டும். 1975 மார்ச் மாதத்தில் இருந்து நெற்பயிர்கள் கட்டாயமாக காப்புறுதி செய்யப்பட்டு வருகின்றது.

ஜப்பான் சுவீடன் போன்ற நாடுகளிலும் கட்டாயக் காப்புறுதி செய்யப்பட்டு வரு

கின்றது இத்திட்டத்திற்கு முன்னர் தன்னிச்சையான திட்டம் இருந்தபடியால் அதிகமான விவசாயிகள் தாங்களாக முன்வந்து காப்புறுதித் திட்டத்தில் சேர விரும்பவில்லை. குறிப்பாக இடர் குறைந்த பிரதேச மக்கள் காப்புறுதித் திட்டம் ஒரு பெரும் சுமையென இதனை ஒதுக்கிவந்தன.

3. தன்னிச்சையான காப்புறுதி:- உத்தரவாத விலை வழங்கப்படும் பயிர்கள் கால்நடைகள் உப உணவுப் பயிர்கள் மரபு ரீதியற்ற ஏற்றுமதிப் பயிர்கள் ஆகியனவற்றுக்குத் தன்னிச்சையான காப்புறுதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளது விருப்பத்தின் பேரில் காப்புறுதி செய்யப்படும் முறையே தன்னிச்சையான திட்டமாகும்.

4. கட்டாய நெற்காப்புறுதித் திட்டம் மாறுதலடையும் கட்டுப்பண விகிதங்களுடன் மாறுதலடையும் நஷ்டஈட்டு அடக்குதல்களையும் கொண்டுள்ளது. பயிரி ஏற்படக்கூடிய இழப்புகள், விளைவு என்பவற்றை ஒட்டி ஒவ்வொரு பகுதியிலும் காப்புறுதிக் கட்டணம் வேறுபடுகின்றன. பொதுவாக ஒரு ஏக்கர் நெற்காணிக்கான காப்புறுதிக் கட்டணம் 3 ரூபா முதல் 30 ரூபா வரை வேறுபடும். நெற்காணி அமைந்துள்ள பிரதேசத்துப் பயிர்ச் செய்கைக் குழுவின் பிரதிநிதியிடம் கட்டுப்பணத்தைச் செலுத்துதல் வேண்டும். செலுத்தப்படும் பணத்திற்காக காப்புறுதிச் சபையால் வழங்கப்படும் பற்றுச்சீட்டு நஷ்ட ஈட்டைப் பெற்றுக் கொள்வதற்கு உதவியாக இருக்கும் நிலச் சொந்தக்காரரே பயிர் செய்கை நடவடிக்கையில் ஈடுபடும் போதும் அவரே 100% கட்டுப் பணத்தையும் செலுத்துதல் வேண்டும். ஆனுல் குத்தகைப் பயிர்ச் செய்கை முறையில் ஈடுபடும் ஒருவர் கட்டுப் பணத்தில் 75% தையும் எஞ்சிய 25% தை காணிச் சொந்தக்காரருக்கும் செலுத்துதல் வேண்டும். பயிர் இழப்பிற்கு எதிராக காப்புறுதிச் சபையால் வழங்கப்படும் நஷ்டஈடுகள் ஏக்கரொன்றுக்கு ரூபா 300 முதல் ரூபா 500 வரை வேறுபடும் இத்தொகை முக்கிய திட்டத்தின் கீழ் ஏக்கரொன்றிற்கு ரூபா 100 முதல் ரூபா 150 வரையில் வேறுபட்டிருந்த தொகையைவிட அதிகமாகும். இது உள்ளீட்டுச் செலவுகளினதும் உற்பத்திப் பெறுமதியிலும் ஏற்பட்ட அதிகரிப்பை விளக்குகின்றது.

5. காப்புறுதிக் கட்டணம் செலுத்தத் தவறியவர்கள் நஷ்டஈட்டுப் பணத்தைப் பெறுவதற்கு உருத்து உடையவர் அல்லர். ஆனுல் அவர் காப்புறுதித் திட்டத்திற்குச் செலுத்த வேண்டிய பணத்தைப் பெற அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கலாம்.

6. விதைத்த அன்று முதல் நெல் அறுவடையாகும் வரை ஏற்படும் இழப்புகளுக்கு நஷ்டஈடுகள் வழங்கப்படும். ஒரு விவசாயி தமது பயிருக்கு இழப்பேதும் ஏற்படின் அச்சேதம் ஏற்பட்டு ஏழு நாட்களுக்குள் பயிர்ச் செய்கைக் குழுவுக்குப் போய் இழப்பு ஏற்பட்ட காணியின் விபரம், இழப்பு நிலை போன்றவைகளை தெரியப்படுத்துதல் வேண்டும்;

7. கமத்தொழில் காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் செலவைக் குறைக்கும் நோக்கத்துடனும், மக்களின் இயக்கமாக நடத்தும் நோக்குடனும் இத்திட்டம் 5000 பயிர்ச் செய்கைக் குழுக்களைக் கொண்ட 480 விளைவுப் பெருக்கக் குழுக்கள் மூலம் அமுல் நடத்தப்பட்டு வருகின்றது;

தற்போதய கமத்தொழில் காப்புறுதித் திட்டம் ஒரு கட்டாய திட்டமாக இருக்கின்றபடியால் பயிரிழப்பு அதனுல் ஏற்படும் நிதி இழப்பு என்ற காரணிகளால் பயமடையாது உற்பத்தியை அதிகரிப்பதற்காகப் பெருமளவு முதலீட்டை மேற்கொள்ள விவசாயிகளுக்குப் பாதுகாப்பை வழங்குகின்றது. சில சமயங்களில் பயிரிழப்பு ஏற்படலாம் என்ற காரணத்திற்காக பெருமளவு நெற்காணிகள் பயிர் செய்யப்படாது அல்லது இருபோகம் பயிர் செய்யக்கூடிய நிலையில் இருந்தும் ஒரு போகப் பயிர் செய்யப்பட்டு வருதல் போன்ற நிலைகளை மாற்றி விரிவான முறையில் விவசாய உற்பத்தியை மேற்கொள்ளுவதற்கு பயிர்க் காப்புறுதி திட்டம் உதவியளிக்கின்றது. காப்புறுதித் திட்டம் சட்டரீதியாக கட்டாயமாக்கப்படாது இருந்தால் இதில் இடர் கூடிய விவசாயிகளே பங்குபற்றுவர். இதனுல் காப்புறுதிச் சபைக்கு கிடைக்கும் கட்டுப் பணத்திலும் பார்க்க அவர்களுக்குச் செலுத்த வேண்டிய நஷ்டஈடு அதிகமாக இருக்கும். இக்காரணங் கருதியும் இலங்கையின் உணவுத் தேவைப் பூர்த்திக்கு விரிவான பயிர்ச் செய்கை அவசியமென்று கருத்து உணரப்பட்டதாலுமே பயிர்க் காப்புறுதி தன்னிச்சை நிலையிலிருந்து கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

1974/75 ன் பெரும்போக காலத்தில் இருந்து நாடெங்கிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பயிர் காப்புறுதித் திட்டமானது வரட்சியின் காரணமாகப் பின் போடப்பட்டு 1975 சிறுபோகத்தில் இருந்து நடைமுறைப் படுத்தப் பட்டு வருகின்றது. 1975 சிறுபோக காலத்தில் 60,000 ஏக்கர்

களும் 1975/76 பெரும் போக காலத்தில் 1, 19, 000 ஏக்கர்களும் காப்புறுதி செய்யப்பட்டுள்ளன. 1975 சிறு போக காலத்தில் 7, 70, 000 ரூபா அங்கத்தவர் பணமாகச் சேர்க்கப்பட்ட நிலைக்குப் பதிலாக 12, 00, 000 ரூபா நஷ்ட ஈடாக வழங்கப்பட்டது. இங்கு அங்கத்துவ பணமாகச் சேர்க்கப்பட்டதிலும் பார்க்க நஷ்ட ஈடாக செலுத்தப்பட்ட பணத்தின் தொகை 4, 30, 000 ரூபா வால் அதிகமாக இருந்தது குறிப்பிடத் தக்கது.

விரிவான பயிர்ச் செய்கை முறையை ஏற்படுத்த விவசாயிகளைத் தொடர்ந்து உற்பத்தி முயற்சியில் ஈடுபடுத்த பயிர்க் காப்புறுதித் திட்டம் உதவுமென்றாலும் எவ்வித இடரும் ஏற்படாத பிரதேச விவசாயி ஒருவர் ஏன் தனது நெற் பயிரைக் காப்புறுதி செய்தல் வேண்டும். என்ற வினாவில் நியாயம் காணப்படுகின்றது.

கட்டாய காப்புறுதித் திட்டமானது சேதம் குறைந்த அல்லது சேதம் அற்ற நெற்காணியையுடைய ஒரு விவசாயிக்கு அதிக நன்மையை வழங்கமாட்டாது. என்பது உண்மைதான். இந்த நிலையில் கால நிலையால் மாத்திரமல்ல வண்டுப் பீடை நெல் வியாதி போன்றவற்றாலும் நெல் பாதிக்கப்படலாம் என அவருக்கு விளக்கம் கூறுவதுடன், சேதம் குறைந்த பிரதேச விவசாயி ஒரு ஏக்கருக்கு குறைந்த பணத்தை அங்கத்துவப் பணமாகச் செலுத்தலாம். என்பதனையும் குறிப்பிடலாம்.

நெற்காணிகள் சட்டரீதியாக கட்டாயமாக காப்புறுதி செய்யப்படுதல் வேண்டும் என்ற தனிப்பட்ட தன்மையில் மாத்திரம் கமத்தொழில் காப்புறுதித் திட்டத்தின் வெற்றி தங்கியிருக்குமெனக் கூறமுடியாது விவசாயக் கடன் வழங்கும் நிறுவனங்கள், உத்தரவாத விலைத்திட்டம், நெற்சந்தைப் படுத்தும் சபை, உரமானியத் திட்டம் போன்றவற்றுடன் இணைந்த வகையில் கமத்தொழில் காப்புறுதித் திட்டம் செயல்படும் போதேசிறந்த பலாபலன் கிடைக்கும்.

எமது கல்வி நிலையத்தில்
G. C. E A/L
(கலை வர்த்தகம்)
I. A. B,
ஆகிய வகுப்புக்களும் விசேட
ஆங்கில வகுப்புகளும்
நடைபெறுகின்றது

INSTITUTE OF
COMMERCIAL STUDIES
69, Sivan Pannai Rd,
JAFFNA.

நிர்வாகி
S. கந்தசாமி
(F. I. A. B)

With The Best
Compliment

ESTY
&
CO. LTD.

JAFFNA Phone: 367

# வரவேண்டும் அவன் வாழ்க்கையில் வசந்தம்

உரும்பை நவரத்தினம் N. C. B. S.
சந்தைப்படுத்தல் இறுதிவருடம்

வானத்தை எட்டி நிற்கும் கட்டிடங்கள் அவற்றின் உச்சியிலே புத்தம் புதிய முத்தம் கொடுத்துச் செல்கின்றன முகிற் கூட்டங்கள். கட்டிடங்களின் கூரையிலே இருந்து இனிய கீதம் இசைத்துக் கொண்டிருந்தன புருக் கூட்டங்கள். அந்த இனிய கீதம் ஜில் என்ற காற்றுடன் தளுவி எல்லோர் காதுகளிலும் மெல்லெனப் பட்டன. பல்கலைக் கழகம் செல்லச் சந்தர்ப்பம் கிட்டாதவர்களுக்கு இந் நிறுவனம் ஒரு வரப்பிரசாதம் தான். மாணவர்களுக்குத்தான் எத்தனை சௌகரியங்கள். கூவி ஓடி வரும் புகைவண்டி தானென்ன, குறித்த நேரம் தவறாமல் ஓடி வரும் பஸ்வண்டிதானென்ன, தினம் ஓடி வரும் துவிச்சக்கரவண்டி தானென்ன, தினம் நாடிவரும் தனியார் வாகனங்கள்தானென்ன எல்லாமே மாணவர்களைச் சுமந்து வந்து குவித்துக் கொண்டு இருந்தன.

கூடிப் பலபேராய் கும்மாளம் அடித்து வருவோரும், ஆடி அசைந்து வரும் சிங்காரப் பெண்களின் பின்னே ஏதாவது சொல்லித் தமக்குள் சிரித்து மகிழ்ந்து வருவோரும், சோடிசோடியாகச் சேர்ந்து சிரித்து வருவோரும் இவற்றைக் கண்டும் காணாதது போல் வருகின்ற ஆசிரியர்களும் உள்ளே சென்று கொண்டிருக்கின்றனர் இக் காட்சியைப் புளிய மரத்தின் கீழ் நின்று பார்ப்பதென்றால் ஒரு சிலருக்குத் தனி இன்பம்.

ஆனால்! இந் நிலையில் இருந்து மாறுபட்டுக் காணப்படுகின்றான் குமார். ஓர் வகுப்பறையில் தனிமையாக இருக்கின்றான். ஆம் அவனுடைய மனம் யாரையோ எதிர் பார்ப்பதைப்போல் தெரிகின்றது. இதற்கு ஆவலுடன் எதிர்பார்த்திருந்த விழிகள் இரண்டும் சாட்சி பகர்கின்றன.

குமார் ஓர் வசதியான குடும்பத்து வாலிபன். சிறு வயதில் இருந்தே படிப்பிலும் விளையாட்டிலும் கெட்டிக்காரனாய் இருந்தான். இருந்தாலும் அவன் பல்கலைக் கழகம் செல்லும் சந்தர்ப்பத்தை இழந்து விட்டான். இதற்குக் காரணம் அவன் விளையாட்டுக்கள் மீது கொண்டிருந்த தனி அக்கறை என்றே சொல்லலாம். இருந்தாலும் அவனுக்குப் பல் தொழில் நுட்ப நிறுவனத்தில் படிக்கும் சந்தர்ப்பம் கிட்டியது. இப்போது தேசிய தொழில் கற்கைகளிற்கான தராதரப்பத்திர நெறியின் ஆளணி நிர்வாகப் பிரிவில் இரண்டாம் வருடத்தில் இருக்கின்றான். அவன் முதலாம் வருட மாணவனாக இருக்கும் வேளையில் இப்பயிற்சி நெறியைக் கற்றுச் சித்தியடைய வேண்டும் என கனவில் கூட நினைத்ததில்லை. அவனது ஆசைகளும் கனவுகளும் சப்-இன்பெக்டர் பதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் மிகுந்தன. தனக்கு அந்த வேலை நிச்சயமாகக் கிடைக்குமென்பதை எல்லோருக்கும் பெருமையாகச் சொல்லிக் கொள்வான். இப்படி அவன் சொல்லிப் பெருமைப்படுவது ஒரு சில மாணவர்களுக்குப் பிடிப்பதில்லை. ஆனால் அப்பதவிக்காக எத்தனை பேருக்கு எத்தனை விதமான விருந்துகளை எந்தெந்த இடத்தில் வைத்தானோ யாருக்குத் தெரியும்.

சப்-இன்ஸ்பெக்டர் பதவிக்காக மூன்று நேர் முகப் பரீட்சைகளுக்குச் சென்று வந்து விட்டான். அதன் பின்பு அவனுக்குப் படிப்பில் சிறிதேனும் நாட்டமில்லை. ஆசிரியர்கள் கண்டித்தாலும் அதையிட்டு முகத்தில் வாட்டமில்லை. வீணாக நாட்களைக் கழித்துக் கொண்டிருப்பான். இவனுடைய இந்த விசித்திரமான போக்கு அவன் அண்ணன் செல்வத்துக் கூடப்பிடிக்கவில்லை. இதனால் குமாரை வெளிநாடு அனுப்ப முயற்சி எடுத்தான். ஆனால் அதைத் தட்டிக் கழித்து விட்டான். ''ஏன்'' என்று சிறிது அதட்டிக் கேட்டுவிட்டால் புறுபுறுத்துக் கொண்டு பின்பக்கக் கதவால் சென்று விடுவான். அவனது வீட்டுக்காரர் எவ்வளவோ சொல்லியும் வெளிநாடு செல்ல மறுத்துவிட்டான்.

குமார் மிக நல்லவன் பழக இனியவன் எவருடனும் பண்பாகவே கதைப்பான். இதனால் மாணவர்களிடையே நல்ல செல்வாக்கைப் பெற்றிருந்தான். அழ

கிய தோள்கள், துடிப்பான கதை கள் கட்டான உடல் பட்டான மேனி, அதற்கேற்ற உயரம் அழகுக்கே சிகரம், சிவந்த மேனி பலரையும் கவர்ந்த முகம் அத்தனையும் ஒருங்கே கொண்டவன் அவன் சப் - இன்ஸ்பெக்டருக்குப் பொருத்தமான வன்தான். அப்படிப்பட்ட அழகனை மாண விகள் எப்படி விட்டிருப்பார்கள். இதனால் தானோ என்னவோ வணிகமாணவ மன் றத் தேர்தலில் அதிகப்படியான வாக்குக ளால் வெற்றி பெற்றான். அவனோடு எதிர்த் துப் போட்டியிட்ட மாணவர்கள் தேர்த லுக்காக எவ்வளவு காசைச் செலவழித் தார்கள். ஆனால் அவன் தேர்தலுக்காக எதுவுமே செழிவழிக்கவில்லை. அது அவனு டைய தனிப்பெருஞ் செல்வாக்குத்தான். மாணவிகளுடன் கதைப்பது மற்ற மாண விகளுக்கு அதிகம் பிடிப்பதில்லை. தலைவன் என்ற முறையில் கதைக்கும் சந்தர்ப்பத்தை அவன் தவிர்க்கமுடியாததாகிவிட்டது. இதனால் அவன் இலட்சியப் பாதையில் பல இன்னல்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது.

மன்றத்தலைவராக வந்த பின்பு மாண வர்களின் நலனுக்காகவே பாடுபட்டான். மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்கள் உரிமைகளைப் பாதுகாத் தான். எப்படிப்பட்ட பிரச்சனை தலைதூக்கி னாலும் அதை சுமூகமான முறையில் தீர்த்து வைக்கும் வல்லமை மிக்கவன். மாணவர்களின் திறமைகளை வெளிக் கொணர்வதற்காக மன்றத்தின் சார்பில் பல போட்டிகள் நடாத்தினான். அவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கு தரமான பரிசு களும் வழங்கினான். அத்துடன் மன்றத்தின் சார்பில் ஓர் மலரையும் வெளியிட்டான். புதிய எழுத்தாளர்களுக்கு சந்தர்ப்பம் அளித்து அவர்களுடைய ஆக்கங்களையே மலரின் இதழ்களாக்கினான். இத்தோடு அவனது நோக்கங்கள் முடிந்துவிடவில்லை. இருந்தாலும் மலர் வெளியீட்டு விடயத் தால் சிறிது பெருமைப்பட்டான். ஏனென் றால் ஆறுவருட காலமாக வணிகமன்றம் சாதிக்காததோர் சாதனையல்லவா?

வருடாவருடம் கட்டும் சந்தாப்பணத்தை பல மாணவர்கள் கட்டவில்லை. இதனால் சேர்ந்த பணம் மிகக் குறைவு. அதைக் கொண்டு ஆண்டுவிழா, மலர் வெளியீடு என்றால் எப்படி முடிந்திருக்கும்? பாவம்! தாய் தந்தையிடம் பொய் சொல்லி நட் டம் போனதை ஈடு செய்திருப்பான். ஆனால் எத்தனைக்குத்தான் அவன் தனது சொந்தப் பணத்தைப் போட்டுக் கட்டு வது? வணிகமாணவர்கள் சுற்றுலாவிலும் கூட நட்டம்தான் ஏற்பட்டதாம். ஆனால் அதில் எத்தனைபேர் ஓசியில் வந்தார்க ளென்பதையும் அவன் அறியாமல் இல்லை. அதுமட்டுமல்ல அன்று எடுத்த புகைப் படங்களிலும்கூட தங்கள் திருமுகங்களைக் காட்டிக்கொண்டார்கள். ஆனால் அவற் றில் ஏற்பட்ட நட்டத்தை யாரறிவார். அதனால்தான் அதிஷ்டலாபச் சீட்டுக்கள் விற்று அந்நட்டத்தை ஈடு செய்தான்.

இப்படி மாணவர்கள் நலனில் அக்க றை காட்டி வந்தகுமார் ஏன் தனிமை யில் இருக்கவேண்டும்? அவன் தனது கடந் தகால சம்பவங்களை நினைந்து கலங்கு கிறானா, அன்றி தனது விதியை நினைத்து வருந்துகிறானோ? இல்லை — அவனுக்குத் தானே எதையும் தாங்கும் இதயம் உண்டு. இல்லையென்றால் தனக்கு நடந்த சம்பவங் களை தாங்கும் சக்தியை எங்கு பெற்றிருப் பான்.

அவனுக்கு பழைய ஞாபகங்கள் தலை தூக்குகின்றன. அவன் ஆசைப்பட்ட வேலைக்கு அழைப்பு வந்தது. அவனைவிட அவனது நண்பர்களுக்குத்தான் பெரும் சந்தோஷம். ஒரே கும்மாளம். அன்று அனை வரிடமும் விடைபெற்றுச் சென்றுவிட் டான்.

மறுநாட்காலையில் பயணப் பெட்டி யுடன் கோண்டாவில் புகையிரத நிலையத் துக்கு வந்தான். உடனே பிரயாணச் சீட் டையும் பெற்றுக் கொண்டு அங்கே இருந்த இருக்கையொன்றில் அமர்ந்தான்.

உத்தரதேவி வருவதற்கான மணி அடிக்கப்பட்டது. எல்லோரும் ஆரவாரப் பட்டுக் கொண்டு நின்றார்கள். மூலை இருக் கையைப் பிடித்தால்தான் இடைக்கிடை நித்திரையும் செய்து கொண்டு போகலா மென்று எண்ணி எழுந்தான். றெயில் வண்டி நிற்கு முன்பே தாவிப் பாய்ந்து நுழைய முற்பட்டான். அப்போது வேறு சிலரும் போட்டி போட்டுக்கொண்டு அவ் வழியே தாவிப் பாய்ந்தனர். அப்போது திடீரென ஏற்பட்ட நெரிசலினால் அவனது கால், நிதானமிழந்தன. ஒரு கையில் பெட்டி வைத்திருந்தமையால் நிலைமை யைச் சமாளிக்க முடியவில்லை; கீழே, விழுந்துவிட்டான்.

பாவம்! இயற்கையின் கோரப்பிடியில் சிக்கிவிட்டான். இருந்தாலும் கால தேவன் சிறிது இரக்கம் காட்டியது அவனது அதிஷ் டம்தான். அவன் தனது காலில் கீழ்ப்பா கத்தை மட்டும்தான் இழந்தான். அவன்

காலிலிருந்து சிந்திய இரத்தம் திறந்த பெட்டியுள்ளும் பாய்ந்தது. அங்கே அவன் ஆசையாக வாங்கி வைத்திருந்த பண்டங் களையும் நனைத்தது.

அந்த இனிப்பில் எத்தனை நினைவுகளை நினைத்து வந்திருப்பான். அன்று வெள்ளிக் கிழமையாதலால் தன்னுடன் படிக்கும் மாணவ மாணவிகளைச் சந்திக்கலாமென்ற நினைப்பு அவனுக்கு. நாவற்குழி, சாவகச் சேரி, மீசாலை, கொடிகாமம், மிருசுவில் போன்ற இடங்களில் இருப்பவர்கள் புகை வண்டியிற்தான் கொக்குவிலுக்கு வருவார் கள். எனவே அவர்களை வழியில் சந்திக் கும்போது கொடுப்பதற்காகத்தான் இனிப்பு வாங்கினான். ஆனால்! அவனது இரத்தத்தை குடித்து விட்டுக் கிடக்கின்ற அந்த இனிப்புக்கள் காக்கைகளுக்கும் நாய் களுக்கும் இரையாகுமென்று அவன் நினைக்க வேயில்லை.

அவன் ஆஸ்பத்திரியால் வர பல மாதங் களெடுத்தன. அந்த பயங்கர சம்பவம் அவனது நினைவில் அடிக்கடி வந்து துன் பத்தைக் கொடுக்கும். அவனது பண்பட்ட உள்ளம் புண்பட்டிருப்பதைக் கண்டு அவ னது குடும்பத்தினரும் பெருந் துன்பம் கொண்டனர். இருந்தாலும் அதை அவ னுக்குக் காட்டாமல் ஆறுதல் கூறித் தைரி யம் ஊட்டினர். அவனை ஊன்று கோலு டன் பார்ப்பதற்கு ஒருமாதிரி இருக்கும். தம் பிள்ளை உயிருடன் தம் கண் முன்னே இருப்பதே போதுமென்று ஓரளவில் திருப் தியும் கொண்டனர். இதனால் அவனுக்காக எதையும் செய்யத் சித்தம்கொண்டு அவனை இந்தியாவுக்கு அனுப்பி செயற்கைக்கால் போட்டு நடக்க வழி செய்தனர்.

இப்பொழுது அவன் அழகாக நடப் பான். மற்றவர்களுடன் நடந்து போகும் போது அவன் காலில் ஊனம் என்று யாருக்குமே தெரியாது. அதனால் சிறிது திருப்திப்பட்டான். அச்சம்பவத்தின்பின் அவன்மீது எல்லா மாணவரும் பாசத்தைப் பொழிந்து தள்ளினர். ஆஸ்பத்திரியிலும் அவனது வீட்டிலும் வைத்து பல முறை அவனது நண்பர்கள் ஆறுதல் கூறியதை அவன் மனம் மறக்கவில்லை. வணிக மன் றத்திலிருந்து அவனது நண்பர்கள் விலகச் சொன்னார்கள். அதை அவனால் மறுக்க முடியவில்லை. அது நியாயந்தான் அவன் பதவியில் இருக்கும்போதே செய்ய வேண்டியதை எல்லாம் செய்து கொடுத் தான். ஆனால் அவன் நெஞ்சில் ஒரே ஒரு குறை — அதுதான் பஸ்தரிப்பு நிலையம் கட்டுவது. இதற்கு முன் வந்த தலைவர் கள் பேச்சளவில்தான்: ஆனால் இவன் அவர் களிலிருந்து மாறுபட்டவன் என்பதற்கு ஆதாரம் செயலில்தான் காட்டுவதே.

பதவிக்கு வந்தநாள் தொடங்கி அதற் காகப் பாடுபட்டான். பஸ்தரிப்பு நிலையம் கட்டுவதற்கான அனுமதியும் பெற்றான்.- ஆனால் அதைக் கட்ட நிதி உதவி செய்ய யாரும் முன்வரவில்லை. ஆனால் அவனு மோ விடவில்லை. உண்ணாமல் உறங்காமல் அதற்காகவே அலைந்தான். அவனது வைர மான மன உறுதியைப் பாராட்டி மில்க் வைற் சோப் ஸ்தாபனத்தார் அந்த உத வியைச் செய்ய முன்வந்தனர்.

பஸ்தரிப்பு நிலையத்தூண்கள் நாட்டிய அன்று ஒரே மழை பொழிந்தது. நல்ல தைத் செய்தால் வானம் ஆனந்தக் கண் ணீர் வடிக்காதா? என்ன'. சீமாசில்க் நிறு வனத்தின் இளைஞர்கள் செய்த உதவி யையும் பொறுப்பதிகாரி சிவகுமார் பெருந் தன்மையுடன் ஆற்றிய சேவையையும் அவர் இடையிடையே விட்ட பகிடிகளை யும் அவன் நெஞ்சம் என்றும் மறக்காது, அன்றுதான் அவர்களுக்கு ஒரு உண்மை புரிந்தது. அதுதான் குமாரின் காலிழந்த விடயம். அவர்கள் அவனது சேவைக்கு மேலும் பாராட்டுத் தெரிவித்து உமது சேவை நாட்டிற்குந் தேவையென்று வாழ்த் துக்கள் கூறிச் சென்றனர்.

